www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 | யூலை 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 70

# பேச்சுவார்த்தையைத் தொடங்க மீண்டும் ஒரு யுத்தம் வேண்டுமா?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று இரண்டரை மாதங்கள் ஆகின்றன. பாராளு மன்றம் கூடிய ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் அசிங்கத்தனமாக நடந்து அடிபிடிப்பட்டதைத் தவிர வேறு உருப்படியான எதனையும் காண முடியவில்லை. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற வரையறைக்குள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட முடியாத சூழலில் அது தன் இயலாமையை இவ்வாறு தான் காடைத்தனமாகவும் கள்ளுக் கடை விவகாரமாகவும் வெளிப்படுத்தும் என்பதை மக்கள் கண்டுகொள்ள முடிகின்றது.

இன்று இரண்டு பிரச்சினைகள் மக்கள் முன் பூதாகரமாகி நிற் கின்றன. ஒன்று, நாளாந்தம் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவும் அதன் அன்றாடப் பாதிப்பும்; இரண்டாவது, ஓய்ந்த நிலையில் இருந்து வரும் யுத்தம் மீண்டும் வெடித்து விடுமோ என்ற பெரு அச்சமுமாகும். இவ்விரு பிரச்சினை களுக்கும் அரசாங்கத்திடம் ஒரு திடமான நிலைப்பாடோ தெளிவான முடிவுகளோ இல்லை என்பதை அதன் செயற்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் எழுபது வீத சம்பள உயர்வை வழங்குவோம் என்பது ஐ.ம.சு. முன்னணியின் தேர்தல் வாக்குறுதி யாகும். இதற்காக ஏற்கனவே வீதியில் இறங்கி பானை, சட்டி, தட்டு, அகப்பை கொண்டு சத்தம் எழுப்பி பெரும் ஆர்ப்பாட்டங்கள் செய்தவர்கள் ஜே.வி.பி.யினர். இன்று அவர்கள் அரசாங்கத்தின் பிரதான பங்காளி என்பதற்கும் மேலால் தாமே அரசாங்கம் அமைத்தவர்கள் என்றும் பீத்திக் கொள்கிறார்கள். அண்மையில் சுகாதாரத்துறை ஊழியர்கள் எண்பதினாயிரம் பேர் நாடு முழுவதிலும் வேலை நிறுத்தம் செய்து கொழும்பில் அணி திரண்டு தமது சம்பள முரண்பாட்டுக் கோரிக்கைக்காக குரல் எழுப்பினர். இவர்கள் கடந்த யூஎன்.பி. ஆட்சியிலும் இதே கோரிக்கைக்காக போராடி வந்தனர். அப்பொழுது சிகப்பு மஞ்சள் எழுத்துக்களில் கோரிக்கைகள் எழுதி சுகாதாரத் துறை ஊழியர்களுடன் நின்ற ஜே.வி.பி.யினர் அண்மைய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. ஏனெனில் அவர்கள் ஆளும் தரப்பிற்கு மாறிவிட்டமையே

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## மலையகத்தில் தொடரும் பிரஜாவுரிமைக் கெடுபிடி அதிகாரிகள் பேரினவாதம் தலைமைகள் மௌனம்

அண்மையில் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமை திருத்தச் சட்டத்தின் கீழ் ஒருவர் பிரஜாவுரிமை சான்றி தழை வைத்திருக்க வேண்டு மென்பது அவசியமில்லை. அச்சட்டத் தின் கீழ் அவர் இலங்கை பிரஜை ஆவதற்கு உரித்துடையவர் என்ற பிரகடனத்தை குடிவரவு குடியகல்வு ஆணையாளருக்கு அனுப்பி அவர் அதனை ஏற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டை வைத்திருந்தால் போதுமானது.

வாக்காளராக பதிவு செய்வதற்கு அந்த பற்றுச் சீட்டை காட்டினால் போதுமானது. ஆனால் அவ்வாறு பற்றுச் சீட்டை காட்டியவர்களை வாக்காளராக பதிவு செய்வதற்கு மலையகப் பகுதிகளில் பல கிராம சேவையாளர்கள் மறுப்பு தெரிவித் துள்ளனர். புதிய பிரஜா உரிமைச் சட்ட ஏற்பாடுகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டப்படவில்லை என்பதுடன் பேரினவாத நிலைப்பாட்டில் செயற் பட்டுவந்த அவர்களினால் அதிலிருந்து மீளமுடியாதிருக்கிறது.

பிரஜாவுரிமைச் சட்டத்திற்கான புதிய திருத்தச் சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமை சான்றிதழை பெற்றுக் கொள்ள விரும்பின் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திருத்தச் சட்டத்தின்படி பிரஜா உரிமைக்கான பிரகடனத்தை குடிவரவு குடியகல்வு ஆணை யாளருக்கு அனுப்பி அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச் சீட்டை வைத்திருப்பவர்கள் இலங் கைப் பிரஜைகளாவர். அவர்களிடம் நீதிமன்றத்தை தவிர வேறெந்த நிறுவனமோ ஆளோ பிரஜா உரிமை சான்றிதழை சமர்ப்பிக்கும்படி கேட்க முடியாது என்று சட்ட ஏற்பாடு இருக்கிறது.

எனவே இத்திருத்தச் சட்டம் பற்றி கிராம சேவையாளர்கள் உட்பட அனைத்து அரச அதிகாரிகளும் அறிவூட்டப்பட வேண்டும். அதற்கான வேலைகளை செய்யாமல் சில ''மலையகத் தலைவர்கள்'' சரி பிழைகள் பற்றி வழமை போல் பத்திரிகை அறிக்கைகளை விட்டு வருகின்றனர். பலர் மௌனமாக இருக்கின்றனர்.

இத்திருத்தச் சட்டம் பாராளுமன்றத் தில் நிறை வேற்றப்பட்ட பின்னர் தாங்கள் தான் அதனை ஆக்கிய தாகவும், நிறைவேற்றியதாகவும் ஊடகங்களில் அறிக்கைப் போர் புரிந்த பல மலையகத் தொழிற் சங்கவாதி கள் தற்போது மௌனமாக இருக்கின்றனர்.

இத்திருத்தச் சட்டத்தின்படி தற்போது இலங்கையில் நாடற்ற வர்கள் என்று யாரும் இருக்க முடியாது. ஆனால் அரச அதிகாரி கள் மலையகத்தமிழ் மக்களை தொடர்ந்து நாடற்றவர்களாகவே நடத்தி வருகின்றனர்.

எனவே சட்டங்களில் கூறப்பட்ட வற்றை நடைமுறைப்படுத்திக் கொள்ளவும் பல போராட்டங்களை செய்ய வேண்டி இருக்கிறது என்பதை மறந்து விடலாகாது.

## மலையக மக்களுக்கு!


★ மலையகம் புதிய அரசியல் பாதையில் எழுச்சி பெற்று வழிநடக்க
★ மலையகத்திற்கான புதிய அரசியல் தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப
★ மலையகத் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகளை வென்றெடுக்க

**மலையக மக்களே முன் வாருங்கள்!**
**இளைஞர் யுவதிகளே எழுச்சி பெறுங்கள்!!**

பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகள் இரண்டிற்கும் முட்டுக் கொடுக்கும் ஆதிக்கத் தலைமைகளைப் பற்றி சிந்தியுங்கள், நிராகரியுங்கள்!

★ மலையகத்தில் பேரினவாதத்தை எதிர்த்து
★ மேல் கொத்மலைத் திட்டத்தை நிராகரித்து
★ ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியைப் பாதுகாத்து
★ தொழிலாளர்களின் சம்பள உயர்வை வற்புறுத்தி
★ கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்த்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் பலத்தைக் கட்டியெழுப்பி முன் செல்ல மத்திய மாகாணசபை நுவரெலியா மாவட்டத்தில்போட்டியிடும் சுயேட்சைக் குழுவின் மெழுகுவர்த்தி சின்னத்திற்கு வாக்களியுங்கள்.

**தலைமை வேட்பாளர் சட்டத்தரணி**
**இ. தம்பையா**






# யாழ். பல்கலைக்கழக ஊழியர் போராட்டம்

## நிர்வாகத்தின் திமிர்த்தனமும் ஊழியர்களின் உறுதியும்

யாழ் பல்கலைக்கழக ஊழியர்கள் தமது நியாயமான கோரிக்கைகளை பல தடவைகள் முன்வைத்து வந்தனர். அவற்றுக்குரிய பதிலையோ அன்றி செயற்பாட்டையோ நடை முறைப்படுத்தாத உயர் மட்ட நிர்வாகம் உதாசீனமாகவும் திமிர்த் தனமாகவும் நடந்து வந்தது. இதனால் பல்கலைக்கழக ஊழியர் களுக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடு வதைத் தவிர வேறு வழிவகைகள் எதுவும் இருக்கவில்லை. யூன் 14ம் திகதியில் இருந்து அவர்கள் தமது கோரிக்கைகளுக்காக போராட்டத் தில் இறங்கினர். இதற்கு பல தரப்பில் இருந்தும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்தது. ஆனால் நிர்வாகம் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இணக்கம் காண்பதற்குப் பதிலாக பயமுறுத்தல் பழிவாங்கல் சீர் குலைவு போன்ற முயற்சிகளிலே இறங்கியது. ஆரம்பத்தில் இவற்றைச் செய்த போதிலும் ஊழியர்களின் ஒன்றுபட்ட தொடர்ச்சியான போராட்ட நிலைப் பாட்டினால் இறுதியில் பேச்சு வார்த்தைக்கு வரவேண்டியதாயிற்று இருப்பினும் திருப்தி தரக் கூடிய பதிலை அளிப்பதில் திமிர்த்தன நிர்வாகம் தயக்கம் காட்டியே வருகின்றது.

பல்கலைக்கழக சமூகம் என்று உயர் வாகவும் பெருமையாகவும் பேசப் படுவது எதனைக் குறிக்கிறது. துப்பரவுத் தொழிலாளர் முதல் துணை வேந்தர் வரை, மாணவர் களில் இருந்து பேராசிரியர்கள் ஈறாக, பெற்றோர் முதல் அயல் வாழும் மக்கள் வரை என்ற பரந்த தளமே பல்கலைக்கழ சமூகமாகும். இது யாருடைய தனிப்பட்ட சொத் தோ சுகம் அனுபவிக்கும் இடமோ அல்லது சுயநலன்களை ஈடேற்றிக் கொள்ளும் அதிகார பீடமும் அல்ல. சமூகத்திற்கான உயர் கல்வி வழங்கும் புனிதக் கடமைக்குரிய தளமேயாகும்.

இத்தகைய யாழ் பல்கலைக்கழகம் உயர் நிர்வாக பீடத்தில் உள்ள சிலரது விருப்பு வெறுப்புகளைக் கொண்டு இயங்குவதே விசனத்தை தருவதாகும். மேல் இருந்து வரும் உத்தரவு என்ற பெயரில் பல விடயங்கள் மாணவர்கள் ஆசிரியர் கள், ஊழியர்கள், நிர்வாகிகள் மீது திணிக்கப்படுகிறது. இதில் குறிப்பாக ஊழியர்களின் நலன்களும் உரிமை களும் மறுக்கப்படுகின்றன. இது வரை காலமும் இருந்து வந்த உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் நடைமுறைகளும் படிப்படியாகப் பின் பற்றப்படுகின்றன. இதன் விளை வானதே அண்மைய ஊழியர்களின் போராட்டமாகும்.

மாணவர்கள் கூட அடிக்கடி வகுப்பு பகிஷ்கரிப்புகளில் ஈடுபடவேண்டி ஏற்படுகிறது. உதாரணமாக கடந்த வருடத்தில் தமது பட்டப்படிப்பை முடித்து பரீட்சை எழுதிய மாணவர்களின் முடிவுகள் முன்நூறு பேருக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆங்கில பாடத்தில் முழு சித்தி பெறவில்லை என்ற காரணம் காட்டி தாமதிக்கப்பட்டது. அவ் ஆங்கில பாடத்திற்கான பரீட்சையை மீளவும் உரிய காலத்தில் வைத்து ஏற்கனவே அவர்களது பரீட்சை முடிவுகளை வெளியிட்டிருக்கலாம். ஆனால் நிர்வாகம் இருத்தடித்தது. அதனால் அண்மைய பட்டதாரிகளுக் கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதில் அம்மாணவர்கள் சிக்கல்களை எதிர் நோக்கினர். தமது பெறுபேறுகளைப் பெற அம் முந்நூறு மாணவர்களும் பல்கலைக் கழகப் படிகளில் தினம் தினம்

தொடர்ச்சி 12ம் பக்கம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வடபுலத்தில் தொழில் நியாயமன்று இல்லையே! ஏன்?

வடபுலத்தில் இல்லாதிருந்த- இயங்காது நின்ற அரசாங்க திணைக்களங்கள் யாவும் மீண்டும் செயலாற்ற ஆரம்பித்து விட்டன. யாழ் செயலகமும் ஏனையவை களும் முன்பு போன்று செயற்படு கின்றன. பொலீஸ் நிலையங்கள் முழுச் சிங்களத்திலும் கால் பங்கு தமிழுடன் நடைபெறுகின்றன. நீதிமன்றங்கள் சுறுசுறுப்பாகக் காணப்படுகின்றன. சிறைச்சாலை கூட நெருக்கடிகள் மத்தியில் நடாத்தப்படுகின்றது.

ஆனால் செயலாற்றி இல்லாது போன தொழில் நியாய மன்று என்பது மட்டும் இன்றுவரை மீளத் திறக்கப்படவில்லை. இது ஏன் என்பது தான் கேள்வியாக எழுந்து நிற்கிறது. தொழில் தருவோருக்கும் தொழில் பெறுவோருக்குமிடையி லான பிணக்கு ஏற்படும் போது ஒரு தொழிலாளி அல்லது ஊழியர் ஏன் ஒரு உத்தியோகத்தர் கூட நியாயம் கேட்டுச் செல்லக் கூடிய இடமாக தொழில் நியாயமன்றே இருந்து வருகிறது. இத்தகைய மன்று ஏற்கனவே வடபுலத்தில் இருந்து வந்தது. அதன் மூலம் தொழிலாளர் கள் ஊழியர்கள் நன்மையும் பயனும் அடைந்தனர். இன்று அந்த நிலை இல்லை.

அநீதியான முறையில் தமது தொழி லாளர்களில் இருந்து விரட்டப்படும் எந்த ஒரு நபரும் தொழில் நியாய மன்று மூலம் நியாயம் கேட்பதாயின் இன்று அநுராதபுரத்திற்கும் அல்லது கொழும்பிற்குமே சென்று வழக்குத் தொடுக்க முடியும். இவ்வாறு ஒரு தொழிலாளரினால் அல்லது ஊழியரினால் அநுராதபுரம் அல்லது கொழும்பு சென்று வழக்குத் தொடுத்து நியாயம் பெற முடியுமா? அதற்குரிய செலவு மிகப் பாரிய தாகும். போக்குவரத்தும் மொழிப் பிரச்சினையும் ஏனைய நடைமுறை களும் சிக்கலானவையாகவே இருந்து வருகின்றன. இதனால் பிச்சை வேண்டாம் நாயைப் பிடித்தால் போதும் என்ற நிலையில் பாதிக்கப் பட்டோர் இருந்து வருகின்றனர். அப்படி இருந்த போதிலும் ஒரு சில ஊழியர்கள் தமக்கு நியாயம் வேண்டி கொழும்பில் தொழில் பிணக்கு நீதிமன்றில் வழக்குத் தொடுத் துள்ளனர்.

எனவே வடபுலத்தில் தொழிலாளர் கள், ஊழியர்கள் என்போரது தொழில் இழப்பீட்டு உரிமைகளுக்கும் ஏனைய கோரிக்கைகளுக்கும் நீதி நியாயம் கேட்டுச் செல்வதற்குரிய தொழில் நியாயமன்றத்தை மீண்டும் கொண்டு வரல் வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

இதுபற்றி உரிய உயர் அதிகாரிகள் அக்கறையின்றி இருக்கிறார்கள். வடபுலத்தில் தொழில் திணைக் களமும் தூங்கி வழியும் நிலையில் காணப்படுகிறது. மீண்டும் தொழில் களில் ஈடுபட்டுவரும் தொழிலாளர் கள் ஊழியர்களின் உரிமைகள் நலன்களைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய தொழில் திணைக்களத்தை பாதிக் கப்படும் தொழிலாளர்கள் ஊழியர்கள் தேடியலைய வேண்டியே உள்ளது.

ஆதலால் வடபுலத்தில் தொழில் நியாயமன்று திறக்கப்படுவதும் தொழில் திணைக்களம் தொழி லாளர்கள் ஊழியர்கள் நலன்கள் உரிமைகள் பற்றி அக்கறையுடன் செயல்படுவதும் இன்றைய அவசியத் தேவையாகும்.

யாழ்ப்பாணம் - ச. அருட்பிரகாசம்

# ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு

மே மாதம் 28ம் திகதி பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள் கல்லூரியின் பிரச்சினை களை மேலும் பகிரங்கப்படுத்துவற் கான கவனயீர்ப்பு ஊர்வலமொன்றை அட்டனில் நடத்தினர். அதில் ஆசிரிய பயிலுநர்கள், பழைய ஆசிரியர் பயிலுநர்கள் அவர்களின் பெற்றோர் கள் பொதுமக்கள் என மூவாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

அவ்வூர்வலம் அட்டன் டன்பார் மைதானத்திலிருந்து அட்டன் பிரின்சஸ் சந்திக்கு வந்தடைந்த போது பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்தத துடன் அதனால் சிதறி ஓடியவர் களை துரத்திச் சென்று கண்டபடி தாக்கினர்.

இதில் பலர் காயமடைந்தனர். பத்துப் பேர் கடுமையான காயங்களுடன் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி தலைவர்கள் அக்கல்லூரியின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலையில் இருப்பதால் அவ்வூர்வலத்தில் அக்கறை செலுத்த வில்லை. மலையக மக்கள் முன்னணி பொலிசாரின் தாக்கு தலை கண்டித்திருந்த போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமை அவ்வூர்வலத்தை தேவை யற்றதென விமர்சித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களும் அடக்கியே வாசித்தனர். ஏனெனில் மலையகச் செய்திகள் என்பது அவற்றின் பார்வையில் அறிக் கைகளே ஆகும்.

இத்தாக்குதலை கண்டித்துப் பிரச் சினைகளை தீர்க்கும்படியும் புதிய ஜனநாயக கட்சி ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்த துடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பா டொன்றையும் செய்தது. அந்த ஊர்வலம் பற்றி தொழிற் சங்கத் தலைவர்களும் பாராளுமன்ற வாதி களும் கவனஞ் செலுத்தவில்லை. புதிய ஜனநாயக கட்சியும், சில ஆசிரியர் அமைப்புகளும் பல வெகுஜன அமைப்புகளும் அக்கறை யுடன் செயற்பட்டுவருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் விழிப்புடனும் அக்கறையுடனும் இருக்கின்றனர்.

மலையகத்தின் அரசியல் தொழிற் சங்க தலைமைத்துவ ஆதிக்கம் தங்களது கைகளிலேயே இருப்பதாக மார்தட்டி வரும் இ.தொ.கா., ம.ம.மு. ஆகியன ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிப் பிரச்சினையில் பாராமுக மாகவும் பாரபட்சமாகவும் நடந்து கொள்வதையிட்டு மலையக மக்கள் அதிருப்தி தெரிவித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

- புதிய பூமி நிருபர் -

# வவுனியா குள நிலங்கள் பறிபோகின்றன

இன்று வவுனியா சனப் புழக்கமும் போக்குவரத்து நெரிசலும் மிக்க நகரமாக மாறிவிட்டது. புலிகள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங் களை தொடுக்கின்ற ஒரு நகரமாக இருப்பதால் யாழ்ப்பாண, வன்னிப் பகுதி மக்கள் விரும்பிக் குடியேறு கிறார்கள். இதன் காரணமாக சனத் தொகையின் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுவிட்டது. 1990இன் பின்னான காலத்தை குறிப்பாக போர் நிறுத்தம் ஏற்பட்ட கடந்த இரண்டு வருடங்களை குடியேற்ற காலப்பகுதியாக கண்டு கொள்ளலாம்.

வவுனியாவில் குடியேறிய மக்களில் பலவகைப்பட்டோர் அடங்கு கின்றனர். அகதிகளாக இந்தியா சென்று வந்தோர், யாழ்ப்பாணத்தில் தொழில் செய்வதில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக தொழிலுக் காக குடியேறியோர், வெளிநாட்டுப் பணத்தினை பயன்படுத்தி காணி வீடுவாங்கியோர் எனப் பலவகை யினரும் அடங்குகின்றனர். இவர் களது குடியேற்றம் அரச கட்டுப் பாட்டுப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் நடைபெறாது நகரப் பகுதிகளிலும் புறநகர்ப் பகுதிகளிலும் அதிகம் நடைபெற்றது.

இச் சூழலில் எழுந்த பிரச்சினை தான் நகர்ப்பகுதிக் குளநிலங்களில் குடியேறிய சட்டவிரோதமான குடி யேற்றம். இத்தகையோர் சாதாரண மானவர்களோ ஏழைகளோ அல்லர். அரசியல் பிரமுகர்களும் அவர்க ளுக்கு வேண்டியவர்களும் வசதி படைத்தவர்கள், அரச அதிகாரிகள் என்போராக உள்ளனர். இவர்கள் குளத்தின் மேடான அலை கரைப் பகுதியை தாங்கள் எடுத்துக் கொண்டு தமக்குத் துணையாக பள்ளமான பகுதிகளில் வசதி குறைந் தவர்களை அனுமதித்துள்ளனர். குளம் நிரம்பும் போது வீடுகளுக்குள் நீர் புகுவதும் அவற்றை வெளியேற்ற குளக்கட்டை பெயர்ப்பது வரையி லான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன. இதற்கு சிறந்த உதாரண மாக பண்டாரி குளம், வைரவப் புளியங்குளம் சான்றாகும்.

இதுமாத்திரமல்ல மாகாணசபை நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ளதும் - வவுனியா நகரின் மத்தியில் இருப்பதுமான சுமார் 2000 ஏக்கர் விஸ்தீரணமான வவுனியாக் குளத்தின் அலைகரைகளும் குடியேற்றத்துக்கு உட்படுகின்றது. அது பாத்திரமல்ல கொரவைப் பொத்தான வீதி அருகிலே குளத்தை நிரப்பி தனியார் ஆதனத்துக்கு வீதி போடுவதை அனுமதித்துள்ளார்கள். கோயிற் புதுக்குளத்தின் அணைக் கட்டும் சில பகுதியும் மீதியாக இருக்க குளம் காணாமல் போய் விட்டது.

அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சி யின்மையும் குளங்கள் கைப்பற்றப்படு வதற்கு காரணமாக அமைந்து விடுகிறது.

குள நிலங்களில் குடியேறுவதால் நீர்வழிந்தோடும் வடிகாலமைப்பும் பாதிக்கப்படுகின்றது. தண்ணீர் சேமிப்பு குறைவடைகிறது. வவுனி யாக நீருக்காக குளங்களை நம்பியே இருக்கின்றது. குளங்கள் நிரப்பப்படு வதும், நீர் வருவது தடுக்கப்படுவதும் நிகழ்வதனால் வவுனியாவுக்கு எதிர்காலத்தில் மேலும் நீர்த்தட்டுப் பாடு ஏற்படுவது உறுதியாக்கப்பட்டு வருகிறது.

நீரின்மையால் குடிபெயரப் போகி றோமா அல்லது விழிப்புணர்வுடன் செயற்பட்டு மாற்று வழி தேடப் போகிறோமா என்பது எம்மத்தியி லுள்ள கேள்வி. இவ்வாறான குளக்காணிகளில் சுமார் 8000 பேர் குடியிருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வுகண்டு வவுனியா மக்கள் வாழக் கூடிய நகரமாக மாற்ற உரிய அதி காரிகள் கவனமெடுக்க வேண்டும். அதனைவிடுத்து அரசாங்க உயர் அதிகாரிகளும் அரசியல் செல்வாக்கு மிக்கோரும் வசதிபடைத்தவர்களும் குளக்காணிகள் விடயத்தில் தத்தமது சுய நலன்களை முதன்மைப் படுத்தினால் இறுதியில் வவுனியா நகர் புறநகர்ப் பகுதி மக்கள் மோசமாகப் பாதிக்கப்படவே செய்வர். இது பற்றி மக்கள் விழிப்படைய வேண்டும்.

வவுனியா - மு. சிதம்பரநாதன் -

# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## பொறுப்பான ஒரு விமர்சனக் குரல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலை ஒலிபரப்பைக் கேட்பதை "விடியும் வேளை" தொடங்கி ஐந்து நிமிடங்களுள் நிறுத்தி விடுவேன். அதைவிட அலுப்புத்தட்டும் ஒரு நிகழ்ச்சியைக் கேட்பது அரிதாகியுள்ள போது, ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஒரு நாள் முன்னாள் ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீதின் குரல் கேட்டது. தொடர்ந்தும் நிகழ்ச்சியைக் கேட்டேன்.

இன்றைய ஒலிபரப்பாளர்களின் அசட்டையான மனோபாவம் பற்றித் தனது விமர்சனங்களை மிகவும் பொறுமையாக, நிதானமாக அவர் முன்வைத்தார். தமிழைச் சரியாக உச்சரியாமலிருப்பது, வாக்கியங்களைத் தெளிவாகப் பேச இயலாமை, அயற்பேர்களைத் தப்பும் தவறுமாக உச்சரிப்பது, விஷய ஞானம் இல்லாமை போன்ற பல விடயங்கள் பற்றியும் அவர் பேசிய போது எங்களிற் பலர் மனதிலும் உள்ளதை அவர் சொல்வது போல இருந்தது. அவரது அன்றைய நேர்காணல் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தால் நமது தமிழ் அறிவிப்பாளர்கள் அனைவரையும் ஒரு அறையில் கூட்டி அதை அவர்கட்காக மீள ஒலிபரப்புவது ஒரு வேளை பயனுள்ளதாயிருக்கும். அல்லது, ஒரு சினிமா நடிகையின் வரவை அறிவிப்பதற்கும் ஒரு சாவை அறிவிப்பதற்குமிடையே வேறுபாடு தெரியாமல் உள்ள நமது புதிய தலைமுறை அறிவிப்பாளர்களின் கேளாக் காதில் ஊதிய சங்கு மாதிரியும் போகலாம்.

## மெல்லத் தமிழினி ..........

இந்திய அரசு, சமஸ்கிருதத்தை மட்டுமே இதுவரை 'காவியமொழி' ("தொன்மையான செம்மொழி") என அங்கீகரித்து வந்தது. இப்போது தமிழுக்கும் அந்த மரியாதை கிட்டியுள்ளது. இது பற்றிப் பலர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதில் முக்கியமாக வரவேற்கத்தக்க விடயம் ஏதெனில் தமிழும் பிற இந்திய மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியனவே என்ற மாயையை இந்திய அரசு வெளிவெளியாக மறுத்துள்ளது என்பதாகும்.

சமஸ்கிருதம் பற்றிய மாயைகள் பல இன்னும் உடைக்கப்பட வேண்டியுள்ளன. அவை பார்ப்பனிய மேலாதிக்கத்தை முறியடியாமல் இயலுமானவையல்ல. அது போக தமிழைச் சமஸ்கிருதத்துக்கு அருகருகாக வைப்பதில் ஒரு சிறு கவலையும் உள்ளது.

இன்று தாய் மொழியிற் கருமமாற்றுவதிலும் கல்வி புகட்டுவதிலும் மிகவும் பின்னிலையிலுள்ள மாநிலம் தமிழகமாகும். வேறெந்த மாநிலத்தையும் விட அதிகளவில் ஆங்கில மோகம் தமிழகத்தில் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்க விடயமாகும். எனவே தமிழை ஒரு வாழும், மக்கள் மொழியாக வளர்த்தெடுப்பது பற்றிய உண்மையான கவனத்தின் இடத்தில், இணையத்தளத்தில் தமிழ் என்பன போன்ற சடங்குகளே மிகுதியாக உள்ளன. இந்த வேகத்தில் சமஸ்கிருதம் போல தமிழும் விரைவில் ஒரு "இறந்த மொழி" ஆகுவதற்குக் கட்டியங் கூறும் விதமாகத் தான் தமிழுக்கு இந்தத் தகுதி வழங்கப்பட்டுள்ளதோ தெரியவில்லை.!

## பீஷ்மரா, திருதராட்டிரனா?

பீஷ்மர் என்ற புனை பேரில் சிலகாலமாக வாராவாரம் தினக்குரலில் எழுதுகிற ஒருவர், அவிழ்ந்து விழும் தனது பழைய இடதுசாரி அடையாளத்தை ஒற்றைக் கையால் பிடித்துக் கொண்டு, மறு கையால் தமிழ்த் தேசியக் கூட்டணிப் பாணியில் எழுதி வருகிறார் போலத் தெரிகிறது.

யார் காதில் பூச்சுற்றுவதற்கு முயலுகிறாரோ தெரியவில்லை என்றாலும் அவரது முயற்சிகள் சிரிப்பை வரவழைக்கத் தவறவில்லை.

கடைசியாக அவர் செய்துள்ள பூத்திரிப்பு முயற்சியில் இந்தியாவின் புதிய காங்கிரஸ் ஆட்சி இந்திரா காந்தி ஆட்சியைப் போல இலங்கைத் தமிழர் நலனை முன்னிறுத்திச் செயற்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதற்குச் சாட்சியாகத் தமிழகத்துத் திரிபுவாதி ஒருவரையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திரா காந்தி இலங்கைத் தமிழர் மீது எதற்காக 'அனுதாபம்' காட்டினார் என்று இன்னமும் தெரியாத ஒருவரா இந்த பீஷ்மர் ? இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களைத் துரிதமாக முன்னெடுத்த இந்திரா காந்தியை மட்டுமல்லாமல் இந்திய அரசயந்திரம் என்பது என்ன என்பதையும் அறியாத இவர் தனது மூத்த வயது காரணமாகத் தன்னை ஒரு பிதாமகராகப் பாவனை செய்து தன்னை 'பீஷ்மர்' என்று அழைக்கிறாரா தெரியவில்லை. ஆனால் உண்மைகளைக் காண்பதற்குப் பிடிவாதமாகவே மறுக்கிற இவருக்குத், திருதராட்டிரன் என்ற பேர் கூடப் பொருந்துமல்லவா! பீஷ்மரோ, திருதராட்டினரோ - இருவருமே துரியோதனாதிகளின் தரப்பில் இறுதிவரை நின்றவர்கள் தானே!

## தொண்டா தன் பெருமை சொல்லவும் அரிதே!

ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்தில் சேருவாரா இல்லையா என்பது சின்னத்திரையில் வருகிற தொடர் நாடகங்கள் போல இழுபட்டுக் கொண்டே போகிறது.

ஒன்று மட்டும் நிச்சயம். அவர் சேருவதோ சேராமல் விடுவதோ அவர் கேட்கிற எண்ணிக்கையில் அமைச்சர் பதவிகள் கிடைக்குமா கிடையாதா என்பதில் மட்டுமே தங்கியுள்ளது.

"வஹிச்ச பத்தட்ட கொய்யா" என்று சிங்களத்தில் ஒரு பழமொழி. அதாவது "கமக்காரன்" மழைபெய்கிற பக்கம் தான் நிற்பான்".

நம்முடைய தோட்டத் துரையும் அந்த மாதிரித்தான். காசுமழை பொழிகிற பக்கத்தில் தான் நிற்பார். மந்திரிப்பதவி வேறெதற்காக ? இது தான் தாத்தா காலத்திலிருந்து நடந்து வருகிறது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



## மாகாணசபைத் தேர்தலில் பம்மாத்து அரசியல்
# தமிழர் கூட்டமைப்பின் இரட்டை வேடம்

இப்பொழுது மாகாணசபைத் தேர்தல் காலம். பாராளுமன்ற அரசியலில் தேர்தல் என்பது வந்தால் பலரது பம்மாத்துக்கள் குத்துக்கரணங்கள் ஏமாற்றுக்கள் பணவாரி இறைப்புகள் போன்றவற்றைக் கண்குளிரக் கண்டு கொள்ள முடியும். இதில் ஒன்றாக மேல் மாகாண சபையிலும் மத்திய மாகாண சபையிலும் போட்டியிடும் மேல் மாகாண மக்கள் முன்னணி மலையக மக்கள் முன்னணி. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளின் பம்மாத்து நிலைப்பாடுகளைக் கண்டு ரசிக்கக் கூடியதாக உள்ளது. இந்த மூன்று கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மூன்று பெண்டாட்டி களாகவே இருந்து வருகின்றன. ஆனால் தேவையான போது தாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இல்லை என்பது போலவும் சில வேளை அக்கட்சியை பேரின வாதக் கட்சி என திட்டிக் கொள்வது போலவும் நடந்து கொள்வார்கள் இந்த மூன்று பேரில் இளைய பெண்டாட்டியான மேல் மாகாண முன்னணி மகாணசபைத் தேர்தலில் பத்தினி வேஷம் போட்டு தாங்கள் பேரினவாதக் கட்சிகளை எதிர்ப்ப தாகக் கூறித் தமது தனிச் சின்ன மான ஏணியில் மேல் மாகாணத்தில் நிற்பதாகக் கூறி நிற்கிறது. அதற்குத் தலைமை தாங்க தாடிக் கலாநிதி குமரகுருபரன் என்ற தமிழ்க் காங்கிரஸ் பிரமுகரை விட்டும் உள்ளது. அவரும் மேல் மாகாணத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மனோ கணேசனும் அண்மையிலும் அதற்கு முன்பும் கிளிநொச்சிக்குச் சென்று புலிகள் இயக்கத் தலைமையைச் சந்தித்த படங்களையும் செய்திகளையும் பரப்பினர். அதன் அடி நோக்கம் கொழும்பில் வடபுலத்து வாக்குகளையும் மலையகத் தொடர்புடைய வாக்குகளையும் ஒரே நேரத்தில் அள்ளிக் கொள்ள முடியும் என்ற குறிக்கோளாகும். மனோ கணேசன் தலைமையிலான மேல் மாகாண முன்னணியின் பிர தான முழக்கம் பாராளுமன்றத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைக்கு தனித்து நிற்பது என்ப தாகும். அது மட்டுமன்றி தேவை யைப் பொறுத்து பேரினவாதத்தை எதிர்த்து தமிழர் தனித்துவம் தமிழ் தேசியமும் பேசிக் கொள்வார்கள்.

இதேவேளை மலையக மக்கள் முன்னணியும் பெ. சந்திரசேகரனும் நடத்தும் திருவிளையாடல்களும் தெருக் கூத்துக்களும் அடிவயிற்றிலிருந்து சிரிப்பை வரவழைக்கின்றது. அவர் அடிக்கடி கிளிநொச்சி சென்று வந்த படங்கள், தமிழ் நாட்டிற்கு சென்று வந்த படங்கள், ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வந்த படங்களுடன் அசல் போஸ் கொடுத்து ஏதோ ஏதோ எல்லாம் பேசி அறிக்கைகள் கொடுப்பார். பாராளுமன்ற அரசியலில் அரசியல் அறியாமையை நன்கு பயன் படுத்துவதில் அவர் இன்று வல்லமை பெற்ற தலைவராகிவிட்டார். இத்தகையவர் மாகாண சபையில் தனது மண்வெட்டியில் நிற்கிறார். கொழும்பில் யான்னையில் நிற்கிறார். அதே வேளை பேரினவாதம் பற்றியும் பேசிக் கொள்வார்.

இதில் வேடிக்கை வேறொன்று இருக்கிறது. தமிழர் கூட்டமைப்பு இரண்டு பேரினவாதக் கட்சிகளும் இல்லாதவர்களுக்கே தமது ஆதரவு என்று பிரகடனம் செய்துள்ளது. அதற்கான பொன் மொழி வசனங்களையும் உதிர்த்து வருகின்றனர். அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆசை நாயகிகளான மனோகணேசனையும் பெ.சந்திரசேகரனையும் ஒரே நேரத்தில் தமிழர் கூட்டமைப்பினர் ஆதரிக்கின்ற நிலையைக் காண முடிகின்றது. தமிழர் தேசியத்திற்காக நிற்கின் றோம் என்ற பிரகடனத்தைச் செய்து விட்டு எத்தகைய கடைப்புளி கடைகெட்டவற்றையும் செய்து கொள்ளலாம். அதற்கு அங்கீகாரம் எங்கு சென்றாலும் கிடைக்கும். இந்த நிலை இருக்கும் வரை தமிழர் அரசியல்ப் பரப்பு மக்களுக்கானதாக இருக்கவே மாட்டாது. மனோ கணேசன், சந்திரசேகரன், குமர குருபரன், யோகராஜன், தமிழர் கூட்டமைப்பினர் நடாத்தி வரும் அரசியல் பம்மாத்துக்களையும் ஏமாற்றுக்களையும் உற்று அவதானித்தால் அடுத்த ஐம்பது வருடத்தில் தானும் வடக்கு கிழக்கு மலையக மேல் மாகாணத் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா? என்றே கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. இவர்கள் எல்லோரும் மூத்த பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சிக்கு நீ முந்தி நான் முந்தி என்ற நிலையில் ஆசை நாயகிகளாக இருப்பதையே உள்ளூரவும் வெளிப்படையாகவும் விரும்பி செயலாற்றி வருகிறார்கள் என்பதே உண்மையாகும்.

## மலையக மக்கள் முன்னணிக்குள் பிளவு

மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரம் பொதுச் செயலாளர் பதவியையும் தான் ஏற்றுக் கொண்டதாக அறிவித்துள்ளார். பொதுச் செயலாளரின் சில பொறுப்புக்கள் மட்டும் தலைவர் சந்திரசேகரத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக பொதுச் செயலாளர் மு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் பிரசாரக் கூட்ட மேடையில் வைத்து மலையக மக்கள் முன்னணி பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளருமான மு.சிவலிங்கம் வேட்பாளர் ஒருவரினால் தாக்கப் பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

பொதுச் செயலாளரை தாக்கியவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் தாக்கப்பட்ட பொதுச் செயலாளருக்கு எதிராக நடவடிக் கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய ஆச்சரியமாக இருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக சந்திர சேகரனுக்கு ஆதரவான குழுவாகவும் சிவலிங்கத்திற்கு ஆதரவான குழுவாகவும் மலையக மக்கள் முன்னணி இரு குழுக்களாக இயங்கி வந்ததை அறிய முடிந்தது. மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரம் கொழும்பில் வசதி படைத்தவர்களின் அபிலாஷை களை பூர்த்தி செய்வதிலேயே அக்கறை செலுத்தி வருவதாக கட்சிக்குள் அவர் மீது விமர்சிக்கப் பட்டதாகவும் அதற்கு சிவலிங்கமே காரணம் என்று சந்திரசேகரம் அவர் மீது கோபம் கொண்டிருந்ததாகவும் அறிய முடிந்தது.

ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் சிவலிங்கமும் சந்திரசேகரனும் கடுமையான வார்த்தைகளால் வாக்குவாதப்பட்டுக் கொண்டதாக அறியமுடிந்தது.

சந்திரசேகரன் முதலில் மலையகத் தமிழ் மக்கள் என்ற பதத்தை விட்டு இந்திய வம்சமாவளி தமிழர் என்று பாவித்தார். தற்போது இலங்கை வாழ் தமிழர்கள் என்று பொத்தாம் பொதுவான பதத்தை பாவிக்கிறார்.

இவ்வாறான கொள்கைப் பிரச்சினையில் தான் சிவலிங்கத்திற்கும் சந்திரசேகரனுக்குமிடையே விரிசல் ஏற்பட்டது என்று சரியாக கூறமுடியாது விட்டாலும் விரிசல் அதிகரித்துவிட்டது என்று கூறலாம்.

முன்னாள் செயலாளர் பி.ஏ. காதரும் ம.ம. முன்னணியை விட்டு விலகியமையும், காலஞ் சென்ற வி.ரி. தர்மலிங்கம் சந்திர சேகரத்துடன் பலத்த முரண்பாட்டை கொண்டிருந்தமையும் இவ்வேளை நினைவு கூறத்தக்கதாகும்.

## மலையகத்திலிருந்து சிந்திக்க சில செய்திகள்

- கந்தப்பொளையில் நடைபெற்ற கொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் ஏப்ரல் 30ம் திகதி வேலை நிறுத்தம் செய்திருந்தது தெரிந்ததே. அப்போது கந்தப்பொளை நிலைவரம் பற்றி அறிய தொலைபேசியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரை தொடர்பு கொள்வதற்கு பலர் முயற்சித்துள்ளனர். அவர் நாட்டில் இல்லை என்ற பதில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர் நாட்டில் தான் இருந்திருக்கிறார்.
- கந்தப்பொளை சம்பவத்தினால் மே முதலாம் திகதி துக்கம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. மே தினக் கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டன. மலையக மக்கள் முன்னணி மே தினக் கூட்டம் புஸ்ஸல்லாவையில் மிகவும் தடபுடலாக நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வந்த டப்பான் கூத்து ஆட்டக்காரர்கள் சகிதம் ஆடம்பரமாக மே தினம் கொண்டாடப்பட்டுள்ளது.
- மக்கள் சபையின் மலையகத் தமிழ் பிரதிநிதி ஒருவரின் துணைவியார் அட்டன் பிரின்சஸ் தியேட்டருக்கு அருகிலுள்ள வீட்டிலிருந்து அட்டன் நகரத்திற்கு பொருட்களை வாங்கி வேன்களை வாடகைக்கு அமர்த்தியே செல்வாராம். வாங்கிய பொருட்களின் பெறுமதி நூறு ரூபாவாக இருந்தாலும் வேன் கூலி ரூபா 500 இற்கு குறையாமல் கொடுக்க வேண்டிவருமாம். மக்களின் வாக்குகளினால் சிலர் வாழும் வாழ்க்கையை பாருங்கள்.
- ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி பிரச்சினை பற்றி கருத்து தெரிவித்து கொழும்பிலிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஒருவர் 'புல்லு வெட்டுகிறவங்களுக்கு' பாடசாலைகளை காட்டியதாலும், பாடசாலைகளில் ஆசிரியர்களாக்கியதாலும் ஏற்பட்ட பிரச்சினையே. என்று கூறினாராம்.
- மேல் கொத்மலை திட்டத்தை ஆதரிக்கும் மலையகத் தலைவர் 'அத்திட்டத்தை எல்லாம் எதிர்த்தால் நான் எப்படி அமைச்சர் பதவியியல் இருப்பது? நான் அமைச்சர் பதவியில் இருப்பதை விரும்பாதவர்களின் சதியில் நான் மாட்டிக் கொள்ள முடியாது' என்று தொலைபேசியில் உரையாடிய அவரது நண்பர் ஒருவருக்கு கூறினாராம்.
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் சேர்வதனால் பலவிதமான பதவிகளையும் சலுகைகளையும் வழங்கும்படி கேட்டு நீண்ட பட்டியலொன்றை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கொடுத்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நீளமான செலவு சிட்டையை (Shoping list) ஏற்றுக் கொள்ள முடியாதென ஜனாதிபதி கூறிவிட்டாராம்.
- மாகாணசபை வேட்பாளரும் முன்னாள் மத்தியமாகாண கல்வி அமைச்சருமான ராதாகிருஷ்ணன் தேர்தல் பிரசாரங்களை செய்வதற்கு ஏற்றதாக மாகாண கல்வி அதிகாரி எஸ். ஜோசப் பாடசாலைகள் தோறும் கல்விக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வருகிறாராம். இவை தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.
- ஹைபாரஸ்ட் இலக்கம் 1 தமிழ் வித்தியாலயத்தில் கடந்த மாதம் 5ம் திகதி கட்டிடத்திறப்பு விழா நடைபெற்றுள்ளது. பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சரும் மாகாண சபை வேட்பாளருமான ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டுள்ளார். தேர்தல் பிரசாரத்தில் இவ்வாறான விழாக்களை நடத்த முடியாது. எனினும் அப்பாடசாலை வலய உதவி கல்வி அதிகாரி சுப்பிரமணியம் அவ்விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார். அவ்விழாவில் ரட்ணம் என்ற ஆசிரியரை வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் நீ.லோகேஸ்வரன் தாக்கியுள்ளார். இத்தாக்குதல் தேர்தல் வன்முறை ஆகும். இத்தாக்குதலை கண்டித்து கடந்த மாதம் 11ம் திகதி வலப்பனை வலய பாடசாலைகளில் ஆசிரியர்களும். அதிபர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

## புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் இதனை விளங்கிக் கொள்ளவும் வேண்டும்

புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த கருணாவைக் கொழும்புக்கு கூட்டி வந்த விவகாரம் அண்மையில் அம்பலத்திற்கு வந்தது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகீர் மௌலான சம்மந்தப்பட்டிருந்தார். அதன் காரணமாக அவர் தனது பாராளுமன்றப் பதவியையும் இழக்க வேண்டி வந்தது. இலங்கையில் இருந்தால் ஊடகங்களின் கணைகளுக்குப் பதில் சொல்வதைத் தவிர்க்க அவர் மக்காவிற்கு பயண மாகினார். உடனடியாக அவர் நாடு திரும்பமாட்டார். அந்த அலை ஓய்ந்த பின் வந்து கொள்வார் என்பது நிச்சயம். இந்த விடயத்தில் ரணில் விக்கிரம சிங்கா பெரும் தர்ம சங்கடத்திற்கு ஆளாகினார். பேரினவாதப் பக்கத்திற்கு எவ்வாறு கூறுவது புலிகள் இயக்கத்திற்கு எதைச் சொல்வது எனத் தடுமாறி னார்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்தளவுக்கு தமிழர் விரோத நிலைப்பாடு எடுத்தாலும் அதனை மூடிக் கட்டி தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழர்களின் உற்ற நண்பன் யூஎன்.பியே என்று காட்டுவதற்கு தமிழர் கட்சிகளும் தலை நகரக் கனவான்களும் மட்டுமன்றி தமிழ் ஊடகங்களும் இருக்கின்றன. அடித்தாலும் எரித்தாலும் யுத்தம் புரிந்தாலும் நாம் உந்தன் அடிமை என்பதே இவர்களது நிரந்தரக் கொள்கையாகும்.

நிற்க, கருணா விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், ராணுவத் தலைமைப் பீடம் என்பன வெவ்வேறு அளவுகளில் சம்பந்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கருணா விவகாரம் முழுவதையும் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி இல்லாதொழிப்பதே இவர்கள் எல்லோரினதும் மையமான கவனமாக உள்ளது. ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சி உரிமைகள் பேச்சுக்கு எடுக்கப்படுவதிலோ அன்றி அரசியல் தீர்வாக வழங்கப் படுவதிலோ இத்தகை யோருக்கு அக்கறை கிடையாது. ஆனால் புலிகளைப் பலவீனப்படுத்துவதில் அழித்தொழிப்பதில் மட்டும் இவர்கள் எல்லோரினதும் உள் விருப்பம் ஒன்றாகவே காணப்படுகிறது. தத்தமது அதிகாரம், ஆதிக்கம், பதவிச் சுகங்கள் என்பனவற்றுக்காக புலிகள் இயக்கத்துடன் பேசுவது போன்று நடித்தாலும் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இந்திய ஆளும் வர்க்கம், அமெரிக்க ஏகாதி பத்தியம் என்பன யாவும் புலி அழிப்பு என்ற நேர் கோட்டில் வெவ்வேறு இடங்களில் ஆனால் ஒரே இலக்கில் நின்று கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இத்தகைய சக்திகள் பற்றிச் சரியான அடையாளங்களைக் கண்டு கொள்ள வேண்டும். இது பற்றி புலிகள் இயக்கமும் அரசியல் தளத்தில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

## சட்டமும் அதன் காவலர்களும்

இந்தியாவின் முன்னைய காங்கிரஸ் ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட தடா சட்டம் 1995ல் தானாகவே செல்லுபடியற்றுப் போனது. ஆனாலும் இந்திய உச்ச நீதிமன்றம் 2004 ஏப்ரல் 2ம் நாள் அந்தச் சட்டத்தின் கீழ் 14 பேருக்கு ஆயுட் சிறைத்தண்டனையை உறுதிப்படுத்தியது.

மக்களைக் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கிய பொலிஸார் 'தீவிரவாதிகள்' என்ற பேரில் பிகாரில் உள்ள படாஸி என்ற கிராமத்தில் 1988ல் ஒரு காணித் தகராற்றைத் தீர்த்துக் கொண்டிருந்த கிராமவாசிகளைச் சுட்டு மூவரைக் கொன்றனர். எதிர்த் தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டார். இதன் பின்பு சம்பவம் நடந்த இடத்தில் இல்லாதவர்களையும் சேர்த்துக் கைது செய்தார்கள். பொலிஸ் மேலிட அனுமதியில்லாமலே இங்கும் பிற இடங்களிலும் பொலிஸ் நிலையங்களில் தடா சட்டத்தின் பேரில் பலர் தடுத்து வைக்கப்பட்டி ருந்தனர் என்பது குறிப்பிட வேண்டிய விடயம்.

படாஸியில் கைது செய்யப் பட்டோரிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. பலருக்குப்பிணை மறுக்கப்பட்டது. நால்வர் பால வயதுடையோர் கொலைக்கும் கைதானோருக்குமிடையில் தொடர்பு இருந்ததற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை. எனினும் சம்பவத்திற்குப் 16 ஆண்டுகள் பின்பு பயங்கரவாதத்தின் பேரில் இத்தண்டனை வழங்கப்பட்டுள்ள தென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ, விடுதலை) தன் அறிக்கையில் கண்டித்துள்ளது. இவர்கள் அக் கட்சி என்பதற் காகவே தண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

இத் தீர்ப்புக்களை எதிர்த்துச் செய்யப்பட்ட மேன்முறையீட்டை உச்ச நீதிமன்றம் நிராகரித்ததை யிட்டு இந்த அநீதிக்கு எதிரான பிரசார இயக்கம் ஒன்று தொடங்கப் பட்டுள்ளது.

தாம் கற்க வேண்டிய பாடம் ஏதெனில், முதலாளி வர்க்கத்தினர் செய்யுங் குற்றங்கள் சட்ட நுணுக்கங்கள் மூலமும் சட்டத்தில் ஏற்படும் மாற்றங்களாலும் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்கின்றன. உழைக்கும் மக்கள், முக்கியமாக அரசியல் உணர்வுடையோர் செய்யாத குற்றங்களுக்காகச் செல்லாமற் போன சட்டங்களாலும் தண்டிக்கப்படலாம்.

தகவல் :- நரசிம்மா

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகம் மாலுமி இல்லாத கப்பலா?

- ம. அழகேசன் -

மத்திய மாகாண சபைக்காக நுவரெலியா மாவட்டத்தில் புதிய - ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ. தம்பையா தலைமையில் மெழுகு வர்த்தி சின்னத்தில் சுயேட்சைக் குழுவொன்று போட்டியிடுவது தெரிந்ததே.

மத்திய மாகாணத்தில் மலையகத் தமிழ் மக்கள் கூடிய எண்ணிக்கையில் வாழ்கின்றனர். அம்மாகாணம் புவியியல் ரீதியில் மலையகத்தமிழ் மக்களின் மையமாகும். அந்த ரீதியில் அங்கு செய்யப்பட்ட வெகுஜன வேலைகளின் அடிப்படையில் அடக்கப்பட்ட மலையக தமிழ் தேசிய இனத்தினதும் தோட்டத் தொழிலாளர்களினதும் விடுதலைக்கான மக்கள் அதிகார மையங்கள் அங்கிருந்து கட்டப்படுவது பொருத்தமானதாகும்.

மாகாண சபைகளுக்கு குறைவான அதிகாரங்களே பரவலாக்கப்பட்டிருந்த போதும் அவ்வதிகாரங்கள் மலையகத் தமிழ் மக்களிடம் உரிய முறையில் சென்றடைய வில்லை. அபிவிருத்திகளும் மலையகத் தமிழ் மக்களை அடையவில்லை.

கடந்த காலத்தில் மலையகத் தமிழ் மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மலையகத் தமிழ் உறுப்பினர்கள் பேரினவாத முதலாளித்துவ கட்சிகளை சார்ந்தே இயங்கினர். மலையகத் தமிழ்மக்களின் சுயாட்சிக்காகவோ, அபிவிருத்திக்காகவோ குரல் எழுப்பவில்லை. மாறாக பேரினவாத முதலாளித்துவ கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே நடந்து கொண்டனர்.

மாகாணசபைகளினூடாக மக்களின் கைகளுக்கு குறைபட்ச அதிகாரங்களாவது சென்றடையவும் எதிர் காலத்தில் மலையக தமிழ் தேசிய இனத்திற்கு அதிகளவு சுயாட்சியை உறுதி செய்து கொள்வதற்குமான போராட்ட மேடையாக மாகாண சபை தேர்தல் மேடைகளை பயன்படுத்த எண்ணினோம். வெற்றி பெற்றால் மாகாணசபையையும் மக்களின் உரிமைப் போராட்ட மேடையாக கொண்டு செயற்படுவோம்.

நீண்டகால நோக்கில் மாகாண மட்டங்களிலும் மக்களை அணி திரட்டவும், மக்கள் அதிகார மையங்களை உருவாக்கவும் திட்டமிட்டு செயற்படுவோம். அதன் மூலம் மக்களுக்கு உண்மையான அதிகாரம் கிடைக்கவும் அடக்கப்பட்ட தேசிய இனங்களிற்கு சுயாட்சியை உறுதி செய்து கொள்ளவும் முடியும்.

புதிய - ஜனநாயக கட்சி இலங்கையின் அனைத்து தொழிலாளர்கள், விவசாயிகள், அடக்கப்பட்ட தேசிய இனங்கள், பெண்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் ஆகியோரின் விடுதலைக்காக, சமத்துவமான சமூக நீதியை நிலை நாட்டும் நோக்கம் கொண்டதாகும்.

மலையகப் பிரதேசத்தின் குறிப்பான சூழ்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களினதும், அவர்களை பெரும்பான்மையாக உள்ளடக்கிய மலையகத்தமிழ் தேசிய இனத்தினதும் நாளாந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காக மட்டுமன்றி, நிரந்தர விடுதலைக்காகவும், பொது வேலைத்திட்டத்துடன் செயற்பட்டு வருகிறது. அதற்காக தனியாகவும் மலையகத்தில் ஐக்கியப்படக் கூடிய தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், கலை இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து கூட்டாகவும் புதிய - ஜனநாயக கட்சி செயற்பட்டுவருகிறது.

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராகவும், ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி பிரச்சினைகளை தீர்க்கக் கோரியும், இனஅழிப்பு அடிப்படையில் மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் கருவள அழிப்பு (குடும்பக்கட்டுப்பாட்டு) நடவடிக்கைகளுக்கு எதிராகவும் வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தோட்டங்களில் மேற் கொள்ளப்படும் சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் மாணிக்கக்கல் அகழ்வுகள் போராட்டங்களினூடாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதிகளுக்காக வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான வெகுஜனப் போராட்டங்களுக்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக, மக்களை மேலும் பரந்தளவில் அணிதிரட்டவும் ஐக்கியப் படுத்தவும் மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவதை ஒரு நடவடிக்கையாக கொள்கிறோம். எம்மை மக்கள் தெரிவு செய்தால் மக்களின் உரிமைக் கோரிக்கை குரலாக மாகாணசபையிலும் ஒலிப்போம்.

அண்மைக்காலமாக இனரீதியாக மலையகத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வருகின்றனர். இங்கிரியா, கந்தப்பொளை, மில்லகந்த ஆகிய இடங்களில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வீடுகளும் சொத்துக்களும் அழிக்கப் பட்டுள்ளன. கந்தப்பொளையில் இரண்டு தமிழர்களை இராணுவமும், பொலிசும் சுட்டுக் கொன்றுள்ளன. மில்லகந்தையில் தாக்கப்பட்ட தமிழர்களே பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மலையக, தொழிற் சங்க, பாராளுமன்ற தலைமைகள் என்ன செய்தன? அவற்றின் தவறான, முதலாளித்துவ பேரினவாதத்திற்கு அடிபணிந்து போகும் அரசியலினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக குரல் எழுப்பக் கூட முடியவில்லை.

அவற்றின் அரசியல் வங்குரோத்து நிலை பற்றி மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். தவறான அரசியல் தலைமைகளின் மீது அதிருப்தி அடைவதும் கோபம் கொள்வதும் புதிய, சரியான அரசியல் தலைமையை கட்டிவளர்ப்பதற்கான அடிப்படையாகும்.

புதிய தலைமையை மக்களால் பார்க்க முடியாமல் இல்லை. மக்கள் மேய்க்கப்படுபவர்களாகவன்றி மேய்ப்போராக மாறவேண்டும். மக்களை மேய்ப்போராக இருக்கும் அரசியல் தலைமைகளை தூக்கி எறிய வேண்டும். புதிய தலைமையை அங்கீகரித்து ஆதரித்து அணிதிரள வேண்டும்.

அதற்கான ஒரு நடவடிக்கையாக மெழுகுவர்த்தி சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழுவை வெற்றிபெறச் செய்ய வேண்டும். மெழுகுவர்த்தி சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

சிலர் கூறுவதுபோல் மலையகம் மாலுமி இல்லாத கப்பல் அல்ல. திறமையான மாலுமிகள் இருக்கின்றனர். அவர்களின் திறமையை அவர்கள் கடந்த காலத்தில் நிரூபித்திருக்கிறார்கள். அவர்களுடன் இணையும் போது அவர்கள் அனைத்து மக்களையும் மாலுமிகளாக்குவார்கள்.

அப்போது ஒன்று, இரண்டு மாலுமிகளை நம்பி கப்பலில் பயணம் செய்யத் தேவை இல்லை. ஒரு மாலுமிக்கு முடியாத போது இன்னொரு மாலுமி பதிலீடு செய்ய முடியும்.

சிந்தித்து செயற்பட இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

**சரியாக சிந்திப்போம் ! சரியாக செயற்படுவோம் !**

# தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் கூட்டு ஒப்பந்த முறை நீக்கப்பட வேண்டும்

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பெருந் தோட்டக் கம்பெனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையே தொழிலாளர்களுடைய சம்பளம், வேலைவாய்ப்பு, வேலை நிபந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கிய கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வருகிறது. அடுத்து இரண்டு வருடங்களுக்கான கூட்டு ஒப்பந்தம் யூன் மாத இறுதிக்குள் கையெழுத்திடப்பட வேண்டும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் பெருந் தோட்டத் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி என்பன தொழிலாளர்கள் சார்பில் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வருகின்றன. தோட்டக் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கையெழுத்திட்டு வருகிறது.

தொழிலாளர்களின் சம்பள உயர்வு பற்றி பேசுகின்றபோது தோட்டங்களை நட்டத்தில் இயக்கி வருவதாகவோ லாபமில்லாது இயக்கிவருவதாகவோ கம்பெனிகள் தெரிவிப்பதுண்டு. அக்கம்பெனிகள் வருமான வரி திணைக்களத்திற்கு காட்டி வரும் கணக்குகளை விட மிகவும் குறைவான வருமானமுடைய அல்லது மிகவும் நட்டமடைந்துள்ளதாக கணக்குகளையே காட்டுவது வழக்கம். தோட்டத் தொழிற்சங்கங்களின் சார்பில் கூட்டு ஒப்பந்தம் பற்றி கலந்துரையாட செல்பவர்கள் எவ்வித ஏற்பாடுமின்றி செல்வது வழக்கம். எப்போதும் தோட்டக்கம்பெனிகளின் மொழியில் பேசும் சில படித்தவர்களின் அறிவுரைகளுடன் தோட்டக் கம்பெனிகளை பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தால் மிகவும் இலகுவாகத் தொழிலாளர்களின் கோரிக்கை முறியடிக்கப்பட்டு விடும்.

கூட்டு ஒப்பந்தம் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடக் கூடிய அல்லது பேரம்பேசக்கூடிய அறிவுவளத்துடன் தோட்டத் தொழிற்சங்கங்கள் இல்லை என்பது வேதனைக்குரியது தான். அந்த வளத்தை தேடிக் கொள்ளவும் தொழிற் சங்கத்தலைமைகள் முயற்சிப்பதும் இல்லை. பிரிட்டிஷ் காலனித்துவ காலத்து தொழிற் சங்க எண்ணக் கருவுடனேயே இன்றும் தோட்டத் தொழிற் சங்கங்கள் இயங்கிவருகின்றன.

பெருந்தோட்டங்களின் சொந்தக்காரர் என்ற ரீதியில் கூட்டு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தை ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ளாமல் இருப்பது கூட்டு ஒப்பந்தத்தினால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதற்கு ஒரு அடிப்படை காரணமாக இருக்கலாம். அதனால் அரசாங்கம் அதன் பொறுப்பிலிருந்து மிகவும் இலகுவாக விலகிக் கொள்ள வாய்ப்பாக இருக்கிறது.

தோட்டக் கம்பெனிகள் காட்டும் நட்டக் கணக்கு சரியா பிழையா என மேற்பார்வை செய்ய தொழில் திணைக்களத்திற்கோ, தொழில் ஆணையாளருக்கோ அதிகாரம் இல்லை. தொழில் திணைக்களமோ, தொழில் ஆணையாளரோ தோட்டக் கம்பெனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையே தரகராகவே செயற்பட முடிகிறது. தோட்டக் கம்பெனிகள் காட்டும் நட்டக் கணக்கு நம்பகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த அடிப்படையிலேயே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மறுக்கப் படுகிறது அல்லது சம்பள உயர்வாக சில சதங்கள் வழங்கப்படுகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே போராட்டங்களை செய்து வென்றெடுத்த உரிமைகளையும், சலுகைகளையும் தோட்டக் கம்பெனிகள் மறுத்துவருகின்றன. அதனால் தோட்டத் தொழிலாளர்கள் பரவலாக போராட்டங்களை செய்து வருகின்றனர். தொழிலாளர்களை நசுக்கும் விதத்தில் கடுமையான வேலை நிபந்தனைகளையும் தோட்டக் கம்பெனிகள் தொழிலாளர்கள் மீது திணித்து வருகின்றன.

அதேவேளை தேயிலை, றப்பர் என்பவற்றிலிருந்து மட்டுமல்ல தோட்டங்களில் இருக்கும் மரங்கள், மண், கற்கள் என்பவற்றையும் விற்று கம்பெனிகள் லாபமடைகின்றன.

தோட்டங்களிலுள்ள பாதைகள் திருத்தப்படுவதே இல்லை. தண்ணீர் மருத்துவம் போன்ற வசதிகள் இல்லை.

இதனால் தோட்டங்களும் தோட்டத் தொழிலாளர்களும் தோட்டக் கம்பெனிகளிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதுவே தீர்வாக அமையும். தொழிலாளர்களின் பங்கெடுப்புடனான கூட்டுறவு சங்கங்களினால் தோட்டங்களை நடத்த முடியும்.

தோட்டங்கள் தோட்டக் கம்பெனிகளின் பிடியில் நீடித்திருக்கும் வரை கூட்டு ஒப்பந்தத்தினால் தொழிலாளர்களின் உரிமைகளும், வேலை நிபந்தனைகளும் சம்பளமும் தீர்மானிக்கப்படாமல் தொழிற் திணைக்களத்தின் பங்கெடுப்புடனான சம்பள நிர்ணய சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும். அவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் அறிவிக்கும் சம்பள உயர்வுகளை பெறுவதற்கு வாய்ப்பேற்படும் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திற்கமைவாக தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஓரளவிற்காவது தீர்த்துக் கொள்ள முடியும்.

கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் தொழிலாளர்கள் மேலும் மேலும் அடக்கு முறைக்குட்படுவதற்கே வாய்ப்புகள் அதிகம். அதனால் கம்பெனிகளுக்கு அதிகமாக வாய்ப்புகளை வழங்கும் கூட்டு ஒப்பந்த முறை இரத்து செய்யப்பட வேண்டும்.

# தலைவர்களே நீங்கள் எங்களுக்கு தருவதென்ன?

- பெற்டோல் பிரெக்ட்

எப்போதெல்லாம் எங்கள் மேலாடை
கந்தலாகிக் கிடக்கின்றதோ
அப்போதெல்லாம் நீங்கள் ஓடி வருகிறீர்கள்
"சேச்சே ..... இந்நிலை நீடிக்க விடுவதா"
எப்படியெல்லாம் உதவ முடியுமோ அப்படியெல்லாம்
உங்களுக்கு உதவி செய்வோம்ஷீஷீ என்று முழங்கி.
கங்கணம் கட்டிக் கொண்டு
உங்கள் தலைவர்களிடம் நீங்கள்
வரிந்து கட்டிக் கொண்டு ஓடுகிறீர்கள்
நாங்கள் நலிந்து வாடி நிற்கிறோம்
வெற்றிப் பெருமிதத்தோடு நீங்கள் மீண்டும் வருகிறீர்கள்
எமக்காக நீங்கள் வென்றெடுத்ததை எங்கள் முகத்தின்
முன்னால் ஆட்டுகிறீர்கள்
ஒரு மூட்டுத்துண்டு

மூட்டுத்துண்டு அது நல்லது தான்
ஆனால்
எங்கள் முழு ஆடை எங்கே?

எப்போதெல்லாம்
நாங்கள் பசியால் ஓலமிடுகிறோமோ
அப்போதெல்லாம் நீங்கள் ஓடிவருகிறீர்கள்
சேச்சே இந்நிலையை இனியும் நீடிக்க விடுவதா?
எப்படியெல்லாம் உதவமுடியுமோ அப்படியெல்லாம்
உங்களுக்கு உதவி செய்வோம் என்று முழங்கி
கங்கணம் கட்டிக் கொண்டு
உங்கள் தலைவர்களிடம் நீங்கள்
வரிந்து கட்டிக் கொண்டு ஓடுகிறீர்கள்
பட்டினியில் வாடும் நாங்கள் தவித்து நிற்கிறோம்
வெற்றிப் பெருமிதத்தோடு நீங்கள் மீண்டும் வருகின்றீர்கள்
எமக்காக நீங்கள் வென்றெடுத்ததை எங்கள் முகத்தின்
முன்னால் ஆட்டுகின்றீர்கள்
ஒரு துண்டு பாண்
பாண் துண்டு அது நல்லது தான்
ஆனால் முழுதான பாண் எங்கே

மூட்டுத்துண்டுகள் மட்டும் எமக்கு போதாது
முழு மேலாடையும் எமக்கு வேண்டும்
பாண் துண்டு மட்டும் எமக்குப் போதாது
முழுதான பாணும் எமக்கு வேண்டும்
தொழில் மட்டும் எமக்கு போதாது
முழுத் தொழிற்சாலையும் தேயிலையும்
இயந்திரமும்
அரசியல் அதிகாரமும் வேண்டும்
நல்லது அதுதான் எங்கள் எல்லோருக்கும் தேவை
ஆனால்
நீங்கள் எங்களுக்கு தருவதென்ன?

நன்றி
செங்கோல் - செப்டெம்பர் 1993

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 யூலை 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 70

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## தடுமாறும் அரசாங்கமும் மக்களின் எதிர்பார்ப்பும்

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை பெறாமலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைத்துள்ளது. எதிர்கட்சியை சேர்ந்த லொக்குபண்டார சபாநாயகராக இருக்கிறார். ஹெல உறுமயவை சேர்ந்த ஒரு பிக்கு எம்.பி பதவிப்பிரமாணம் செய்ய முற்பட்டபோது அரசாங்க எம்.பிக்கள் செய்த குழப்பத்தினால் மேற்கொண்ட தாக்குதலினாலும் பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. கந்தப்பொளையில் ஏப்ரல் மாதம் 28ம் திகதி இரு மலையக தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் தாக்கப்பட்டதற்கும் எதிராக மீண்டும் தொடங்கப்பட விருந்த விவாதமும் அன்று நடைபெறவில்லை.

பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தபோது அது ஜனநாயக விரோதமானது என்பதையும் அதனால் நாட்டில் குழப்பகரமான நிலைமையே ஏற்படும் என்பதை நாம் முன்பே சொல்லி வைத்திருந்தோம். ஏப்ரல் மாதம் 2ம் திகதி நடைபெற்ற தேர்தல் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் வாக்களிக்காமல் வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கிக் கொள்ளுமாறு மக்களை நாம் கேட்டிருந்ததோம். அதற்கு மக்களிடமிருந்து திருப்திகரமான பிரதிபலிப்பு கிடைத்திருந்தது. அந்தத்தேர்தலினால் பாரிய அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதை இப்போது எல்லோரும் ஏற்றுக் கொள்வர். எனவே நாம் கூறியவாறு அத்தேர்தல் அதனது அர்த்தமற்ற தன்மையை வெளிக்காட்டியதையே காணமுடிந்தது.

நாட்டின் அபிவிருத்திக்கான எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுக்க முடியாதது மட்டுமன்றி நாளாந்த நடவடிக்கைகளை கூட செய்யமுடியாது அரசாங்கம் திணறுகிறது.

முன்பு ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையில் முன்னெடுத்த சமாதான நடவடிக்கைகள் தொடரப்படவில்லை. சமாதான நடவடிக்கைகள் குறித்த ஜனாதிபதி சந்திரிகா ஒவ்வொரு நேரத்திற்கு ஒவ்வொன்றைப் பேசிவருகிறார். நோர்வே நாட்டுத் தூதுவரக்ள் இலங்கைக்கு வந்து போகிறார்கள்.

பேச்சுவார்த்தைகள் தொடரப்படுதற்கான எந்தவொரு சகுணமும் தென்படவில்லை. முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்தும் நோக்கில் தனியார் சர்வாதிகாரத்திற்கு ஒப்பான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாபதிபதி முறையையும் ஜே.ஆர் ஜயவர்த்தனா 1978 அரசியலமைப்பு மூலம் அறிமுகம் செய்து வைத்தார்.

ஒரே கட்சியில் இருந்தே ஜனாதிபதியும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படும் போது அவர்களின் ஆட்சி வண்டி சுமுகமாக நகர்ந்தது. பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்த போது கூட ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து திகதியிடப்படாத இராஜிநாமா கடிதங்களை வாங்கி வைத்திருந்தார்.

ஆனால் 1999ம் ஆண்டிற்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது. பொதுசன ஐக்கிய முன்னணியை சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகா அவரின் முன்னணிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலமில்லாத நிலையில் ஆட்சியை கொண்டு நடத்த முடியாதவராக இருந்து வருகிறார். கொள்கையில் எவ்வித வித்தியாசத்தையும் காணமுடியாத போது ஐக்கிய தேசிய கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒருமைப்பாட்டுடன் நடந்து கொள்ளவில்லை. அந்த இரண்டு கட்சித் தலைமைகளுக்கிடையேயான அதிகாரப் போட்டி தொடர்கிறது.

இந்த இடத்தில் மக்களுக்கு தலைமை கொடுக்க மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளோ கூட்டணிகளோ பலமாக இல்லை. அதனால் அந்த இரண்டு கட்சிகளின் கயிறு இழுத்தலுடன் ஆட்சி நடக்கிறது.

அமெரிக்கா, ஜப்பான் மேற்குலக நாடுகள் போன்ற ஏகாதிபத்திய நாடுகளும், இந்திய மேலாதிக்கமும் அவற்றின் நிகழ்ச்சி நிரலை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்திக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன. அவற்றின் பிடிகளிலிருந்து நாட்டை விடுவித்துக் கொள்வதற்கான கருத்துக்கள் பலமாக இல்லை. அவற்றுடன் இணங்கிப் போய்த்தான் இலங்கையை கொண்டு நடத்த வேண்டிய நிலையில் இலங்கை ஆளும் வர்க்கம் இருக்கிறது. அந்த நிலைப்பாட்டின் ஆபத்துக்கள் பற்றி மக்கள் போதியளவிற்கு தெரிந்து கொண்டவர்களாக இல்லை. இன ஒடுக்கலுக்குள்ளாகி இருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் கூட ஏகாதிபத்தியங்களுடனும் இந்திய மேலாதிக்கவாதத்துடனும் இணங்கிப் போய்தான் உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தே பலமாக இருக்கிறது.

அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருப்பதால் சமாதான பேச்சுக்கள் தொடராது என்றும் வெளிநாட்டுத் தலையீடுகளுடன் தான் தீர்வை கொண்டுவரவேண்டும் என்றும் தமிழ் மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இது மக்களின் இணக்கத்துடன் இலகுவாக ஏகாதிபத்தியத்தை இங்கு முழுமையாக கொண்டு வருவதிலேயே போய் முடியும்.

சம்பள உயர்வுகளை கேட்டு பரவலான போராட்டங்கள் நடக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஒழுங்கான ஆட்சி இல்லாததாலே பொருளாதார கஷ்டங்கள் இருக்கின்றன என்ற நிலையில் கூட மக்கள் நலன்கள் சார்ந்த அரசியல் சக்திகள் வலுவாக இல்லாதபடியால் உலகவங்கியினதும், ஏகாதிபத்திய சக்திகளினதும், இந்திய மேலாதிக்கத்தினதும் நிகழ்ச்சிநிரல்கள் வேகமாக முன்னெடுக்கப்படுவதற்கான சூழ்நிலையையே தோற்றுவித்திருக்கிறது.

இலங்கை மக்களின் இறைமை, தன்னாதிக்கம், ஒருமைப்பாடு, சுதந்திரம் என்பன கேள்விக்குறியாகி வருகின்ற சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. ஆளும் வர்க்கம் ஆட்சியை கொண்டு நடத்த முடியாத நிலைமை என்பது முதலாளித்துவத்தின் இயலாமையை மேலும் நிரூபிப்பதாகவே இருக்கிறது. இவ்விடத்தில் அதற்கு மாற்றான அரசியல் பலமாக முன்னெடுக்கப்படாது விடின் மக்களும் நாடும் மேலும் மேலும் அழிவுகளையே சந்திக்க நேரிடும்.

- ஆசிரியர் குழு -

# நாட்டை நாசத்திற்குள் இட்டுச் செல்லும் தாராளமயம் – தனியார்மயம்

**வெகுஜனன்**

இலங்கையில் எழுபதுகளின் பிற்கூறிலிருந்து தாராளமயம் தனியார் மயம் ஆகிய இரண்டு விடயங்களும் முன் தள்ளப்பட்டு வந்துள்ளன. அதன் எதிர் விளைவுகள் முழு நாட்டையும் சகல மக்கள் பிரிவினர் களையும் கடுமையாகக் பாதித்து வருவதை அனைவரும் காணவும் அனுபவிக்கவும் முடிகின்றது.

இந்த தாராளமயம் தனியார் மயம் என்பது ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் முக்கியமான முதன்மை வாய்ந்த கூறுகளாகும். இவை தற்செயலாக எழுந்தவைகளோ அல்லது உலகின் பின்தங்கிய நாடுகளினதும் மக்களினதும் மீட்சிக்கான செயல்திட்டங்களைக் கொண்டவைகளோ அல்ல. முற்றிலும் முதலாளித்துவ சுரண்டல் விரிவுபடுத்தலுடனும் ஏகாதிபத்திய உலக மேலாதிக்க நலன்களுடனும் பின்னிப் பிணைக்கப்பட்டவைகளாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை முன்னெடுக்கும் பாரிய சர்வதேச நிறுவனங்களாக உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உலக வர்த்தக அமைப்பும் இவற்றோடு இணைந்த நிறுவனங்களும் செயல் புரிந்து வருகின்றன.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் மூன்றாம் உலக நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் தாராளமயம் தனியார் மயம் என்பன வரலாற்று வழிச் சூழலில் திட்டமிடப்பட்டது என்பதும் எவ்வாறு திணிக்கப்பட்டது என்றும் கண்டு கொள்ளப்பட வேண்டியதாகும்.

1917ம் ஆண்டின் ஒக்ரோபர் சோசலிஷப் புரட்சியும் சோவியத் யூனியனின் சோஷலிச நிர்மாண உறுதிப்பாடும் உலகின் அடக்கியொடுக்கப்பட்ட நாடுகளையும் மக்களையும் விழிப்படையவும் விடுதலைப் போராட்டங்களில் இறங்க வும் வைத்தது. கொலனித்துவ முதலாளித்துவ நுகத்தடிகளை உடைத்தெறிந்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைப் பெரும் காட்டுத் தீ போல பரவவைத்தது. மூன்றாம் உலக நாடுகள் வெவ் வேறு அளவுகளில் விட்டுக் கொடுக்காத சுதந்திர விடுதலைப் போராட்டங்களை நடாத்தி வெற்றி பெற்றன. சில நாடுகள் நேரடியாகவே சோஷலிசக் கட்டமைப்புகளைக் கொண்ட நாடுகளாயின பல நாடுகள் தேசிய அரசுகளாகவும் ஆட்சிகளாகவும் மாறின. சொந்தக் கால்களில் நிற்பது, சுயசார்புப் பொருளாதாரம், சொந்த வளங்களைத் தாமே கையாள்வது என்ற நிலைக்கும் வந்தன.

இவ்வாறான சூழலில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் விரோதமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மூன்றாம் உலக நாடுகள் எனச் சுட்டப்படும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளால் மக்களால் மேற்கொள்ளப்பட்டன. தமது பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு துறைகள் அனைத்தையும் தாமே திட்டமிட்டு முன்னெடுக்கும் தேசியக் கொள்கைகளை வகுத்தனர். இதற்கு சோஷலிச நாடுகள் தமது சக்திக்கேற்ப கை கொடுத்தன. அபிவிருத்திக்கும் ஆக்கப் பணிகளுக்கும் துணை நின்றன.

இத்தகைய ஒரு சூழலில் ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் மூன்றாம் உலக நாடுகள் தலை நிமிர்ந்து கொலனிய முதலாளித்துவ எச்சங்களைத் துடைத்தெறிய முன்வந்தன. தமது சகல வளங்களையும் விருத்தி செய்வதற்கு தேசிய பொருளாதார செயற்திட்டங்களை உருவாக்கிக் கொண்டன. அதன் அடிப்படையிலேயே அரசாங்க-பொது-கூட்டுறவுத் துறைகள் உருவாக்கம் பெற்றன. சோஷலிச நாடுகளின் திட்டங்கள் நடைமுறைகள் செயற் பாடுகளில் இருந்து அரைகுறையான அம்சங்கள் பின்பற்றப்பட்டன. அவை ஊழல் விரயம் அக்கறையின்மை அரசியல் செல்வாக்கு போன்ற அம்சங்களுடன் முன்னெடுக்கப் பட்டாலும் மக்களுக்கு நம்பிக்கையும் குறைந்தளவு தானும் பயனுடைய தாகவும் அமைந்திருந்தன. தேசிய மயக் கொள்கை என்பது அடிப்படை யில் வளங்களை நாட்டுடமையாக்க வும் அந்நிய உள்நாட்டு முதலாளித் துவப் பெருச்சாளிகளிடமிருந்து அவற்றை மீட்பதாகவும் அமைந் திருந்தன. அத்தகைய தேசியமயக் கொள்கை எதிர்பார்த்தளவுக்கு வெற்றி பெறுவதைத் தடுக்க ஆரம்பம் முதலே வெளிநாட்டு உள்நாட்டு சக்திகள் சீர்குலைவு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தன. அதனைத் தோல்வியாகக் காட்டு வதில் முனைப்பாகவும் இருந்தன.

இலங்கையில் ஐம்பதுகளில் இருந்து எழுபதுகளின் நடுப்பகுதிவரையான காலப்பகுதியில் அரசாங்க பொது கூட்டுத்தாபன கூட்டுறவுத் துறைகள் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றிருந்தன. அதற்கு சோஷலிச நாடுகளினதும் அணிசேரா நாடுகளினதும் உதவிகளும் ஒத்துழைப்புகளும் இருந்தும் வந்தன.

இத்தகைய பொருளாதார அரசியல் சமூக கல்வி சுகாதார கட்டமைப்புகளைப் பொறுத்துக் கொள்ள முடியாதவைகளாகவே முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் செயலாற்றியும் வந்தன. அவற்றுக்கு முடிவு கட்டும் சந்தர்ப்பங்களை எதிர் பார்த்தும் வந்தன. எனவே 1977ல் ஜே.ஆர்.தலைமையிலான யூஎன்.பி ஆட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்ததும் அதனைக் கொண்டு சகலதையும் மறுதலையாக மாற்றிக் கொள்வதில் வெற்றி கண்டனர். அதற்கேற்றவாறு நாட்டின் அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டு அதனடிப்படையில் ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழான தாராளமயம் தனியார்மயம் படிப்படியாக நடைமுறைப் படுத்தப் பட்டு உச்ச நிலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது. அதற்குரிய சர்வதேசச் சூழலும் உருவாக்கப்பட்டது.

> இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகத் ஜே.ஆரினால் தொடக்கி வைக்கப் பட்ட பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை யுத்தத்திற்கும் அதே ஜே.ஆரினால் முன்னெடுக்கப்பட்ட தாராளமயம் தனியார் மயத்திற்கும் ஒரே வயதாகும். அந்த வயது 25 வருடங்களாகும்.

குறிப்பாக சோவியத் யூனியன் முற்றுமுழுதான தகர்வும் ஏனைய சோஷலிச நாடுகளினது வீழ்ச்சியும் பின்னடைவும் ஏகாதிபத்தியத்தால் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் நடைமுறைக்கு வந்த கடந்த கால் நூற்றாண்டு காலப் பகுதியை எடுத்து நோக்கின் ஜே.ஆரால் தமிழர்களுக்கு எதிராகத் தொடக்கி வைக்கப்பட்ட பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தத்திற்கும் இத்தாராள தனியார் மயத்திற்கும் ஒரே வயதாகும் என்பதை அவதானிக்க முடியும். அக்கொடிய யுத்தத்தின் மறைவிலேயே இலங்கையில் தாராளமயம் தனியார்மயம் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் ஆலோசனை வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டது. யுத்த சூழலில் இவற்றுக்கு எதிரான போக்குகள் திசைதிருப்பப்பட்டன.

அன்றுவரை அரசாங்க பொது கூட்டுத்தாபன கூட்டுறவுத் துறைகளாக விளங்கி வந்தவைகள் யாவும் ஊழல் விரயம் நஷ்டம் முறைகேடு என்பனவற்றைக் காரணம் காட்டி தனியார் மயமாக்கப்பட்டன. பல்தேசிய கம்பனிகளும் உள்நாட்டுப் பெருமுதலாளிகளும் அவற்றைப் பெற்று பெருலாபத்திற்கான தமது நிறுவனங்களாக மாற்றியமைத்தனர். இதனால் மனித வளம் உட்பட நீர் நிலம் கனிவளங்கள் உற்பத்தி வளங்கள் யாவும் தனியார் மயமாக்கம் பெற்றன. இதில் நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் தனியார் கைகளுக்கு சென்றடைந்தன. எஞ்சியுள்ளவற்றையும் தனியார் மயப்படுத்த திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இத்தனியார் மயத்தை நடைமுறைப் படுத்த தாராளமயக் கொள்கை ஒரே நேரத்தில் பின்பற்றப்பட்டது. அவை இரட்டைக் குழந்தைகளாக இலங்கையின் சமூகக் கூட்டமைப்பில் வளர்க்கப்பட்டு இன்று வாலிபப் பராயத்தை அடைந்து நிற்பதைக் காண முடிகிறது. இதனால் நாட்டிற்கோ மக்களுக்கோ பயன் கிடைப்பதில்லை. நமது நாட்டின் மனித உழைப்பு வளம் உட்பட சகல வளங்களும் சுரண்டி பெருலாபமாக அள்ளிச் செல்லப்படுகின்றன. அதே வேளை பொருட்களின் தங்கு தடையற்ற வர்த்தகத்தால் நமது நாட்டுப் பணம் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன.

சகல நிலைகளிலும் தாராள மயமும் தனியார் மயமும் நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய தீங்கிழைத்து அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சி இதனை ஆரம்பித்து வைத்த போதிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைமையிலான ஆட்சியும் தொடர்ந்து இவற்றை முன்னெ டுத்து வந்துள்ளன. தாம் உண்ட வற்றையே ஓங்காளித்து வெளியே தள்ளிக் கொண்டதையே காண முடிந்தது.

இத்தனியார் மயமும் தாராளமயமும் எவ்வளவுக்கு நாட்டின் பொருளாதாரத்திற்கும் அரசியல் சமூக பண்பாட்டிற்கும் கேடும் மோசமும் விளைவித்து வருகின்றன என்பது பரந்த தளத்தில் பார்க்கப்படுவது அவசியமாகும். அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் அயல் இந்திய மேலாதிக்கமும் இவற்றின் ஊடாகத் தமது பிடிகளை இறுக்கி வருவதையும் சமகாலத்தில் காணமுடிகின்றது. இவை பற்றி மக்கள் மேலும் விரிவாக அறிந்து தெரிந்து அவற்றுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை வளர்த்துச் செல்வது அவசியமாகின்றது.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்றம் கள்வர் குகை மட்டுமல்ல காடையர்களின் கொட்டகையுமாகும்

பாராளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகளான கனவான்கள் கூடி விவாதித்து முடிவெடுக்கும் ஒரு இடம் என்று நம்பப்படுவதாலேயே பாராளுமன்றச் சனநாயகம் என்ற கண்கட்டு வித்தை மூலம் மக்களை ஏமாற்ற முடிகிறது. மூன்றாமுலகச் சூழலில் மேலைநாட்டுப் பாராளுமன்ற அரசியல் முறை புகுத்தப்படும் போது, அந்தச் சூழலுக்குரிய பிரச்சினைகள் பாராளுமன்ற அரசியலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஏறத்தாழ ஒவ்வொரு மூன்றாமுலக நாட்டிலும் கண்டிருக்கிறோம். மூர்க்கத்தன மான சர்வாதிகாரத்துக்குச் சன நாயக முகமூடி அணிவது முதலாகப் பூரண அராஜகம் வரையிலான எல்லாமும் நம் கண்முன்னே நடந் தேறியுள்ளன. இதற்கான காரணங் களைப் பலரும் ஆராய்ந்து விளக்க முற்பட்டுள்ளார்கள். எனினும் குற்றச் செயல்புரிவோருக்கும் அரசியல் வாதி கட்குமிடையே இருந்து வந்துள்ள தொடர்பு குற்றச் செயல்புரிவோரின் ஆதிக்கத்திற்குட்பட்ட அரசியல்வாதி களையும் குற்றச் செயல் குழுக் களின் தலைவர்களான அரசியல் வாதிகளையும் உருவாக்குமளவுக்கு வளர்ந்து விட்டது.

இத்தகைய போக்குக்கு மேலை நாடுகள் பெருமை கொண்டாடும் 'சனநாயக' நாடுகளான இஸ்ரேல், இத்தாலி போன்றவையும் விலக்கல்ல. ஊழற் குற்றச்சாட்டுக்களால் பதவி விலகும் தேவை ஒரு அமெரிக்கா வின் துணைத் தலைவருக்கு நேர்ந்தது. வாட்டர்கேற் முதல் சென்ற சனாதிபதி தேர்தல் வரையி லான நடத்தைப் பிரச்சினைகள் அமெரிக்கச் சனநாயகத்தைச் சிரிப்புக்கு இடமாக்கியவை தான். எனினும் சில சமூக நடத்தை விதி கள் இன்னமும் அந்த நாடுகளின் பாராளுமன்றங்களைப் பண்பான நடத்தைக்குரிய இடங்களாகக் காட்டுகின்றன.

இலங்கைப் பாராளுமன்றத்தில் "தோசை! வடை!" என்ற ஏளனக்



கூச்சல்கள் எழுந்த காலத்தின் பின்புங் கூட, ஓரளவு பண்பான நடத்தை சில காலமேனும் நீடித்தது. எனினும் சமூகச் சீரழிவுக்கு உடன் பாடான முறையில் பாராளுமன்ற உறுப்பினர்களது நடத்தையும் சீரழியத் தொடங்க அதிக காலம் எடுக்கவில்லை. பாராளுமன்றம் கனவான்களின் பட்டிமன்றம் என்ற நிலை மாறிக் காடையர்களின் கொட்டகையாகியதற்கு எசமான் வர்க்கமே முக்கியமான பங்கை வழங்கியுள்ளது.

பாராளுமன்ற அரசியலைப் புனிதப் படுத்துவதாகக் கூறிக் கொண்டு சிங்கள பௌத்த இனமதவெறிக் கொள்கையையுடைய ஒரு கட்சியின் பேரில் பாராளுமன்றம் புகுந்த பௌத்த குருமாருடைய அரசியல் நடத்தை மற்றப் பாராளுமன்ற உறுப் பினர்களுடையதை விட எவ்வளவும் உயர்ந்ததல்ல என்பதை உணர்த்த இரண்டே மாதங்கள் போது மானவையாக இருந்தன.

சிங்கள பௌத்த அரசியலின் ஏகப் பிரதிநிதிகள் இந்தப் புத்த பிக்குமார் மட்டுமல்ல. இனவாத ஜே.வி.பியும் இரண்டு பிரதான முதலாளியக் கட்சிகளும் அதே அரசியலைத் தான் வெவ்வேறு விதமாக முன்னெடுக்கின்றன. இவர்களி டையே அதிகாரத்திற்கு நடைபெறும் மோதல் சபாநாயகர் தெரிவின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதமும் ஜூன் மாதம் 8ம் திகதி பாராளுமன்றத்தில் புதிதாகப்பதவிப் பிரமாணம் செய்து கொள்ளச் சென்ற ஹெல உறுமய புத்த பிக்குவை மதிப்பதற்கு முற்பட்ட அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களது நடத்தை பாராளு மன்றம் பற்றி மக்கள் மனதில் மிஞ்சி இருக்கும் அற்ப மரியாதை யையும் அழித்துவிடப் போதுமானது.

பௌத்த பிக்குமார் இருவர் தாக்கப் பட்டனரா இல்லையா என்பதை விட முக்கிய மானது ஒருவர் சத்தியப் பிரமாணம் செய்வதைத் தடுக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து வந்து மறித்த காரியமாகும்.

ஹெல உறுமய பிக்கு ஒருவரது பாராளுமன்றப் பதவி விலகலும் அவரின் இடத்தில் இன்னொரு வரது நியமனமும் பற்றிய கேள்வி நீதி விசாரணைக்குட்பட்டுள்ள நிலையில் பின்னவர் பதவி ஏற்பதற்கு நீதி மன்றம் விதித்த தடையுத்தரவு சபாநாயகரிடமோ சம்பந்தப்பட்ட புதிய உறுப்பினரிடமோ கையளிக்கப்படா தளவில் அந்தப் பதவிப் பிரமாணம் சட்டப்படி தவறாகாது என்பது ஒரு வாதம். அது தெரிந்து கொண்டே நீதி மன்ற ஆணையை அவமதிப்பது என்பது இன்னொரு வாதம். இரண்டுக்கும் அப்பால் நமத நாட்டின் நீதித் துறை அரசியல் அதிகாரத்துக் கும் கட்சி அரசியல் நெருக்குவாரங் கட்கும் கீழ்ப்பட்டே செயற்படுகிறது என்பதும் முக்கியமானது.

எப்படியாயினும், பதவிப் பிரமாணம் செய்வது பற்றிய பிரச்சினை நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றச் சபாநாயகருக்கும் இடையிலானது. சண்டித்தனமான முறையில் பதவிப் பிரமாணத்தைத் தடுப்பது பாராளு மன்ற நடத்தைவிதிகளை மட்டுமல்ல அதை விடக்குறைவான ஒழுங்கு முறைகளை வேண்டிநிற்கும் எந்த அமைப்பின் விதிகளையும் இழிவு படுத்துவதாகும்.

இவ்வளவு மோசமாக நடந்து கொண்ட பிறகு கூட எதுவுமே நடக்கவில்லை என்று பாசாங்கு பண்ணுகிற அமைச்சர்களும் அவர்களுக்குப் பரிந்து பேசுகிற சனாதிபதியும் இந்த நாட்டை இன்னுஞ் சிலகாலம் வழிநடத்தினால் இந்த நாட்டுக்கு எத்தகைய எதிர்காலம் இருக்கும் என்று கவலைப்படாமல் இருக்க முடியாது.

அதே வேளை 2001ம் ஆண்டு, பாராளுமன்றத்திற் 'கூச்சல்' போட்டு ஆவணங்களை எரித்துக் கலகஞ் செய்த கட்சியும் அதைப் பார்த்துக் கொண்டு புன்முறுவலுடன் அமர்ந் திருந்த அதன் தலைவரும் என்ன தகுதியுடையவர்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

இன்று பாராளுமன்ற அரசியல் வெட்கக் கேடான அதிகாரப் பேரத்திற்கான சந்தையாகத் தன்னை வெளிவெளியாக அடை யாளங் காட்டிவிட்டது. பாராளு மன்றம் என்பது கள்வர்குகை என்று வருணித்தார் லெனின். இன்று அவர் உயிருடனிருந்தால் கள்வர் களிடம் மன்னிப்புக் கேட்டிருப்பார்.


---

# இந்திய அரசியல் மாற்றத்தால் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் இல்லை!

## இந்திய மேலாதிக்கத்திற்கு வெள்ளையடிக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள்

இந்தியாவின் பாராளுமன்ற ஆட்சி யில் ஏற்பட்ட மாற்றம் இந்தியாவுக் குள்ளே எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற எதிர்பார்ப்புக்கள் மெல்ல மெல்ல ஏக்கங்களாகி முடிவில் ஏமாற்றங்க ளாகும் அடையாளங்கள் தோன்றி விட்டன. அமெரிக்காவுடன் நெருக்கத்தை மேலும் அதிகமாக்கு வதும் பொருளாதாரச் சீர்திருத் தங்கள் எனப்படும் பின்தங்கிய பொருளாதாரத் துறைகட்குச் சலுகைகளை இல்லாது செய்தல் போன்ற கொள்கைகளை முன்னெ டுப்பதும் தான் மன்மோகன்சிங் ஆட்சியின் பாதையுமாக உள்ளது. பச்சையான இந்துமதவாத வெறியை முன்வைக்கிற சக்திகள் புதிய ஆட்சியின் பின்னால் இல்லை என்பது மட்டுமே முக்கியமான வேறுபாடாக இருந்தாலும் மதவாத அரசியலுக்கு எதிரான ஒரு தீவிர நிலைப் பாட்டைக் காங்கிரஸ் மேற் கொள்ளுமா என்பது ஐயத்துக்குரியது.

பார்ப்பனியமும் இந்திய மேலாதிக்க வாதமுமே இந்தியாவின் அயற் கொள்கையைத் தீர்மானிக்கின்றன. புதிய ஆட்சி வந்த பின்பு தீக்ஷித் இந்தியாவின் பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பான பிரதான ஆலோசக ராக நியமனம் பெற்றுள்ளார். 1980 களின் பிற் கூற்றில் இலங்கையில் அவர் இந்திய உயர்தானிகராகக் கடமையாற்றிய காலத்தில் அவரது நடத்தை நிச்சயமாக ஒரு அயற் தூதரது நடத்தைக்கும் அப்பாற் சென்று இந்தியாவின் ஆணையை நிறைவேற்றும் ஒரு அதிகாரி போலவே அவரைக் காட்டியது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்திய அரசின் கொத்தடிமைகள் போலவே அன்று நடந்து வந்ததால் அவர்கட்கு அன்று தீக்ஷித் நெருக்க மானவராக இருந்தது போலவே இன்றும் இருந்து வருகிறார்கள். திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் தேசியக் கூட்டணியின் செயலாளருமான சம்பந்தன் தீக்ஷித் பற்றிப் புகழ்ந்து சொன்ன கருத்துக்கள், இந்தியா வின் நோக்கங்கள் பற்றி அவரும் அவரது கட்சியினரும் அறியாமல் சொன்னவையென நம்ப முடிய வில்லை. மாறாக இந்திய மேலாதிக் கத்தின் நோக்கத்துக்கு உடந்தை யானவர்களாகவே அவரது



கட்சியினர் தெரிகிறார்கள்.


இந்தியாவின் ஆட்சி மாறிய பின்னரும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் இந்தியா குறுக்கிட வேண்டும் என்று சிங்களப் பேரினவாத ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகியன கேட்கின்றன என்றால், அவை இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இந்தியாவின் மேலா திக்க நோக்கங்களை மாற்றவில்லை என்பதை நன்றாக அறிந்திருக் கின்றன என்றே தான் பொருட்படும். இது விளங்காத எவரும் அரசியற் பச்சிளங் குழந்தைகளாகவே இருக்க முடியும்.

இலங்கை இந்திய உறவுகளைப் பொறுத்தவரை, இலங்கையின் எந்தக் கட்சி ஆட்சியிலிருந்த போதும், பாரதிய ஜனதா ஆட்சியுடன் ஏற்படுத்திய உடன்படிக்கைகளும் புதிய உடன்படிக்கைகட்கான ஆலோசனைகளும் இந்திய ஆட்சிமாற்றத்தாலோ இலங்கையின் ஆட்சிமாற்றத்தாலோ இடைநிறுத்தப் படப்போவதில்லை. இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கை இலங்கைக்குச் சாதகமானதல்ல என்று தெரிந்தும் இலங்கை அரசாங்கம் அதில் ஒப்பமிட்டது அறியாமையாலல்ல. அது போலவே இலங்கை-இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை இலங்கையின் பாதுகாப்பை விடமுக்கியமாக இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத் தையே உறுதிப்படுத்தும் என்பதும் தெரியாத விடயமல்ல. இந்திய நலன் களை இலங்கையின் நலன்களாகக் காட்டக் கூடிய சக்திகள் இலங்கை யின் முக்கிய அரசியற் கட்சிகளில் ஒவ்வொன்றினுள்ளும் ஊடுருவி

**மோகன்**

யுள்ளன. அரசியற் கட்சிகட்கும் அப்பால் பண்பாட்டுத் தளத்திலும் மத அடிப்படையிலும் இந்த ஊடுருவல் தொடர்கிறது.

இந்திய நோக்கங்கள் பற்றி மாக்ஸிய லெனினியவாதிகள் 1980க்கு முன்பிருந்தே எச்சரித்து வந்தன. 1987ல் ஏற்பட்ட ஜே.ஆர் - ராஜீவ் உடன்படிக்கையின் போது அதை இனவாத நோக்கத்திற்காக இல்லாமல் விமர்சித்தவர்களும் மாக்ஸிய - லெனினியவாதிகளே. இந்தியாவின் குறுக்கீட்டை வெளி வெளியாகக் கண்டிக்க இயலாத நிலையில் விடுதலைப் புலிகளின் கைகள் கட்டப்பட்டிருந்தன. இவற்றின் விளைவாகத், தமிழ் மக்களிடையே



இந்தியா பற்றிய மயக்கங்கள் மிகுதியாகின. 1989ம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் மக்களிடையே ஏற்பட்ட தெளிவான மதிப்பீட்டின் விளைவாக இந்தியா பற்றிய மயக்கங்களை மேலும் வளர்க்க இயலாது போன அதே அரசியல் தலைமைகள் முதலில் பாரதிய ஜனதா ஆட்சி ஏற்பட்ட போது தமிழ் மக்களிடம் நம்பிக்கை யை ஏற்படுத்த முயன்று வந்தார்கள்.

இலங்கையின் தேசிய இனப்பிரச் சனை தொடர்பாக, இந்திய நிலைப் பாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுகிற சாடை தெரியவில்லை தெரிய நியாயமுமில்லை. வெளிவெளி யாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையின் சுமுகமான தீர்வை ஆதரிப்பதாக இந்தியா கூறிக் கொண்டாலும், சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது இந்தியா தன் குறுக்கீட்டைத் தொடர்ந்து வந்ததுடன், குழப்புகிற விதமான அறிக்கைகளும் இந்தியத் தரப்பி லிருந்து வெளியாகின. இதற்கும் மேலாகக் கிழக்கிலங்கையில் புதிய முரண்பாடுகளை வளர்த்தெடுப் பதிலும் மூன்றாந் தரப்புக் குறுக் கீட்டிலும் இந்தியா மும்முரமாகவே இருந்து வந்துள்ளது.

இத்தனைக்கும் பிறகும், இலங்கைத் தமிழர்கட்கு எதிரான கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்த ஒரு அரச யந்திரம், பாராளுமன்றத்தில் அதிகாரத்தில் உள்ள கட்சி மாறிய தால், மாறலாம் என்று மக்களை நம்ப வைப்பவர்கள், தமிழ் மக்களுக் குத் திட்டமிட்டுத் துரோகம் செய்கிற வர்களாகவே இருக்க முடியும்.

இந்தியாவின் உள் நோக்கங்கள் பற்றி அறிந்தும் வெளிவெளியாக இந்தியாவைக் கண்டிக்க இயலாத ஒரு நிலையில் இப்போது விடுதலைப் புலிகள் உள்ளதைப் பாவித்து இந்தியா பற்றிய மயக்கங்களுக்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியில் இறங்கியுள்ள தமிழ்ப் பாராளுமன்றத் தலைமை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப் படுத்துகிற காரியங்களி லேயே முனைப்பாக உள்ளது.

தமிழ் மக்களின் ஒற்றுமையை நிரூபிக்கிற பேரில் எத்தனையோ தடவைகளாகத் தமிழ் மக்கள் வாக்களித்து ஏமாந்துள்ளனர். அந்த வரலாறு இனியுந் தொடரலாமா? தமிழ்த் தலைவர்கள் என்பவர்களது பாராளுமன்ற அரசியல் திருக் கூத்துக்களையும் திரைமறைவு நாடகங்களையும் மக்கள் வெளிவெளியாகவே கேள்விக்கு உட்படுத்த வேண்டும். மக்கள் அரசியலைத் தம் வசமாக்குவதன் மூலமே அவர்களது விடுதலை உறுதிப்படும்.

– மோகன் –

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

### பேராசிரியர் சி. சிவசேகரம் (10)

தாய் மொழிக் கல்வி மூலம் கல்வி பரவலாக்கப்பட்டதை எல்லாரும் ஏற்றாலும் கல்வியின் தரம் குறைந்து விட்டது என்ற முரண்பாடு சில வட்டாரங்களில் எப்போதுமே இருந்து வந்தது. இந்த முறைப்பாட்டுக்குப் பல வேறு அடிப்படைகள் இருந்தன.

முக்கியமாக, ஆங்கிலத்திற் கல்வி பயின்றவர்கள் ஆங்கில மொழி அறிவை அறிவின் முக்கிய அளவு கோலாகக் கொண்டிருந்தனர். அதைவிடவும், கல்வி என்பது தகவல்களை நினைவில் வைத்திருந்து அவற்றைத் தொகுத்து வழங்கும் ஆற்றலாகவே கருதப்பட்டது. பாடசாலைகளில் விஞ்ஞானப்பாடங்கள் சிறுபான்மை யானோராலேயே கற்கப்பட்ட கொலனி ஆட்சிக்காலத்திலும் கொலனி ஆட்சி நீங்கிய ஆண்டுகளின் முற்பகுதியிலும் இந்த விதமான ஆற்றல் முக்கியமாக இருந்ததில் வியப்பில்லை. ஏனெனில், கல்வியின் அதி உச்ச சாதனை உயர்ந்த அரசாங்க நிருவாகப் பதவியில் அமர்வது என்றே அன்று ஏற்கப்பட்டது. அந்த நிலவரம் படிப்படியாக மாறினாலும் அதையொட்டிய சிந்தனை முறை தொடர்ந்தது.

**கல்வி என்பது ஒருவரது தனிப்பட்ட மேம்பாட்டிற்கு குறிப்பாக உயர்பதவி. கூடிய வருமானம் சமுதாயச் செல்வாக்கு என்பனவற்றிற்கு அழுத்தம் செலுத்தும் போது அந்த எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கு மேலாகக் கல்வியினின்று ஒருவர் எதையும் பெற விரும்புவதில்லை.**

சமூகக் கல்வி தொடர்பான பாடங்களில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எழுதிய பாடநூல்கள் சிறிது சிறிதாக அறிமுக மாகின. இதற்குக் கல்வித் திணைக் களத்தின் ஊக்குவிப்பும் இருந்தது. பாடசாலைப் பாடத்திட்டத்தில் வரலாறு, குடியியல், புவியியல் போன்றவற்றில் இலங்கை தொடர்பான விடயங்கட்கு அழுத்தம் தெரிவிக்கப்பட வேண்டிய தேவையும் இதற்கு ஒரு தூண்டுதலானது.

எனினும் விஞ்ஞானக் கல்வியும் (எண் கணிதம் தவிர்ந்த) கணிதமும் தொடர்ந்தும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டு வந்தது மட்டுமல்லாமல் பாடசாலை நூல்கள் அனைத்தும் பிரித்தானியக் கம்பனிகளால் பிரித்தானியப் பாடநூலாசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாகவே இருந்தன. தமது நாட்டில் விஞ்ஞான, கணிதப் படிப்புப் பெற்றவர்களின் தொகை பெரிதாக இல்லாததும் அவர்களை ஊக்குவிக்கக் கூடியளவுக்கு ஒரு வலிய உள்நாட்டுச் சந்தை இல்லாததும் காரணமாகத் தாய்மொழிக் கல்வி விஞ்ஞானப் பாடங்கட்கு விரிவுபடுத்தப்படும் வரை விஞ்ஞானப்பாட நூல்கள் பெருமளவும் பிரித்தானிய நூல் வெளியீட்டகங்களின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதிக்கத்திலேயே இருந்தன.

விலக்காக, உள்நாட்டுச் சூழலைக் கருத்திற் கொண்டு விஞ்ஞானப் பாடநூல்களை எழுதி வெளியிட்டவர்கள் இருந்தார்கள். என் நினைவில் இன்றும் உள்ள ஒரு நூல் புலிமோடு, ஜொஷுவா என்ற மலையாளத்து ஆசிரியர்கள் எழுதிய தாவரவியல் நூலாகும். இந்த நாட்டின் தாவரங்களின் பேர்களைக் கலைச் சொற்களாகவும் வழமையான ஆங்கில, சிங்களத், தமிழ்ப் பேர்களாகவும் அந்த நூலிற் தொகுத்துத் தந்திருந்தார்கள். அவர்கள் மலையாளிகளாக அமைய முக்கியமான ஒரு காரணம் கொலனி ஆட்சியின் இறுதிக் காலந் தொட்டு அதன் நீக்கத்தின் பின்பான சில ஆண்டுகள் வரை இந்த நாட்டின் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க மலையாளிகள் பலர் இங்கு வரவழைக்கப் பட்டது எனலாம். தாய்மொழிப் புலமையும் விஞ்ஞான கணித பாடங்களில் அறிவும் தாய்மொழியில் நூல்களை ஆக்கும் ஆர்வமும் தாய் மொழிக் கல்வியின் மீது நம்பிக்கையும் கொண்ட கல்வியாளர்கள் அநேகர் அன்று இருந்திருக்க இடமில்லை. தாய்மொழிக் கல்விமுறையில் விஞ்ஞான பாடங்களில்லாத பிற பாடங்களைத் தாய்மொழியிற் கற்ற ஒரு தலைமுறை கழிந்த பின்பே தாய்மொழியில் விஞ்ஞானப் பாடநூல்கள் வெளியாயின.

இங்கே வேறு புதிய சிக்கல்கள் தோன்றத் தொடங்கின. ஆங்கில வாயிலாக நமக்கு அறிமுகமான விஞ்ஞானக் கலைச் சொற்களுக்குரிய சிங்கள தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கும் தேவை, 1956ல் சிங்களம் அரசகரும் மொழியான பின்னரே உரியளவு கவனிப்பைப் பெற்றது. அரசகரும மொழித் திணைக்களம் இப்பொறுப்பை ஏற்றுக் கனதியான முயற்சிகளையும் மேற்கொண்டது.

பாடசாலைக் கல்விக்கும் மேலாகப், பல்கலைக்கழகக் கல்விக்குமாகக் கலைச் சொல்லாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும், கலைச் சொற்களின் தெரிவு பற்றிய முரண்பாடுகளால் சில பாரிய குறைபாடுகளுக்கும் இடமேற்பட்டது. தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தை வழிநடத்திய கொள்கையின் இரண்டு பெரிய பலவீனங்களில் முதலாவது, ஆங்கிலச் சொல்லின் பொருளைத் தமிழிற் சரிவரக் குறிக்குமாறாகத் தமிழ்க் கலைச்சொல் அமைய வேண்டும் என்பது. மற்றது அயற் பேர்களைத் தமிழ்ப்படுத்துவதில் தமிழ் இலக்கண விதிகளைப் பேணுவது அவசியம் என்பது. பழமைவாதிகளின் ஆதிக்கம் இல்லாவிடினும் சொல்லாக்கக் குழுக்கள் பலவற்றிற் பழமைவாதிகள் ஓரிருவராவது இருந்தனர். எனவே புதிததாகப் புனையப்பட்ட கலைச் சொற்கள் சில ஆங்கிலச் சொல்லைவிட அயற்தன்மையுடன் அமையவும் நேர்ந்தது. இவ்வாறான குறைபாடுகள் சிங்கள மொழி தொடர்பாகவும் இருந்தன. எனினும் மொத்தமாகச் சொல்வதானால், பல்வேறு விஞ்ஞான, தொழில்நுட்பப் பாடங்கட்கு மிகவும் தேவையான கலைச் சொற்கள் 1960களின் நடுப்பகுதிக்கு முன்னரே தொகுக்கப்பட்டுவிட்டன. வெவ்வேறு துறைகட்கான கலைச் சொல்லாக்க முறைகளில் முரண்பாடுகள் இருந்த போதும் மிகவும் பொறுப்புணர்வுடனேயே கலைச் சொல்லாக்கம் செய்யப்பட்டது என்றே கூற வேண்டும். தமிழகத்தை விட இலங்கையில் இத்துறையில் தமிழுக்காக அதிகம் சாதிக்கப்பட்டது என்பதும் முக்கியமானது.

எவ்வாறாயினும் நாட்டின் கல்விக் கொள்கை தேசிய அரசியல் பொருளாதார இலக்கில் அமைந்த ஒரு கல்விக் கொள்கையா என்பது பற்றிய கேள்விக்கு என்னால் சாதகமான ஒரு விடையைத் தர இயலாது. ஏனெனில், 1956ல் அதிகாரத்துக்கு வந்த தேசிய முதலாளியம் நாட்டின் முழுமையான பொருளாதார சுதந்திரத்தை நோக்கி நாட்டை வழி நடத்தும் நீண்டகாலப்பார்வையைக் கொண்டிருக்கவில்லை. அன்றாட அரச அலுவல்களைச் சிங்கள மொழியிற் செய்யுமளவுக்கு நிருவாகத் துறையிலும் சட்டம் போன்ற துறைகளிலும் காட்டப்பட்ட அக்கறைக்குச் சிங்களப் பேரினவாத நோக்கம் முக்கிய பங்களித்தது. இதேவிதமான அக்கறை விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற துறைகளிற் காட்டப்பட்டதாகக் கூற இயலாது. இதற்கு இவ்வாறான துறைகளில் கல்வி பயின்றவர்களது தனிப்பட்ட எதிர்ப்பார்ப்புக்கள் சமூகத் தேவைகளினின்றும் விலகிநின்றது ஒரு முக்கியமான காரணமெனலாம்.

கல்வி என்பது ஒருவரது தனிப்பட்ட மேம்பாட்டுக்கு குறிப்பாக, உயர்பதவி, கூடிய வருமானம், சமுதாயச் செல்வாக்கு என்பவற்றுக்கு, அதிக அழுத்தம் செலுத்தும் போது, அந்த எதிர்பார்புக்களை நிறைவு செய்வதற்கு மேலாகக் கல்வியினின்று ஒருவர் எதையும் பெற விரும்புவதில்லை. கல்வியின் நோக்கம், உயர் பரீட்சைகளிற் தேறுவது, பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு உயர்கல்வி நிறுவனத்திலோ இடம் பெற்றுப்பட்டம் பெறுவது, உயர் உத்தியோகத்தில் அமர்வது என்ற படி உரிமையிலேயே நடுத்தரவர்க்கத்தினாலும் அவர்களைப் பார்த்துப் பின் தொடர முனைந்த பல சமூகக் கீழ்த்தட்டினராலும் காணப்பட்டது.

சமூக முன்னேற்றத்துக்கும் தாழ் நிலையில் உள்ள மக்களின் பொதுவான உயர்வுக்குமான ஒரு கல்விக் கொள்கையை ஒரு தேசிய முதலாளிய அரசிடமோ தரகு முதலாளிய அரசிடமோ எதிர்பார்க்க இயலாது. எனினும், 1950க்குப் பின், ஒரு பத்தாண்டுக் காலம் வரை, எழுச்சி பெற்றுவந்த தேசிய உணர்வு, தாய்மொழிக் கல்விக்கும் தாய் மொழி மூலம் செயலாற்றுவதற்குமான ஊக்குவிப்புக்குக் காரணமாயிற்று. ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களமும் தமிழும் பாடசாலைக் கல்விக்கான மொழிகளாக வந்துவிட்டநிலையில், ஆங்கிலத்தையே கல்விக்கு உகந்த மொழி என்று கருதிவந்த ஒரு பரம்பரை ஒரு புறம் அதிலிருந்து தப்புகிற வழியையும் மறுபுறம் தாய்மொழிக்கல்விக்குக் குழிபறிக்கும் வழிகளையும் நாடியது.

தேசிய முதலாளியம் தாய் மொழிக்கல்வி பற்றி எவ்வளவு நேர்மையாக இருந்தது என்பதற்கான சான்றுகள்

தொடர்ச்சி 10ம் பக்கம்..

---

# ஆசிரியரும் சமத்துவமும்

### - வி. ராம்நாத் -

ஆசிரியர் என்பவர் இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவ முடைய ஒருவராக இருக்கிறார். அதிலும் மேலைத்தேய நாடுகளை விட இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் ஆசிரியரின் பங்கு ஒரு சமூகத்திற்கு அதிகமாகவே தேவைப் படுகின்றது. அந்த வகையில் ஒரு குடும்பத்தினதோ அல்லது ஒரு சமூகத்தினதோ அல்லது ஒரு பிரதேசத்தினதோ அல்லது ஒரு நாட்டினதோ வளர்ச்சிக்கு ஒரு ஆசிரியர் முக்கிய காரணமாக இருக்கின்றார் என்பதில் ஐயமில்லை. ஒரு சமூகம் உயர்ந்த நல்ல சமூகமாக மிளிர வேண்டுமாயின் அச்சமூகத் திற்கு புதிதாக உள்வாங் கப்படும் உறுப்பினர்கள் நல்ல முறையில் நெறிப்படுத்தப்பட வேண்டும். எனவே புதிய உறுப் பினர்கள் பொருத்தமான ஆளுமை யைப் பெற்று ஒரு சமூகத்திற்கு கிடைப்பதற்கு முதலில் குடும்பச் சூழல் காரணமாக அமைந்தாலும் அதைவிடவும் பெரும் பங்கு வகிப்பது பாடசாலையே ஆகும். அந்த வகையில் பாடசாலையிலும் ஒவ்வொரு ஆசிரியருமே மாணவர் களின் வளர்ச்சிக்கு காரண கர்த்தாக்களாவார்கள்.

சமத்துவம் என்பது எந்த நேரத்திலும் எல்லோரையும் சமநிலையில் வைத்து நோக்குகின்ற பண்பாகும். இந்தப் பண்பானது ஒரு ஆசிரியரிடம் கட்டாயம் காணப்பட வேண்டும். பரபரப்பான இந்த உலகில் களியாட்டங்கள் நிறைந்துள்ள போதும் தொழில் நுட்பத்தில் துரித முன்னேற்றம் அடைந்துள்ளது. எனவே மக்கள் அதற்கு ஈடு கொடுத்து பரபரப்பாக வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அந்த வாழ்க்கையில் நிலையில்லாத இன்பத்தை பெறுவதற்காக துரிதமாக பணத்தை தேடுவதிலேயே முன்னிற்கின்றார் கள். இவர்கள் குறுகிய பார்வை அல்லது குறுகிய நோக்கோடு வாழ்கின்றார்களே தவிர நீண்ட பார்வை அல்லது தூர நோக்கு இவர்களிடம் இல்லை. அதுவும் இந்த குறுகிய பார்வை அதிகமாக புத்திஜீவிகளிடம் காணப்படுவதே மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அதனால் இப்படிப்பட்டவர்கள் தமது முன்னேற்றத்திற்காக வேலையை அதிகமாக செய்வதோடு, குடும்பத்தில் கணவன், மனைவி ஆகிய இருவருமே வேலை செய்கிறார்கள். இவ்வாறு வேலை செய்யும் அதிகமானவர்கள் தமது பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதனால் அவ்வாறான பிள்ளைகள் தமது பெற்றோர்களிடமிருந்து அன்பு கிடைக்காமல் உளப்பாதிப்புக் குள்ளாகி எதிர்காலத்தில் முரணான நடத்தையை வெளிக்காட்டு வார்கள். எனவே ஒரு ஆசிரியர் அவ்வாறான பிரச்சினையுடையவர் களை இனம் கண்டு அவர்களுக்கு உளப்பரிகாரம், ஆலோசனை என்பன செய்து அவர்களை எல்லா மாணவர்களுடனும் சமத்துவப்படுத்த வேண்டும்.

ஒரு குடும்பத்தால் கவனிக்கப்படாத பிள்ளையாக இருந்தாலும் சரி குடும்பத்தால் தவறான வழி நடத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும் சரி அவ்வாறானவர்களை ஒரு ஆசிரியர் எதிர்காலத்தில் பொது நோக்குடைய சமூகத்திற்கு பொருத்தமான நபராக உருவாவதற்கு சிறந்த சிற்பி போல திகழவேண்டும். உதாரணமாக இன்றைய இலங்கை சமூகத்தை எடுத்து நோக்குவோமாயின் இங்கு பல்வேறுபட்ட இனம், மொழி, சமயம் சார்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். அதனால் இங்கு நீண்டகாலமாகவே இன மோதல்கள், இன ஒடுக்கலுக் கான விடுதலை போராட்டங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. எனினும் இன்று இது ஓரளவுக்கு தணிவுக்கு வந்துள்ள நிலையில், எமது மூதாதையர்களால் வளர்த்து விடப்பட்ட இனவெறி தன் இனத்தையே அழித்துக் கொண்டு இருக்கின்றது. அதாவது அன்று இனங்களுக்கிடையில் நடைபெற்ற மோதல்கள் இன்று பிரதேசவாத மாக மருவிவருகின்றது. எனவே இதனை வளரவிடாமல் பாதுகாப்பது என்பது வருங்கால சமூகத்திட மிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஆசிரியர்களே உழைக்க வேண்டும். எனவே எந்த ஒரு ஆசிரியனும் தன் சொந்த இடத்தில் மட்டுமே கடமையை கண்ணியமாக செய்வேன் என எண்ணாமல் எங்கு சேவை செய்தாலும் அந்த இடத்திற்கு பெருமை சேர்ப்பவனாக செயல்பட வேண்டும்.

ஒரு ஆசிரியர் வகுப்பறையில் கற்பிக் கின்ற போது தனித்தனி இயல்புடைய நாற்பது பிள்ளைகள் வரை காணப் படும். எனவே ஆசிரியர் அந்நாற்பது பிள்ளைகளையும் சமத்துவமாக பார்க்க வேண்டும். அதைவிடுத்து ஒரு சிலரை மட்டும் கவனத்தில் கொள்கின்ற போது ஏனைய மாணவர்கள் எதிர்காலத்தில் முரணான துலங்கல்களை வெளிக் காட்டுபவர்களாக உருவா கின்றார்கள். அதனால் கல்வி என்ற சொல்லின் பொருளே பொய்த்து விடுகின்றது. அதாவது ஆங்கில சிந்தனையாளரான பேர்ட்ரன்ட் ரஸல் ''கல்வி'' என்பது ''தனியாள் விருத்திக்கு சந்தர்ப்பங்களை வழங்கி தடைகளை விலக்கி கலாசார அருங்கொடைகளை ஒப்படைத்து சமூகத்திற்கு பலனுள்ள தனியாளை உருவாக்கும் செயன்முறையாகும்" என்கிறார். அதே போல் மகாத்மா காந்தி "கல்வி என்பது பிள்ளை யிடமும், வளர்ந்தோரிடமும் உடல் உள்ளம் ஆன்மா என்றவகையில் உயர்நிலைகளை வெளிக் கொணர்தலே" என்கிறார். எனவே இவர்களின் கருத்துப்படி கல்வியை வழங்கும் ஒரு ஆசிரியரிடம் சமத்துவமான வகிபங்கு இல்லாவிடின் ரஸல் கூறுவதைப்போல் ஒவ்வொரு தனியாளையும் சமூகத்திற்கு பயனுள்ள உறுப்பினராக ஆக்க முடியாது. காந்தியடிகள் கூறுவதைப் போல் ஒவ்வொரு நபரிடமிருந்தும் உயர்நிலைகளை வெளிக்கொணர முடியாது. எனவே ஒரு ஆசிரியர் சமத்துவத்தைப் பேண வேண்டும்.

அடுத்ததாக இலங்கையிலே இன்று நடந்த யுத்தத்தின் காரணமாக எல்லா மக்களும் சின்னாபின்னப்பட்டு ஏதோ ஒன்றை இழந்து வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றார்கள். அத்தோடு ஒவ்வொருவரும் தமது தொழிலுக்காகவும் வெவ்வேறு இடங்களுக்கு சென்று வாழ்கின் றார்கள். எனவே இவ்வாறு வாழ் கின்றவர்கள் சமத்துவம் உடையவர் களாக இருப்பதில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். அதிலும் ஆசிரி யர்கள் இதில் அதிக பிரயத்தனம் எடுக்க வேண்டும். ஏன் இங்கு ஆசிரியர் அதிக கவனம் எடுக்க வேண்டுமெனில் ஏனைய தொழில் செய்பவர்களிடம் தமது தேவை களை நிறைவேற்றுவதற்காக வளர்ந் தோரே அதிகமாக வருவார்கள். ஆனால் ஆசிரியரை பொறுத்த வரையில் அவர்களின் அரவணைப் பில் குழந்தைகள் வளர்க்கப்படு கின்றார்கள். எனவே இவ்வாறான பிள்ளைகளிடம் பாகுபாடு காட்டும் பொழுது அப்பிள்ளைகளின் உளம் இலகுவில் பாதிக்கப்பட்டு எதிர் காலத்தில் முரண்பாட்டு நடத்தையை வெளிக்காட்டுவார்கள். இதனால் ஒரு சமூகமே பாதிக்கப்பட்டு பெரிய அழிவையே ஏற்படுத்தி விடும். எனவே ஒரு ஆசிரியர் பாடசாலை யைப் பொறுத்தவரையில் தனது உறவு, தனது ஊரார், தனது பிரதேசத்தவர், தனது சமூகத்தவர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு வரையும் நோக்காது பொதுவாக தனது பிள்ளைகள் தன்னை நம்பியிருக்கும் எதிர்காலச் சிகரங்கள் என்று உயர்வாக சிந்தித்து கல்வியை வழங்க வேண்டும்.

சமத்துவம் அல்லது சமவுடமை என்பது இன்று கல்வியலாளர்கள் மத்தியிலேயே அதிகமாக பின்தள்ளப் பட்ட நிலையில் காணப்படுகின்றது. அதற்கு மூலகாரணமும் ஒரு ஆசிரியராகவே இருக்க முடியும். உதாரணமாக ஆசிரியர் தொழிலில் இருக்கும் ஒருவர் அந்த தொழில் சாதாரண தொழில் அல்லது உயர்வு குன்றிய தொழில் என்று

தொடர்ச்சி 8ம் பக்கம்..

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இந்துத்துவ இந்தியாவும்

## சிங்கள பௌத்த ஸ்ரீலங்காவும்

இந்தியாவின் இந்துத்துவவாதிகள் எவ்வளவு தான் இந்தியமரபு இந்து மரபு என்பன பற்றிப் பேசினாலும் அவர்களது அக்கறை இந்திய மக்கள் பற்றியதோ இந்தியாவின் பழையவாழ்க்கை முறையை மீட்டெடுப்பதோ பற்றியதல்ல. எவ்வளவுக்கெவ்வளவு இந்துத்துவம் பேசினார்களோ அவ்வளவுக்கு ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டனர். ராஜீவ் காந்தியின் காலத்தில் அமெரிக்காவுடனான நெருக்கம் தொடங்கினாலும் பாரதிய ஜனதா ஆட்சியின் போது அது மேலும் வலுவடைந்தது. இன்று இந்தியா அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெருங்கிய நண்பனாக இருக்கிறது. முஸ்லிம்கட்கு எதிரான கடும் போக்கு இந்துத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பொதுவான ஒரு பண்பு. அமெரிக்காவுக்குச் சீனாவுடன் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் போட்டியில் இந்தியாவின் ஆட்சியாளர்களது சீனவிரோத முனைப்புப் பயன்படும் என்பது அமெரிக்காவின் கணிப்பு. எனவே இந்துத்துவவாதிகளது கிறிஸ்துவ விரோதம் அமெரிக்காவால் கண்டு கொள்ளப் போவதில்லை.

இந்துத்துவம் என்பது இந்தியாவின் ஆளும் அதிகார வர்க்கத்தினதும், குறிப்பாக பார்ப்பன, வணிகச் சாதிகளைச் சார்ந்தவர்களது வர்க்க – சாதிய அதிகாரம் பற்றியது. அதை முன்னிலைப்படுத்த மதம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அந்த



வர்க்கத்தின் நலன்கள் தேசிய முதலாளிய நலன்களாக இருந்த காலம் இந்திய விடுதலையின் பின்பு படிப்படியாக மாறி இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் உடன்பாடு காணுகிற தரகு முதலாளியத் தன்மையைப் பெற்றுள்ளது.

இலங்கையில் சிங்கள பௌத்தம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அடையாளத்துடன் தன்னை முன்னிறுத்தியது. எனினும் அதன் இலக்கு ஏகாதிபத்தியவாதிகளின் இடத்தைச் சிங்கள பௌத்த முதலாளிகளுக்கும் பெற்றுத் தருவதாகவே இருந்தது. அதனிடம் இலங்கைத் தேசியப் பார்வை என்று எதுவுமே இருந்ததில்லை. அதன் தேசியம் சிங்கள பௌத்த மேலாதிக்கமே அல்லாமல் வேறெதுவுமில்லை. சிங்கள பௌத்தம் என்பது சில்லறை அரசியற் கட்சிகளுடன் வெளிவெளியாக அடையாளங் காணப்பட்டு வந்த போதும் அரசியல் காரணங்கட்காகப் பௌத்த மதத்துக்கு மாறிய கிறிஸ்துவர்களான ஜே.ஆர். ஜயவர்தன, பண்டாரநாயக்க போன்றோர் மதம் மாறியதன் நோக்கம் சிங்கள பௌத்த நிலைப்பாட்டைக் காட்டி தேசிய இனப்பிரச்சினை மேலும் மோசமானதன் பிறகு சிங்கள பௌத்தம் ஒரு பெரிய அரசியல் சக்தியாக வளர்த்தெடுக்கப்பட்டது. முதலாளிய வர்க்க நலன்களைப் பேணும் கட்சிகளது ஒரு அரசியல் ஆயுதமாக இருந்த சிங்கள பௌத்தம் முன்னெப்போதையும் விடத் தீவிரமான, இந்துத்துவத்தின் ஃபாஸிஸப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டதான ஒரு சக்தியாக வளர்ந்துள்ளது.



இந்துத்துவம் போலவே அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து இலங்கையின் பொருளாதாரமும் பண்பாடும் உலகமயமாதலால் சீரழிவுக்கு உள்ளாவது பற்றிய அக்கறையைக் காட்டாதுள்ளது. அதன் பௌத்த விழுமியங்கள் என்பன இந்துத்துவவாதிகளது இந்து விழுமியங்கள் போலப் போலியானவையே.

முதலாளியப் பாராளுமன்ற அரசியல் மூலம் மக்களது பிரச்சினைகட்குத் தீர்வை வழங்க இயலாது போனால் நாடு எதிர் நோக்குகிற அரசியல் நெருக்கடி இரண்டில் ஒரு வழியிலேயே போக இயலும். என்று சோஷலிசப் புரட்சிகரப் பாதை மற்றது ஃபாஸிஸப் பாதை.

சோஷலிசப் பாதையை மக்கள் தெரிந்தெடுக்க இடதுசாரி இயக்கம் வலுவுடையதாக இருக்க வேண்டும். அல்லாது போனால் ஃபாஸிஸ சக்திகளே மேலோங்கும். அதற்கு நிச்சயமாக ஏகாதிபத்தியத்தின் ஆசியும் அனுசரணையும் உண்டு.

எனவே தான் உண்மையான இடதுசாரிச் சக்திகளது தோளில் உள்ள சுமை பெரிது. அதை வெகுசனங்களுடன் பகிர்வதிலேயே அவர்களது வெற்றியும் நாட்டின் எதிர்காலமும் தங்கியுள்ளன.


# ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது

## நிறுத்தப்பட வேண்டும்

மட்டக்களப்பில் வசித்த ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் மட்டக்களப்பில் நித்தியானந்தன் சுட்டுக் கொல்லப்பட்டார். 1989 ரிச்சட் டீ. சொய்சா, திவயின படப்பிடிப்பளர் சுனில், சட்டன பத்திரிகை ஆசிரியர், தினமுரசு ஆசிரியர் அற்புதராஜா ஆகியோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கார்ட்டூனிஸ்ட் யூனுஸ் கத்தியால் குத்தப்பட்டார். இக்பால் அத்தாஸின் வீட்டிற்கு கைக்குண்டெறியப்பட்டது. எவ்வித காரணமுமின்றி பத்திரிகையாளர் சிவராமின் வீடு பொலிஸாரினால் சோதனை இடப்பட்டது. இப்படி பல சம்பவங்கள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடந்துள்ளன.

பத்திரிகையாளர்களின் அல்லது ஊடகவியலாளர்களின் தொழில்சார் கடமை மிகவும் பொறுப்பு வாய்ந்ததுடன் எக்காலத்திலும் ஆபத்து நிறைந்ததுமாகவே இருந்து வருகிறது. அவர்கள் தவறாக நடந்தால் திருத்த இடமிருக்கிறது. திருத்த முடியாத போது அல்லது பாரதூரமாக தவறுகள் நடந்து விட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன.

உண்மைகளை எழுதியற்காகவோ வெளிக் கொணர்ந்ததற்காகவோ ஒரு ஊடகவியலாளர் கொலை செய்யப்படுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்தி ஏற்றுக் கொள்ள முடியாது. ஊடகவியலாளர்கள் அரசாங்கப்படைகளினாலும் ஏனைய அமைப்புகளினாலும், வெளிநாட்டு உளவுப்படைகளினாலும், கூலிப்படைகளினாலும் தனிநபர்களாலும் கொல்லப்படுகிறார்கள். ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகிறார்கள்: இம்சைக்குட்படுத்தப்படுகிறார்கள். இந்நிலை உலகம் பூராவும் நடைபெற்று வருகின்றன.



தனிநபருக்கெதிரான குற்றச் செயல்கள். அடக்குமுறைகள் மட்டுமன்றி ஒரு சமூகத்திற்கு எதிரான குற்றச் செயல்கள், அதன் மீதான ஒடுக்குமுறைகள் என்பவற்றை மக்களுக்கு தெரியப்படுத்தி அதனை செய்பவர்களை அம்பலப்படுத்துகின்றபோது அக்குற்றச் செயல்களை ஒடுக்குமுறைகளை புரிபவர்கள் ஊடகவியலாளர்களை தாக்குகின்றனர். இலங்கை அரசாங்கம் சில பத்திரிகையாளர்களை கைது செய்து தடுத்து வைத்திருந்தமை தெரிந்ததே.

தனிநபர்கள் மீதும் சமூகத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்துபவர்கள் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் தம்வசப்படுத்திக் கொள்ள பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. அதன் உயர்ந்த வடிவங்களாகவே தாக்குதல், கைதுசெய்தல், சித்திரவதைக்குட்படுத்தல், கொலை செய்தல் என்பன இடம்பெறுகின்றன.

அதிகமாக ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்படுவதில்லை. அக்கொலைகள் திட்டமிட்ட ரீதியில் செய்யப்படுவதால் கண்டு பிடிக்கப்படுவதில்லை: மாறாக மறைக்கப்படுகின்றன.

### நடேசனின் படுகொலை மிருகத்தனமானது

வர்க்க ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூகத்தில் ஆளும் வர்க்க நலன்களுக்குட்பட்டதாகவே ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருக்கும். ஊடகங்கள் ஆளும்வர்க்கத்தின் அல்லது மேலாதிக்கம் செலுத்தும் சக்திகளின் ஊதுகுழலாகவே இருக்க வேண்டும் என்பதே ஆளும் வர்க்கத்தினதும் மேலாதிக்கம் செலுத்தும் சக்திகளினதும் நிலைப்பாடாகும். மக்களின் சார்பாகவும், அடக்கப்படுபவர்களின் சார்பாகவும் ஊடகவியலாளர்கள் செயற்படும் போது மக்களுக்கும் ஆளும் வர்க்கத்திற்குமிடையில் முரண்பாடாகிறது. அப்போது நிராயுதபாணிகளான ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர். தடுத்து வைக்கப்படுகின்றதை கொலை செய்யப்படு கின்றனர்.

இலங்கையில் 1979ற்கு பிறகு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வந்துள்ளன. அரச அடக்கு முறை அதிகரித்த காலங்களில் மறைக்கப்பட்ட பல உண்மைகளை ஊடகவியலாளர்கள் வெளிக் கொண்டுவந்தனர். ரிச்சட் டீ சொய்சா 1988, 1989 கால கட்டத்தில் நடைபெற்ற கொலைகளை அம்பலப்படுத்தியதாலேயே கொலை செய்யப்பட்டார்.

தமிழ் பிரதேசங்களில் நடைபெற்ற இனப்படுகொலைகள். கைதுகள் தாக்குதல்கள் பற்றி தமிழ் பத்திரிகையாளர்கள் அவ்வப்போது செய்திகளை வெளியிட்டு வந்தனர். யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள போதும் தமிழ் பிரதேசங்களின் உண்மை நிலைமையை வெளியிட்டு வருகின்றனர். அவ்வாறான கடமையில் ஈடுபட்டவர்தன் நடேசன். யுத்தநிறுத்தப்பட்டுள்ள போது இவ்வாறான கொலைகள் தமிழ் பிரதேசங்களில் இடம்பெறுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நாளாந்தம் கொலைகள் நடந்த வண்ணமிருக்கிறது.

தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கலின் இன்னொரு வடிவ மாகவே தமிழ் ஊடகவியலாளர் கொலைகளை மதிப்பிட முடிகிறது. ஊடகவியலாளர்களிடையே ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளினாலும், பொதுவாக ஊடக சுதந்திரத்தின் மீது அக்கறை கொண்ட சகலரினதும் கூட்டு நடவடிக்கைகளினாலும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதற்கும் கொலை செய்யப்படுவதற்கும் எதிராக பலமான மக்கள் அபிப்பிராயம் கட்டி வளர்க்கப்பட வேண்டும். அதற்கூடாக மக்களை அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

நடேசனின் படுகொலை மிருகத்தனமான அநாகரிகச் செயல் எனக் கண்டிக்கின்றோம். ஒருவர் கொண்டிருக்கும் கருத்துக்காக அதனை வெளிப்படுத்தும் எழுத்துக்காக யாராலும் யாரும் கொல்லப்படக் கூடாது என்பதை வலியுறுத்தி அதற்கு முற்றுப்புள்ளி வைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

7ம் பக்க தொடர்ச்சி

### ஆசிரியரும்...

தான் எண்ணுவதோடு மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக நீ வைத்திய ராக வரவேண்டும், பொறியியலாள ராக வரவேண்டும் என்று கூறி கற்பிப்பதனால் மாணவர்களுக்கு சிறிய வயதிலேயே தொழில் பற்றிய ஏற்றத்தாழ்வை பெறுவதனால் அவர்களுக்கு அந்த பொறியியல் துறையோ, வைத்திய துறையோ கிடைக்காத போது அப்பிள்ளை தாழ்வு மனப்பாங்கை வளர்த்து ஏனைய தொழிலை நன்றாக செய்யாமல் பின்தள்ளப்படுகின்றார். எனவே ஒரு ஆசிரியருக்கு எல்லா தொழிலையும் சமத்துவமாக பார்க்கும் மனப்பாங்கு இருக்க வேண்டும்.

ஆசிரியர் என்ற சொல்லே மனிதம், சமத்துவம், சீர்திருத்தம் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. அதாவது ஆசிரியர் என்றால் ஆங்கிலத்தில் TEACHER எனப்படுகின்றது. இந்த TEACHER என்பதில் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு அர்த்தம் சொல்லப் பட்டிருக்கின்றது. அதாவது.

T என்றால் Training எனவும் இது தமிழில் பயிற்சி எனவும்

E என்றால் Education எனவும் இது தமிழில் கல்வி எனவும்

A என்றால் Ability எனவும் இது தமிழில் திறமை எனவும்

C என்றால் Creativity எனவும் இது தமிழில் படைப்புத்திறன் எனவும்

H என்றால் Humanism எனவும் இது தமிழில் மனிதம் எனவும்

E என்றால் Efficiency எனவும் இது தமிழில் வினைத்திறன் எனவும்

R என்றால் Reformer எனவும் இது தமிழில் சீர்திருத்தவாதி எனவும். எனவே ஒவ்வொரு ஆசிரியரும் இவற்றை அடைந்திருப்பதோடு மாணவர்கள் இவ்விடயங்களை பெற்றுக்கொள்வதற்குரிய முறையில் சமத்துவமாக கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய ஆட்சி மாற்றமும் எதிர்பார்ப்புக்களும்

- நரசிம்மா -

இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் பாரதிய ஜனதா ஆட்சியின் போது கடைப்பிடிக்கப்பட்ட பல கொள்கைகட்கும் நடைமுறைகட்கும் எதிராக மக்கள் அளித்த தீர்ப்பு என்பதில் ஆய்வாளர்களிடையே பெரிய கருத்து வேறுபாடில்லை. ஆனாலும் எதெதெற்காகவெல்லாம் பாரதிய ஜனதா ஆட்சி வெறுக்கப்பட்டதோ அதையெல்லாம் காங்கிரஸ் ஆட்சி தவிர்க்குமா என்பது தான் முக்கியமானது.

சில விடயங்களில் நிச்சயமாகக் காங்கிரஸ் ஆட்சி பாரதிய ஜனதா ஆட்சியிலிருந்து வேறுபட்ட முறையில் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கலாம். குறிப்பாக பாரதிய ஜனதா ஆட்சி கடைப்பிடித்த மதவாதக் கொள்கையைக் காங்கிரஸ் ஆட்சி நிராகரிக்கும் என்பது முக்கியமான ஒரு வேறுபாடு.

பொருளாதார வளர்ச்சி பற்றிய கொள்கையில் வேலை வாய்ப்பு, விவசாயத்துறையிலுள்ளோரது நலன்கள், பெண்களுடைய உரிமைகட்கு ஆதரவு, பிற்படுத்தப்பட்ட சமூகப்பிரிவினருக்குச் சமத்துவ அடிப்படையிலான வாய்ப்புக்கள், உற்பத்திச் சக்திகட்கு ஊக்குவிப்பு என்றவாறான கருத்துக்கள் இந்திய இடதுசாரி வட்டாரங்களில் வரவேற்கப்பட்டாலும் காங்கிரஸ் ஆட்சி பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கையைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளது பற்றிப் பாராளுமன்ற இடதுசாரிகள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். உண்மையில் இந்தியாவை உலகமயமாக்கல் என்ற நீர்ச்சுழலுக்குள் இழுத்துச் சென்ற பெருமை முன்னைய காங்கிரஸ் ஆட்சி ஒன்றுக்கே உரியது. அன்று நரசிம்மராவ் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த மன்மோகன் சிங் இப்போது பிரதமராகியுள்ளார். அவரது நிலைப்பாட்டில் சிறிதளவு மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியக் கிராமிய பொருளாதாரச் சீரழிவுக்கும் இந்தியாவின் சிறுகைத்தொழில்களது நலிவுக்கும் உலகமயமாதலுடன் இணங்கிப் போகும் பொருளாதாரக் கொள்கையே வழிவகுத்தது. அதன் தீமைகளை எடுத்துச் சொன்னவர்களையெல்லாம் புறக்கணித்துத் தான் 1992ல் காங்கிரஸ் ஆட்சி பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது. அதைக் கைவிடாமல் 'மனித முகத்துடனான' பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பற்றிப் பேசுவது இந்தியாவின் உழைக்கும் மக்களுக்கும் அவர்களைச் சுரண்டி ஏய்க்கும் பெரிய முதலீட்டாளர்கட்குமிடையே சமரசங்களைக் காண முடியும் என்கிறவிதமான ஒரு மயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.




எனவே, பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடர்வது என்ற கொள்கையைக் கைவிடாமல் இந்தியாவின் பாதிக்கப்பட்ட கிராமியப் பொருளாதார மீட்சி இயலப் போவதில்லை. பாரதிய ஜனதா கட்சிக்கும் காங்கிரஸுக்கும் உள்ள வேறுபாடு மதவாத அரசியல் மட்டுமே என்ற நிலை ஏற்படுமானால், மதவாத அரசியல் முற்றாக முறியடிக்கப்படும் வரை, பாரதிய ஜனதா கட்சி அடுத்த ஐந்தாண்டுகளுள் மீளவும் பெரிய அரசியல் சக்தியாகத் தலை தூக்க முடியும். அது மட்டுமில்லாமல், காங்கிரஸின் பொருளாதாரக் கொள்கைகள் மக்களது வாழ்நிலையில் குறிப்பிடத் தக்க விதமான முன்னேற்றத்தைக் கொண்டு வரத் தவறினால், பாரதிய ஜனதாகட்சி அதன் விளைவான அதிருப்தியின் அடிப்படையில், மதவெறியைக் கிளறி விடலாம்.

ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட சாதியினரிடையிலும் இந்து அடையாளம் பற்றிய மயக்கத்தை ஊட்டி முஸ்லிம் விரோத அரசியலில் மட்டுமன்றி வன்முறையிலும் 'தலித்' மக்களை ஈடுபடுத்துவதில் பாரதிய ஜனதா கணிசமான வெற்றி கண்டுள்ளது. குஜராத் மதவெறிக் கொலைத் தாண்டவத்தில் தலித்துக்களது பங்கைப் பற்றி தலித்திய வாதிகள் எந்தவிதமான விளக்கத்தையும் தர இயலாது தவித்ததை நாம் இன்னும் மறக்கவில்லை.

பழங்குடியினரிடையிலும் அவர்களது வழிபாட்டு முறைகளை 'இந்து' வழிப்படுத்தும் நடைமுறை திட்டமிட்ட விதமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. எனவே, இந்து என்ற அடையாளத்தின் பேரில் சாதியமும் பார்ப்பனியமும் மிகக் கொடிய முறையில் ஒடுக்கி ஒதுக்கிய சமூகப் பிரிவுகளை இந்துத்துவ வாதிகள் மிகத் தந்திரமாகத் தமது அடியாட்களாக மாற்றி வருகிறார்கள்.

இவற்றுக்கு எதிரான மாற்று

தொடர்ச்சி 10ம் பக்கம்

# ஸ்டாலினைக் கண்டு அஞ்சுவோர் யார்?



இன்று கூட பல சரித்திரவியலாளரும் மற்றும் கம்யூனிச எதிரிகளும் ஸ்டாலின் காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட கூட்டுறவுப்பண்ணையமைப்பு பொருளாதார திட்டங்கள் ஆகியவற்றை ஸ்டாலினிச சர்வாதிகாரத்திற்கு உதாரணமாக குறிப்பிடுவர். இவை சோஷலிச கட்டுமானங்கள் என்பதை பலர் புரிந்து கொள்வதில்லை. கிராமங்களில் இருந்த நிலவுடமையாளர்களையும் விவசாய கூலித்தொழிலாளர்களையும் சமமாக ஒன்றாக வேலை செய்ய வைப்பதென்பது இலகுவில் நடக்கக்கூடிய காரியமல்ல. தமது கால்நடைகளை பிற விவசாயிகளுடன் பங்கு போடுவதை விரும்பாத பணக்கார விவசாயிகள் தமது கால்நடைகளைத் தாமே கொன்றனர். தமது பண்ணைகளுக்கு போட்டியாக வந்த கூட்டுறவுப் பண்ணைகளின் தானியக்களஞ்சியங்களை தீயிட்டனர். இவ்வாறு கிளர்ச்சி செய்த நிலவுடமையாளரையும் பணக் கார விவசாயிகளையும் மட்டுமே சிறை முகாம்களுக்கு அனுப்பும் படி ஸ்டாலின் உத்தரவிட்டார். அப்போது நிலவிய பஞ்சத்திற்கு இந்த பணக்கார விவசாயிகளின் கிளர்ச்சியும் ஒரு காரணம். இன்றும் கூட எத்தனையோ நாடுகளில் அரசாங்கம் கொண்டுவரும் சாதாரண நிலச் சீர்திருத்தங்களுக்கே நிலவுடமையாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதை பார்க்கலாம்.

### ஐரோப்பாவிலிருந்து ஆசியன் எழுதுவது

நிலைமை இவ்வாறிருக்க ரஷ்யாவில் அன்று குலாக்குகள் என அழைக்கப்பட்ட பணக்கார விவசாயிகளை அப்படியே விட்டு விடும்படி ட்ரொட்ஸ்கி புக்காரின் போன்றோர் கம்யூனிஸிட்கட்சிக்குள் வாதிட்டனர். இந்தப் பணக்கார விவசாயிகளில் பலர் லெனின் காலத்தில் கொண்டு வரப்பட்ட 'புதிய பொருளாதாரத் திட்ட' காலத்தில் வளர்ந்தவர்கள் என்பது உண்மை தான். ஆனால் அப்போது போர் அழிவுகளால் பாதிக்கப்பட்டஒரு நாட்டில் நிலவிய குழப்பமான சூழ்நிலையில் தற்காலிக தீர்வாகவே இந்த புதிய பொருளா தாரத் திட்டம் கொண்டு வரப்பட்டது. சரியான தருணத்தில் சோஷலிச பொருளாதாரத்தை லெனின் கொண்டுவர நினைத்த போதும் புரட்சிக்குப் பின் சிறிது காலமே லெனின் உயிர்வாழ்ந்ததால் அது அவரால் செய்ய முடியாமல் போனது. அந்த வாய்ப்பு ஸ்டாலினுக்கு கிடைத்தது. அதற்கிடையில் 'கிரா்மப்புற முதலாளிகள்' என்ற பெயரெடுத்திருந்த பணக்கார விவசாயிகள் ஊழல் பேர்வழிகளாக இருந்ததுடன் ஒரே நாளில் தமது வருமானத்தை இழக்க விரும்பவில்லை இப்படியான ஒரு நிலைமையில் தான் ஸ்டாலினுக்கும்

தொடர்ச்சி 10ம் பக்கம்.

*"சுட்டி நீளும் ஆயிரம் விரல்களைப்*
*புருவம் நெரித்து நிதானமாய் எதிர்ப்பேன்*
*தலையை வணங்கிப் பணியுங்காளையாய்க்*
*குழந்தைகட்குப் பணிபல செய்வேன்"*

- லுஷுன் -

# மக்கள் கலை-இலக்கியத்திற்கான யெனான் கலை-இலக்கியக் கருத்தரங்கில் மாஓ சேதுங் ஆற்றிய உரைகளின் முக்கியத்துவம்

- சி. சிவசேகரம் -

கலை-இலக்கிய விடயங்களில் ஒரு மாக்ஸியவாதி முதலிற் தீர்க்க வேண்டிய பிரச்சனை அவற்றின் தேவை தொடர்பானது. குறிப்பாக, அது, "தமது இலக்கியமும் கலைகளும் யாருக்கானவை?" என்ற வினாப்பற்றியது. புரட்சிக்கு முந்திய ரஷ்யாவில், கலை லட்ச, கோடித் தொகையானவர்களான உழைக்கும் மக்களுக்கானது' என்று லெனின் முரணுக்கு இடமின்றிக் கூறியுள்ளார். மாக்ஸிய-லெனினியர்கள் அனைவரும் அந்த நிலைப்பாட்டை ஏற்கின்றனர். எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதிற் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. முக்கியமான பிரச்சினைகளின் தீர்வில் முதலாளியத் தாராளவாதம் எவ்வளவு கேடானதோ அதே அளவுக்கு லெனினிய நிலைப்பாடு பற்றிய வரட்டு வியாக்கியானங்களும் கேடானவையாகவே அமைந்துள்ளன.

புரட்சிகர அரசியலில் சோவியத் அனுபவத்தின் குருட்டுத்தனமான நீட்சியையொத்த போக்குக்கள் கலை-இலக்கியப் பரப்பிலும் காணப்பட்டுள்ளன. ஒரு மாக்ஸிய-லெனினியரிடம் எதிர்பார்க்கப்படுவது ஏதெனில் அவர் அருவமான எண்ணங்களினின்று தொடங்காது புறநிலையான உண்மைகளினின்று தொடங்க வேண்டும் என்பதாகும். இப்பண்பு காரணமாகவே, மாக்ஸிய-லெனினியக் கொள்கைக்கும் நடைமுறைக்கும் ஆக்கமான அரும்பெரும் பங்களிப்பை வழங்குவது மாஓ சேதுங்கிற்கு இயலுமாயிற்று. மக்கள் யுத்தம், வெகுசனப் பாதை என்பன பற்றிய அவரது கருத்தாக்கங்கள் புரட்சி செய்வது பற்றியும் புரட்சியைப் பாதுகாப்பது பற்றியுமான பிரச்சினைகட்கு மையமானவையாகியுள்ளன. அங்கிருந்து தவிர்க்கவியலாதவாறு எழும் 'மக்கள் கலை' என்ற விடயம் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது.

1942 மே மாதம் யெனான் கருத்தரங்கில் அவர் ஆற்றிய அறிமுக உரையும் இறுதித் தொகுப்புரையும் கலை-இலக்கியம் பற்றிய மாக்ஸிய நிலைப்பாட்டை, அதற்கு முன் எந்த மாக்ஸியச் சிந்தனையாளரும் செய்திராதளவு, தெளிவாக்கியுள்ளது. நவீன சீனக் கவிஞர்களின் வரிசையில் மாஓவுக்கு ஒரு முக்கிய இடமுண்டு என்பதுடன், சீனச் செவ்வியல் இலக்கியங்களிலுஞ் சமகால இலக்கியங்களிலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பதும் தெரிந்த விடயம். இக்கட்டுரையினது நோக்கம், யெனான் கருத்தரங்கில் மாஓ தெரிவித்த கருத்துக்களின் முக்கியத்துவத்தை 'மக்கள் கலை இலக்கியம்' என்ற கருத்தாக்கத்தையொட்டி விரிவுபடுத்துந் தேவை சார்ந்தது.

கலை-இலக்கியம் பற்றிய மாஓவின் நிலைப்பாடு முரணுக்கு இடமின்றி உள்ள அதேவேளை, விறைப்பானதோ வரட்டுத்தனமானதோ அல்ல. பண்பாட்டுத்துறைப் பாணியின் முக்கியத்துவத்தையும் அரசியற்பணி பண்பாட்டுத் துறைப்பணியுடன் கைகோத்துச் செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அடையாளங் காண்பதில் அவர் கருத்து முரண்பாடற்றிருந்தார். கலையின் நோக்கம் பற்றி அவரது மனதில் எதுவித ஐயமும் இருந்ததில்லை. "யாருக்காக?" என்ற வினாவிற்கான தனது விடையில், லெனினின் நிலைப்பாட்டை வலியுறுத்தியதுடன், ஒரு மாக்ஸியப் புரட்சிவாதியினது கலை பற்றிய பார்வையாக அவர் அடையாளங்கண்ட நிலைப்பாட்டினின்று எழுங் குறிப்பான பிரச்சினைகட்கும் அவர் கவனஞ் செலுத்தினார். யெனானில் அவர் சொல்வடிவந் (தந்த சிந்தனைகள்) தெளிவாயும் முரணாண விளக்கங்கட்கு இடமின்றியும் அமைந்தன. அத்துடன், அவரது அரசியற் கருத்து நிலைப்பாட்டுக்கமைய, வர்க்க சமுதாயத்தின் விளைபொருட்கள் என்ற வகையிற் கலைஞர்களதும் கலைப்படைப்புக்களதும் பங்கை வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் முடிவு செய்யும் விதமும் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்தது.

கலைப் படைப்புக்கள் யாரைக் கருத்திற் கொண்டு ஆக்கப்படுகின்றனவோ, அவர்கட்கும் ஆக்குகிற படைப்பாளிகட்குமிடையிலான உறவின் தன்மை பற்றி மாஓவின் பார்வை, புரட்சிகரப் போராட்டம் பற்றி அவர் விருத்தி செய்த வெகுஜனப் பாதையின் வழிப் பெறப்பட்டதே. கலை இலக்கியங்களின் வர்க்கப் பண்பு பற்றியும் சமுதாய மாற்றத்துக்கான போராட்டத்தில் அவற்றின் பங்கு தொடர்பாகவும் புரட்சிகர மாக்ஸிய நிலைப்பாட்டைத் தெளிவாக அடையாளங் கண்ட பின்னரே, அவர் வர்க்கப் போராட்ட மூலோபாயங்களைக் கலை-இலக்கியத் துறையிலான போராட்டங்களிற் கையாளத் தலைப்பட்டார்.

வர்க்க நிலைப்பாடு, மனப்பான்மை, கேட்போர், ஆய்வு என்ற அடிப்படைகளில் பிரச்சினைகளை அவர் அணுகினார். கீழ்வரும் அவரது கூற்றுக்கள், கலை-இலக்கியப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்கள் பற்றி அவரது கருத்து நிலையை விளங்கிக்கொள்ள உதவும்:

"வர்க்க நிலைப்பாடு பற்றிய பிரச்சினை: நமது நிலைப்பாடு பாட்டாளி வர்க்கத்தினதும் மக்களினதும் ஆகும். கம்யூனிஸ்ற் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இது கட்சியின் நிலைப்பாட்டையும் கட்சியின் மன உரத்தையும் கட்சியின் கொள்கையையுஞ் சார்ந்து நிற்பது என்று பொருட்படும்".

"மனப்பான்மை பற்றிய பிரச்சினை: .... யாருடன் அலுவல் பார்க்கிறோம் என்பதுதான் கேள்வி. மூன்று வகையான மனிதர்கள் உள்ளனர்: எதிரி; ஐக்கிய முன்னணியிலும் நமது மக்களிடையிலும் உள்ள நமது நேச சக்திகள்; இறுதியாக, வெகுஜனங்களும் அவர்களது முன்னணிப்படையும். இம்மூன்றில் ஒவ்வொன்றும் பற்றி நாம் வெவ்வேறு மனப்பான்மையோடு இருக்க வேண்டும்."

கம்யூனிஸ்ற்றுக்களது கலை-இலக்கியங்களின் வர்க்க நிலைப்பாடு பற்றி மாஓ ஐயமின்றி இருந்தபோதும், இவ்விடயத்திற் தெளிவில்லாத தோழர்கள் இருப்பது பற்றி எதுவித மயக்கமும் இல்லாதிருந்தார்:

"புரட்சிகர இலக்கியமும் கலையும் மக்களுக்காக அல்லாது சுரண்டற்காரர்கட்கும் ஒடுக்குமுறையாளர்கட்குமானவை என வாதிக்கிறவர்கள் சிலர் இன்னமும் உள்ளனர் என்று கருத இடமுண்டு."

மேற்குறிப்பிட்ட தெளிவின்மைக்கான காரணம், இலக்கியமுங் கலையும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்காவின் அடுத்த இலக்கு காஸ்ரோவும் கியூபாவும்

புளோறிடா மாநிலத்தில் வாக்குகளை எண்ணுவதில் குளறுபடிகளைச் செய்ததன் மூலம் ஜோர்ஜ் புஷ் வெள்ளைமாளிகை சென்றார். தேர்தலின் போது புஷ்சின் இளைய சகோதரனான ஜெப் புஷ்சின் நெருங்கிய சகபாடியான வலது சாரி, கியூப குடியேற்ற வாசியே புளோறிடா மாநிலத்தில் தேர்தலின் போது ஜனநாயகத்தை குழிதோண்டியதில் பெரும் பாத்திரம் வகித்தவன்.

இந்தப் பிரமுகர்கள் 40 வருடங் களாக கியூபாவில் ஆட்சிக்கவிழ்ப் பைச் செய்ய முயன்று தோல்வி கண்டவர்கள். ஈராக்கில் செய்வதறி யாது நிற்கும் நிலையில் எதிர்வரும் தேர்தலில் வெல்வதற்கு இனி என்ன செய்ய வேண்டுமென்று மண்டை யை உடைத்துக் கொண்டிருக் கின்றனர். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் கியூபா மீது ஈராக் பாணியிலான ஒரு தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டம் தீட்டுவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

கியூபா மீது புதிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக புளோறிடாவில் தேர்தல் பிரச்சாரத்தின் போது சென்ற மாதம் 6ம் திகதி ஊடகவிய லாளருக்கு புஷ் தெரிவித்தார். இந்த நடவடிக்கையின் நோக்கம் "கியூபா ஒரு சுதந்திர நாடாக வருவதற்கு உந்துதல் அளிப்பதே" யாகும். அதே தினத்தில் அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நோஜர் நொறீகா அரசாங்கத்தின் திட்டத்தை வெளியிட்டார். இந்த நொறீகா ஒரு கியூப வம்சாவழி. மிக மோசமான வலதுசாரி. கியூப அமெரிக்க தேசிய நிறுவனம் மியாமியின் அரசியலில் அழுங்கு பிடியைக் கொண்டுள்ள அமைப்புடன் இந்த நொறீகா நெருக்கமான தொடர்பு கொண் டுள்ளார். ராஜாங்க திணைக் களத்தின் அறிக்கையின் படியே அமெரிக்க அரசு செயற்படுவ தாகவும் தெரிவித்துள்ளார்.



இந்த அறிக்கையின்படி ஏனைய நாடுகளில் இருந்து ஆட்களைத் திரட்டி கியூபாவுக்கு அனுப்பி ஜனநாயகம் பற்றி பிரச்சாரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தச் செயல் கியூபாவின் உள்விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு எனவும் கியூபாவுக்குள் இயங்கும் கூலிப்படையினருக்கு நிதி உதவியும் இராணுவ உதவியும் வழங்கும் முயற்சியாகும் என கியூப அரசு கருதுகிறது.

இந்த அறிக்கையில் விதந்துரைக்கப் பட்ட விடயங்களுக்காக புஷ்நிர் வாகம் அடுத்த இரண்டு வருடத் திற்கு செலவிட 5 கோடி 90 இலட்சம் டொலர்களை ஒதுக்கி யுள்ளது. அமெரிக்காவினால் இயக்கப்படும் தொலைக்காட்சிக்கும், "றேடியோ மார்டி" க்கும் மேலதிக மாக ஒரு கோடி 80 இலட்சம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்ப் புரட்சி பிரச்சாரத்திற்காக புஷ் நிர்வாகம் சீ- 130 கொமான்டோ சோலோ தளத்தை பயன்படுத்த வுள்ளது. கியூப அரசாங்கத்தால் இந்த ஒலி, ஒளி பரப்புக்களை இடை மறிக்க முடியாது போகும் என புஷ் நிர்வாகம் நம்புகிறது. அந்த அறிக்கையில் குறிப்பிட்ட மற்றொரு விடயம், அமெரிக்காவில் வசிக்கும் கியூப நாட்டவர் அனுப்பும் பணத்தை மட்டுப்படுத்துவதாகும். இரத்த உரித்துடையவர்களுக்கு மட்டுமே இனிமேல் பணம் அனுப்ப முடியும். பணத்தைப் பெறுபவர் அரச அதிகாரி அல்லது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்றால் பணம் அனுப்ப அனுமதிக்கப்பட மாட்டாது.


கியூப - அமெரிக்கர்கள் இனிமேல் மூன்று வருடத்திற்கு ஒரு தடவையே கியூபா செல்ல அனுமதிக்கப்படுவர். தற்போது ஒரு வருடத்திற்கு ஒரு தடவை செல்ல முடியும். இப்படிச் செய்வதன் மூலம் கியூபாவுக்குள் செல்லும் பணத்தை முடக்குவதே புஷ் அரசின் நோக்கம்.

ஒசாமா பின் லேடனையும் அல்-குவேடாவையும் கண்காணிக்க நியமித்துள்ள ஏஜன்டுகளின் எண்ணிக்கைவிட ஐந்து மடங்கு நபர்களை அமெரிக்க அரசு நியமித்து கியூபாவுக்கு எதிரான அமெரிக்கத் தடையை மீறும் நடவடிக்கைகளை கண்காணிக்கிறது. அமெரிக்கா தற்சமயம் மெக்சிக்கோ ஜனாதிபதி வின்சென்ரே பொக்ஸ் மூலமாக கியூபாவை சீண்டுகிறது. மக்கள் செல்வாக்குப் பெற்ற மெச்சிக்கோ நகர முதல்வர் அன்டெஸ் மானுவல் லோபேஷ் அடுத்த மெக்சிக்கோ ஜனாதிபதியாக வரக் கூடியவர். அவரை அபகீர்த்தி செய்ய மெச்சிக்கோவின் தற்போதைய ஜனாதிபதி முயல்கிறார். மெச்சிக்கோ நகர முதல்வர் கியூபாவிடமிருந்து லஞ்சம் பெறுவதாக வதந்தி கிளப்பிவிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. ஆணைக்குழுவின் கூட்டத்தில் கியூபாவிற்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது. அமெரிக்க தீர்மானத்தை 22 நாடுகள் ஆதரித்தன. 21 நாடுகள் எதிர்த்தன. 10 நாடுகள் வாக்கெடுப் பில் கலந்து கொள்ளவில்லை.

கியூபாவிற்கு எதிராக வாக்களிக்கு மாறு கோரி இந்தியாவிலுள்ள அமெரிக்க ராஜதந்திரி பூட்டானின் அரசரைச் சந்தித்து வேண்டிக் கொண்டார்.

"அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டு திணிக்கப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு எதிராக - அதுவும் குறிப்பாக கியூபாவிற் கெதிராக - வாக்களிப்ப தென்பது தற்கொலைக்கொப் பானது.



பலம்மிக்க சுதந்திரமான நாடுகள் கூட தமது நாட்டின் அரசியல் பொருளாதார விளைவு களைக் கருத்திற் கொள்ள வேண்டி யுள்ளதென" கடந்த மேதினத்தில் தோழர் கஸ்ரோ கூறியிருந்தார்.

கியூபாவின் நிலப்பரப்பில் - குவாண்டானோமோ தளத்தில் நிலை கொண்டுள்ள அமெரிக்கா, அங்கு தடுத்து வைத்துள்ள அறுநூறு கைதிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு ஒரு பிரதிநிதியை அனுப்புவதற்குக் கூட அனுமதி வழங்கவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

கியூப மக்கள் தோழர் ஃபிடல் காஸ்ரோவினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு அமெரிக்காவின் எத்தகைய நேரடித் தாக்குதல் களையும் எதிர்கொள்ளத் தயாரா கவே இருக்கிறார்கள் என்பதே புரட்சிகரச் செய்தியாக உள்ளது.

## இந்திய....

9ம் பக்க தொடர்ச்சி

காங்கிரஸிடம் நிச்சயமாக இல்லை. நகரத்து நடுத்தர வர்க்க ஆதரவையும் உயர் வர்க்க நலன்களையுமே சார்ந்த காங்கிரஸின் வர்க்க அடிப்படை அதற்கு இடமளிக்காது. ஒடுக்கப்பட்ட மக்களது நலன் பேணுவதற்காக சாதியாற் பிற்படுத்தப் பட்டவர்கட்குச் சிறப்பான இட ஒதுக்கீட்டைப் பரிந்துரைத்த மண்டல் அறிக்கையை நடைமுறைப்படுத்த வி.பி.சிங் ஆட்சியால் இயலாமற் போனபோது, காங்கிரஸ் என்ன செய்தது? உயர் சாதியினருக்கு எதிராகப் போக அஞ்சி மௌனம் சாதித்தது.

பாராளுமன்ற இடதுசாரிகள் வெகுசன அரசியலிருந்து விலகிப் பலகாலம் கடந்துவிட்டது. அவர்களாலும் தேர்தலில் வரவு செலவுக்கணக்கு களைப் புறக்கணித்து அரசியல் நடத்த இயலாது. எனினும் கீழ்மட்டங் களிலும் வெகுசன அமைப்புக்களிலும் நல்ல சக்திகள் உள்ளன. அவர்களை எப்படி அணிதிரட்டி இந்துத்துவ அரசியலுக்கு எதிரான ஒரு மாற்று வழியை நிறுவுவது என்பது எளிதாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினையல்ல.

தலித்தியவாதிகளின் அரசியல் வறுமை அவர்களை தலித்துக்களின் நேச சக்திகளிடமிருந்து மேலும் தனிமைப்படுத்தி வருகிறது. இன்று தலித் தகமைகள் பாரதிய ஜனதா வுடனும் காங்கிரஸுடனும் பேரம் பேசியே பிழைப்பை நடத்துகின்றன. எனவே அவர்களிடமிருந்து எதையுமே எதிர்பார்க்க நியாயமில்லை.

திராவிட இயக்கங்கள் உட்பட்ட பிரதேசவாத தேசியவாதக் கட்சி களின் பார்ப்பனிய விரோதமும் மதவாத எதிர்ப்பும் அந்த அரசியல் எழுச்சி பெற்ற ஒவ்வொரு மாநிலத் திலும் தமது போலித் தனத்தை அம்பலப்படுத்தியது மட்டுமல்லாமல் மதவாத அரசியல் வேரூன்றித் தழைக்கவும் உதவியுள்ளன.

எனவே நம்பிக்கைச் சுடரெதுவும் பாராளுமன்ற, சட்டசபைச் சுவர்கள் நடுவே அதிகாரத்திற்குப் போட்டி யிடும் கட்சிகளுக்குள் இல்லை.

இவை ஒருபுறமிருக்க, இந்தியாவுக் கும் அமெரிக்காவுக்கும் பாரதிய ஜனதா ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நெருக்கத்தைக் காங்கிரஸ் ஆட்சி மேலும் வலுப்படுத்த உள்ளது. அமெரிக்காவின் இஸ்ரேல் சார்பு ஆக்கிரமிப்பு அரசியலைக் காங்கிரஸ் வெளிவெளியாக ஆதரிக்காது என்றாலும், எவ்வளவு தூரம் எதிர்த்து நிற்கும் என்பதில் நம்பிக்கைக்கு இடமில்லை.

இந்தியாவின் அயற்கொள்கை, இந்தியாவைத் தென்னாசியாவின் இராணுவ வல்லரசாகவும் பொருளா தார மேலாதிக்கச் சக்தியாகவும் மாற்றுவதை மையமாகக் கொண் டது. அக் கொள்கையில் அணு வளவு மாற்றமும் இராது. எனவே காஷ்மீர் விடயத்திலோ நேபாளத்தில் மன்னராட்சிக்குச் சாதகமாகக் குறுக்கிடுவதிலோ இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் தலையி டுவதிலோ எந்தவிதமான மாற்றத் தையும் எதிர்பார்க்க இடமில்லை.

மொத்தத்தில், காங்கிரஸ் பற்றிய மக்க ளின் எதிர்பார்ப்புக்களும் தோல்வி காரணமாக பாரதிய ஜனதா தலைமை கண்டுள்ள அதிர்ச்சியும் குறுகிய காலத்துக்கு ஒரு உறுதி யான ஆட்சிக்குத் துணை நிற்கும். நீண்டகாலத்தில், காங்கிரஸ் ஆட்சி அமெரிக்கத் துணையுடன் தென்னாசியாவின் எசமானாகும் போக்கையும் தனது மேலாதிக்கத் திட்டங்கட்கும் பெருமுதலாளிய நலன்கட்கும் வசதியாக உலக மயமாக்கலுக்கு ஏற்ற பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர் வதையும் கைவிடாத அளவில் காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதா கட்சிக்குமிடையே அதிக வேறு பாடற்ற ஒரு நிலையே உறுதிப்படும். இது இந்துத்துவ ஃபாஸிஸ வாதிகட்கே பயன்தரும். பரந்துபட்ட இந்திய மக்களுக்கு அல்ல.

மறுபுறம், இம்முறை இந்திய மக்கள் முன்னெப்போதையும் விடத்தெளி வாக இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். அதற்கும் மேலாக முதலாளிய உலகமய மாக்கலின் இந்திய முன்னோடிகளில் ஒருவரான சந்திரபாபு நாயுடுவை நிராகரித்துள்ளனர். பெரும்பாலான இந்திய மாநிலங்களில் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகவே மக்கள் வாக்களித் துள்ளனர். இது ஒரு சாதகமான விடயம்.

இந்தச் சாதகமான அம்சத்திலிருந்து பயன் பெறுவதானால், இந்த ஆதரவுத்தளம் வலுப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட வேண்டும். வெறும் பாராளுமன்ற ஆசனக் கணக்கின் அடிப்படையில் விரிவுபடுத்தும் முயற்சிகள் முடிவில் பிற்போக்குச் சக்திகட்கே உதவும் என்பது உலக அனுபவம்.

இந்தத் தளத்தை ஒரு வெகுசன அரசியல் தளமாக மக்களை வலிய தொரு அரசியல் சக்தியாகக் கட்டியெழுப்ப இந்தியாவின் புரட்சிகர, சக்திகள் முன்வர வேண்டிய காலம் இது. குறுங் குழு வாதத்தையும், தனிநபர் வாதத்தையும், சந்தர்ப்ப வாதத்தையும், தீவிரவாத அந்தங் களையும் சற்றே ஒதுக்கி வைத்து நிதானமாகச் சிந்திக்க வேண்டிய வேளை இது.

இந்தியாவின் நேர்மையான மாக்சிச லெனினிச சக்திகளும் ஏனைய இடதுசாரிகளும் சிந்தித்துச் செயற் படுவார்களா?

9ம் பக்க தொடர்ச்சி

## ஸ்டாலினைக் கண்டு

ட்றொட்ஸ்கி புகாரினுக்குமிடையில் பொருளாதார திட்டங்கள் குறித்த விவாதங்கள் நடந்தன. இந்த விவாதங்கள் மாதக்கணக்காக அல்ல வருடக்கணக்காக நடந்தன. இதைப்பற்றி ஸ்டாலினின் சுயசரிதை யை எழுதிய ஒரு (மேற்குலக சார்பான) எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'ரஷ்ய சார் மன்னன் முதலாவது பீட்டர் தனது காலத்தில் தொழிற்புரட்சியை கொண்டு வந்த போது தனது 'ட்றொட்ஸ்கிகளுடனும்' 'புகாரின் களுடனும்' வாதம் செய்து கொண்டி ருக்கவில்லை. அவர்களின் தலைகளைச் சீவி விட்டு தனது வேலையை கவனித்தான்.'

முப்பதுகளில் தொழில்மயமாக்கல் திட்டங்களின் பயனாக சோவியத் யூனியனின் பொருளாதாரம் அமெரிக்காவினதை விட மேலோங் கியிருந்ததும் ரூபிள் டொலரை விட மதிப்பு கூடியிருந்ததையும் மேற்குலக முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களே ஒப்புக்கொள்ளும் உண்மைகள். இத்தகைய அற்புதம் அன்று மேற்கு ஐரோப்பாவை விட மிகவும் பின்தங்கியிருந்த ரஷ்யாவில் நடக்கும் என்று அன்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. தொன்னூறு வீதம் படிப்பறிவற்றிருந்த மக்களுக்கு கல்வியறிவளித்தமை நாடு முழுவதுக்குமான மின்சாரம் வழங்கல் என்பன குறிப்பிடத்தக்க சாதனைகள். மனிதர்கள் வாழாத பனிப்பாலைவனமான சைபீரியாவில் புதிய நகரங்கள் தோன்றின. அங்கே கனிப்பொருள்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் வேலை செய்தோரின் வருமானம் மிக அதிகமாகவிருந்தது. பிறபகுதிகளில் இருந்து சைபீரியா சென்று சில வருடங்கள் உழைத்து விட்டு பெரும் பணத்துடனும் தங்கங்களுடனும் ஊர் திரும்பியோர் ஏராளம். இன்று முதலாளித்துவம் வந்த பின்பு இவையெல்லாம் பழங்கதைகளாகி விட்டன.

தொடரும்....

## கல்வியும் சமூகமும்

தொடர்ச்சி 10ம் பக்கம்..

தேசிய முதலாளியத் தலைமையின் நடத்தை மூலம் தெரியவரும். எத்தனை தமிழ், சிங்களத் தேசியத் தலைவர்கள் தங்களது பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் பயிற்றுவித்து அயல் நாடுகட்கு மேற்படிப்புக்காக அனுப்புவித்தார்கள் என்று கவனித்தால் ஒன்று விளங்கும். தாய்மொழிக் கல்வி மூலம் தமது பிள்ளைகட்கு உறுதியான எதிர்காலம் இருக்குமா என்ற ஐயம் இவர்கள் எல்லார் மனதிலும் இருந்தது.

இன்னொரு புறம் அமைச்சர் பதியுத்தின் மஹமூதின் ஒரு சலுகை இந்த மனோபாவத்தை மேலும் அப்பட்டமாகவே காட்டியது. பறங்கியர் போன்று ஆங்கிலத்தை வீட்டு மொழியாகக் கொண்டவர்களது குழந்தைகள் ஆங்கில மொழி மூலம் பாடசாலைகளில் கற்கலாம் என்ற சலுகை கலப்புத்திருமணம் செய்து கொண்ட (அதாவது வெவ்வேறு தாய் மொழிகளைக் கொண்ட) பெற்றோரது பிள்ளைகட்கும் முஸ்லீம்கட்கும் நீடிக்கப்பட்டது. இது வசதிபடைத்த முஸ்லிம்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அதே வேளை இவ்விதமான சலுகையை விரும்பக் கூடிய சிங்கள, தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

தேசிய பொருளாதாரம் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வேகத்தில் வளர்ச்சி பெறாத சூழ்நிலையில், அதிகமாக்கப்பட்ட கல்வி வாய்ப்புக்கள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் நடுவிலும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றோரிடையிலும் வேலையில்லாப் பிரச்சினையை மோசமாக்கியது. கல்வியின் நோக்கம் உத்தியோகமாக இருக்கிற ஒரு சமூகத்தில், இந்தவிதமான பிரச்சனைகள் மாணவர்களது குறிப்பான எதிர்பார்ப்புக்கட்கும் நாட்டில் கிடைக்கக் கூடிய வேலைவாய்ப்புக்கட்கும் இடையிலான பொருத்தமின்மை காரணமாக மேலும் உக்கிரமாகின்றன. நாட்டினுள் இல்லாத வேலைவாய்ப்பை நாட்டுக்கு வெளியே தேடும் போது ஆங்கிலக் கல்வியின் தேவை மேலும் அதிகமாகவே உணரப்படுகிறது.

எனவே, தாய்மொழிக் கல்வியின் தோல்வி எனக் கூறப்படுவது, ஒரு புறம் நாட்டில் உள்ள கல்வி வளங்கள் தாய் மொழிக் கல்விக்கு வேண்டிய அளவில் விருத்தி செய்யப்படாதது காரணமாகவும், அதைவிட முக்கியமாக நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் தோல்வியாலும் ஏற்பட்ட ஒரு விளைவே.

தமிழ் மாணவர்களது பிரச்சினை பேரினவாதப் பாரபட்சத்தால் மேலும் சிக்கலாகியது.

இவ்வாறான ஒரு சூழலில் பாடசாலைக் கல்வி தொடர்பாக எடுக்கப்பட்ட சில முக்கியமான முடிவுகளும் நாட்டின் கல்வித்துறையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. அவை பற்றிய வாதப் பிரதிவாதங்களை இன்னமும் கேட்கலாம். அவை பற்றி இனி ஒரு நேரத்திற் கவனிப்போம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மூடச் சடங்குகளுக்கு கொள்ளி வைப்பு

# ஒரு இறுதிப் பயணத்தின் அனுபவப் பகிர்வு

சமூக விடுதலைத் தளத்தில் மிகவும் அருமையான தளிர், கலைமதிக் கிராமத்தில் எழுந்திருக்கிறது. ஏற்கனவே பல வருடங்களாக சமூக விடுதலை நோக்கிய கடினப் பயணத்தில் ஒரு சில மைல் கற்களைத் தாண்டியுள்ள புத்தூர் மேற்கிலுள்ள கலைமதிக் கிராமத்தில் பிற்போக்குத்தனமான சடங்குக் கலாச்சாரத்துக்கு முற்போக்குள்ள குடும்பத் தினர் 'கொள்ளி வைத்துள்ளனர்' புத்தூர் கலைமதியைச் சேர்ந்த திருமதி இலட்சுமி கார்த்திகேசு என்ற முற்போக்குக் குணாம்ச முடைய தாயார் ஒருத்தியின் இறுதிச் சடங்குகள் அல்லது கிரியை கள் இன்றியே நிகழ்ந்தேறியுள்ளது.

"ஏழ்மையும் இல்லாமையும் சாதிய ஒடுக்கு முறையும் வாழ்வின் நியதி என வரையறுக்கப்பட்டு அடி நிலை வாழ்வுக்குள் அமுக்கப்பட்டு வந்த செம்மண் பிரதேச மக்கள் குடும்பங்களில் ஒன்றாகவே" இலட்சுமி அம்மாவின் குடும்பம், புத்தூர் மேற்கிலுள்ள கலைமதிக் கிராமத்தில் வாழ்ந்தது.

கணவன், பிள்ளைகள், தான் என்ற குடும்ப ஒழுங்குக்குள் யாழ்ப்பாணத்தின் பொதுப் பிற்போக்குக் கலாச்சாரம் அத்தனையையும் அனுபவித்தபடி அடக்கப்பட்டதனால் அடங்கியும் ஒடுக்கப்பட்டதனால் ஒடுங்கியும் வாழ்ந்த ஒரு தாயின் மைந்தர்கள் அரசியல் ரீதியில் பொதுவுடமைச் சித்தாந்தத்தை தமக்கான சமூக விடுதலைப் பாதையாக வரித்துக் கொண்டனர். அரசியல், சமூக பொருளாதாரப் புலங்களில் அவர்களது சிந்தனைகள் விரிவடைந்தன. அடிமைத் தளைகளை அறுத்து குடிமைத்தனங்களை ஒழிக்கும் வைராக்கியத்தை மாக்ஸீய அறிவியல் அவர்களுக்கு வழங்கியது.

உழைத்து உழைத்து உருக்கேறிய மேனியும் பொதுவுடமைச் சித்தாந்தத்தின் வைகறைக்காக அடிமைத்தனங்களையும் மூடத்தனங்களை யும் விரட்டியடிக்கும் வைராக்கியமும் அவர்களிடம் வந்து சேர்ந்தன. கிராமத்திலுள்ள இளைஞர்களிடம் சமூகமாற்றத்துக்கு உழைக்கக் கூடிய ஒவ்வொரு போராளிகளுக் கும் இருக்க வேண்டிய பொறுமை நிதானம், தியாகம் ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றைக் தமதாக்கிக் கொண்டு செயல்பட்டனர்.

இதனால் மக்களும் தெளிவும் விழிப்பும் அடைந்தனர். 18-03-1938இல் இப்பூமியில் பிறந்த இலட்சுமி அம்மா 07-05-2004 அன்று காலமாகினார். அவர் பெற்றெடுத்த பிள்ளைகளில் பொதுவுடமை அரசியல் சித்தாந்தம் ஏற்படுத்தி யிருந்த முற்போக்கான மாற்றம் கலைமதிக் கிராமத்தின் விழிப்படையும் சமூகவியல் குணாம்சத்துக்கு ஊற்றுக்கண் ஆகியது.

பழைய சடங்குகள், கிரியைகள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு, வாழ்விலும் செல்நெறியிலும் முற்போக்காக பயணித்த இலட்சுமி




அம்மாவின் இறுதிப்பயணமும் முற்போக்கான தாக அமைந்தது போலவே அவரது முதல் மாத நினைவுகூரல் தினத்திலும் சடங்குகள், கிரியைகளுக்கு அந்திரட்டி செய்யப்பட்டது. சடங்குகள், கிரியைகள் எதுவுமின்றி 16-06-2004 அன்று நிகழ்ந்த நினைவுகூரலில் முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலர் சங்கமித்து, கிராமத்தின் முன்னோக்கிய சமூக விடிவுக்கான பயணத்தை ஊக்கப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் கூடிய வகையில் கருத்துப் பகிர்வுகளை நிகழ்த்தினர். 'தாயின் நினைவாக' எனும் நூறுபக்க அறிவு நூல், இலட்சுமி அம்மாவின் நினைவு மலராக அந்நிகழ்வில் அவரது மனையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இறந்தவர்களை எண்ணி சடங்குகள் செய்யும் போலித் தாற்பரியங்களுக்கு அப்பால், இலட்சுமி அம்மாவின் வாழ்வியல் தடங்களை நினைவு கூர்ந்து சமூக மாற்றத்துக்கு பாடுபட்ட

**- வழுக்கியாறான் -**

அவரது மைந்தர்களையும் குடும்ப உறவினர்களையும், கட்சித் தோழர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஓரிடத்தில் ஒருங்கிணைத்து சமூக விடுதலைச் சிந்தனைகளை நூல் வெளியீட்டுடன் இணைத்து கொண்டமை ஒரு உன்னதமான நிகழ்வாகும்.

நினைவுமலர் அனைவரும் வாசித்தறிய வேண்டிய அறிவுப் பொக்கிஷமாக உள்ளது. அதற்கும் அப்பால் பேணப்பட வேண்டிய நூலாக ஒரு முற்போக்கான முன்னுதாரணமாக உணர்வுமிக்க சமூகவியல் மாணவர்கள் ஆர்வம் கொள்ள வேண்டிய ஒன்றாகவும் காணப்படுகின்றது. சடங்குகள், கிரியைகள்-சாவீடுகளிலும் அதனைத் தொடரும் நினைவு நாட்களிலும் இடம் எடுத்துக் கொள்வது அத்தனை மதப்பிரிவுகளிலும் விரவிக் கிடக்கும் ஒரு அம்சமாகும். சமூகப் பெறுமதியற்று பெரும் பொருளாதார வீண்விரயத்தை ஏற்படுத்தத் தக்க இச்சடங்குக் கலாச்சாரம் 'சுடலை ஞானத்தையும்' 'சுடலை ஞானிகளையும்' தான் எமது சமுதாயத்திலும் ஏனைய உலக சமூகங்களிலும் எஞ்ச விட்டுள்ளது. ஆனால் இலட்சுமி அம்மாவின் சாவீடும், முதல்மாத நினைவுநாளும் முற் போக்குச் சிந்தனைகளையும் அரிய பொதுமைச் சிந்தனைகள் நிறைந்த நூல் ஒன்றையும் நமக்கு வழங்கிச் சென்றுள்ளன. வாழ்விலும் சாவிலும் அந்த முற்போக்குத்தாய் அறிவுச் சுடராகவே இருந்தார்; தொடர்ந்தும் இருப்பார்.

அந்திரட்டி வீட்டில் வயிறார சோறு கறி பாயாசம் சாப்பிட்டுவிட்டு, கல் வெட்டுக்களை வாங்கிக் கொண்டு வீடு சென்று, அதை ஒரு மூலையில் தூக்கி எறிந்துவிட்டு, செல்லும் போலியான கழிவுக் கலாச்சாரமே யாழ்ப்பாணத்தின் பழைமைவாத, மடைமைவாத "கந்தபுராணக் கலாச்சாரம்" என்பதும் புத்தூர் மேற்கில் கலைமதிக் கிராமத்தில் போலியான அக்கழிவுக் கலாச்சாரத்துக்கு 'நெஞ்சாங்கட்டை' வைக்கப்பட்டதையும் காண முடிந்தது.

இலட்சுமித்தாயின் வாழ்க்கைக் குறிப்புகள், அவரது மைந்தன் கா. கதிர்காமநாதன் (செல்வம்) அவர்கள் எழுதியுள்ள 'எனது பொதுவாழ்விற்கு அம்மாவின் பங்களிப்பு' எனும் கட்டுரை, நகுலன் எழுதியுள்ள 'புதிய பாதையில்' எனும் கவிதை புதிய ஜனநாயகக் கட்சி பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மற்றும் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா ஆகியோரின் அஞ்சலி செய்தி, முற்போக்காளர்களை ஒன்றுதிரட்டி வளர்த்த கலைமதி சனசமூக நிலையத்தின் அஞ்சலி, கி. வாகீசனின் எமது கிராமம் கட்டுரை, கலாநிதி இ. முருகையன் அவர் களின் 'இரு வேறு உலகங்கள்' கட்டுரை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சி.சிவ சேகரம் அவர்களின் அறிவுக்கான போராட்டம் எனும் கட்டை, தாயகம் சஞ்சிகையில் பிரதம ஆசிரியர். க. தனிகாசலம் அவர்களின் 'சடங்கு களும் மூடநம்பிக்கையர்களும் எனும் கட்டுரை, சி.கா.செந்திவேல் அவர்களின் 'இளம் தலைமுறை யினரின் சிந்தனைக்கு' எனும் கட்டுரை சோ.தேவராஜா (சட்டத்தரணி) அவர்களின்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# கவிதையும் மரபும் பற்றிய ஒரு குறிப்பு

ஞாயிறு தினக்குரலில் வருகிற "பனுவல்" என்ற ஒரு பக்க நீள இலக்கியப் பகுதியில் மு. பொன்னம்பலம் "கவிதை என்றால் என்ன?" என்ற தலைப்பில் எழுதியது மே-ஜூன் மாதங்களில் அடுத்தடுத்து வந்த மூன்று இதழ்களிற் பிரசுர மானது. இக்கட்டுரையை வாசித்துக் கவிதை என்றால் என்ன என்று எவரும் எதையும் விளங்கிக் கொண்டிருக்க இயலாது. இக் கட்டுரையின் நோக்கம் கவிதை என்றால் என்ன என்று விளக்கு வதற்கு மாறாகக் கட்டுரை ஆசிரி யரை ஒரு கவிஞராக நிலைநிறுத்தும் நோக்கிலேயே எழுதப்பட்டிருந்தது.

இக்கட்டுரை எழுதியதற்கான நோக்கம் அவரது அண்மைய கவிதை நூலொன்றின் விமர்சனம் ஒன்று அவரது கவித்துவம் பற்றிக் கேள்வி எழுப்பியதாக இருக்கலாம். எனினும் ஈழத்தின் முதலாவது புதுக்கவிதையாளராகத் தன்னைப் பிரகடனப்படுத்தவும் மரபுக்கவிதையை நிராகரிக்கவும் அதில் அவர் முயன்றுள்ளார்.

தமிழிற் புதுக்கவிதையை ஈழத்தில் முதலில் அறிமுகப்படுத்தியவர் பிரமிள் என அறியப்படும் சிவராமலிங்கம் என்றாலும் அவர் பின்னர் இந்தியாவில் குடியேறிய காரணத்தால் பொன்னம்பலமே முதலாவது ஈழத்துப் புதுக்கவிராயர் என்று அவர் பெருமை கொண்டாட முயல்கிறார். எவரோ எங்கோ செய்ததை இங்கே முதலில் பிரதி பண்ணியவன் நானே என்று பெருமை கொண்டாடுவதில் எந்த மகிமையும் இல்லை என்பது அவருக்கு விளங்காமலிருக்கலாம்.

அது போகச் சில மாதங்கள் முன்புதான் எழுதிய ஏதோ ஒன்றைப் பார்த்தே மஹாகவி தனது காவியம் ஒன்றைப் புனைந்தார் என்று உரிமை கொண்டாடி அவையோரை நகைக்க வைத்த பெருமையும் அவருடையது. எவரும் தனது புகழைத் தானே பாட நேருவது போல பரிதாபம் கிடையாது. எப்போது ஒருவரது படைப்பாற்றலும் தன்னம் பிக்கையும் மங்குகிறதோ அப்போது அவர்கள் தங்களைப்பற்றி அளவு மீறிப் பெருமை பேசத் தொடங்கு கின்றனர். முதுமையின் இயலாமை யும் நல்லவர்களை இவ்வாறு நடந்து கொள்ளச் செய்கிறது. பொன்னம் பலம் முதுமையில் இன்னமும் அவ்வளவுக்கு மூப்பெய்தவில்லை என நினைக்கிறேன்.

மரபுக்கவிதை பற்றி அவரது குறிப்பு ஒன்று பற்றி மட்டும் இங்கு சொல்வது தகும் என நினைக்கிறேன். எதுகை மோனைக்காக வேண்டிப் பொருத்த மற்ற சொற்களைச் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு கம்பன், முருகையன், மஹாகவி ஆகியோர் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்த விவரங்களுக்குள் போகாமல், ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கவிதை எழுதும் எவரும் மட்டுமல்ல, கட்டுரை, கதை எழுதுகிறவர்கள் கூட, எப்போதுமே மிகப் பொருத்தமான சொல் ஏதென்று ஒவ்வொன்றாகத் தெரிந்து தமது ஆக்கங் கங்களைப் புனைவதில்லை. எதுகை மோனைக்காக எவரும் சொற்களைத் தெரிகிறது கவிதையைப் பலவீனப்படுத்துமோ அதே அளவுக்கு அல்லது அதிலும் மோசமாக 'சரியான' சொற்களையே தெரிந்து பயன்படுத்துவதும் கவிதையைப் பலவீனப்படுத்தும். ஒருவரது எழுத் தில் உள்ள தெளிவு பெருமளவும் சிந்தனையின் தெளிவாலேயே இயலுமாவது.

கவிதையில் எதுகை, மோனை, சீர், தளை என்ற விடயங்கள் வழிகாட்டலுக்கானவையே. மொழிக்குள் ளேயே உள்ள நெகிழ்வான இயல்பு கள் யாப்பு இலக்கணத்துக்கமைய எழுதுவதற்கு உதவுகின்றன. சந்த உணர்வு என்பது மொழிப்பயிற்சியுடன் சேர்ந்து விருத்தி பெறுவது. சந்த உணர்வற்ற ஒருவருக்கு அத்தகைய உணர்வுடைய ஒருவரது எழுத்துச் செயற்கையாகப் படலாம்.

புதுக் கவிதையில் பேச்சோசையின் சந்தத்தை உள்வாங்கி எழுதுவோர் வெகுசிலரே. பொன்னம்பலம் அவர்களுள் ஒருவரல்லர். சொற் களைக் கவனமாகத் தெரிந்து பயன்படுத்துவோரிடையிலும் அவரைக் குறிப்பிட்டுப் பேச இயலாது. மரபை விளங்காமல் அதை மாற்ற இயலாதது போக அதை முறையாக விமர்சிக்கவும் இயலாது.

- சிவன் -

## மாஓ ஆற்றிய... 9ம் பக்க தொடர்ச்சி

வர்க்கங் கடந்த விடயங்கள் என்ற பார்வையே. இத்தகைய பார்வைகளை ஆதரிப்போர் உண்மையில் முதலாளிய இலக்கியத்தையும் கலையையும் ஆதரித்துப் பாட்டாளிவர்க்க இலக்கியத்தையும் கலையையும் எதிர்ப்போராவர் என்று மாஓ சுட்டிக்காட்டுகிறார். கம்யூனிஸ்ற்றுக்களின் இலக்கியமும் கலையும் வெகுசனங்கட்கானதாக அமைய வேண்டும் என்ற அவரது நிலைப்பாடு, இலக்கியமும் கலையும் விடுதலைக்கு எவ்வளவு முக்கியமானவை என்று அறிந்ததன் அடிப்படையிலானது. அதன் விளைவாக, யப்பானிய எதிர்ப்பு விடுதலைப்போரின் ஒரு கட்டத்திற் சீனாவின் புதிய பண்பாட்டை,

"பாட்டாளி வர்க்கத்தின் கீழ் அமைந்ததான,
ஏகாதிபத்திய-விரோத, நிலவுடைமை-விரோத வெகுசனப்பண்பாடு"
என அவர் வரைவிலக்கணப்படுத்துகிறார்.

முக்கியமானது எதுவெனில், மாஓ முதலாளியத் தலைமையை நிராகரித்து அதற்கு மாறாக பாட்டாளி வர்க்கத் தலைமையை வற்புறுத்துகிறார்:

"சீனாவிலும் அயல் நாடுகளிலும் கடந்த யுகங்களில் வழிவழி வந்த வளமான முதுசங்களையும் நல்ல மரபுகளையும் நமதாக்கிக் கொள்ள வேண்டும். எனினும் நமது இலக்கு வெகுசனங்கட்குச் சேவையாற்றுவதாகவே இருக்க வேண்டும்."

கடந்த காலத்தினதும் சீனாவுக்கு அயலானவற்றினதும் இலக்கியக், கலை வடிவங்களைப் புதிய உள்ளடக்கத்துடன் மறுவார்ப்புச் செய்து மக்களுக்குப் பணியாற்றும் புரட்சிகர விடயங்களாக்கிப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் மாஓ நிலை தளம்பாமலிருந்துள்ளார்.

இலக்கியமும் கலையும் பற்றிய பாட்டாளி வர்க்க அணுகுமுறையினின்று விலகிச் செல்வது, "யாருக்காக?" என்ற பிரச்சினையைச் சரியாகத் தீர்க்கத் தவறுவது என்பன போன்ற போக்குகளாக வெளிப்படும் சிறுமுதலாளியச் சிந்தனையின் செல்வாக்குப் பற்றியும் அவர் எச்சரித்துள்ளார். சிறு முதலாளியச் சிந்தனை முற்போக்கான, புரட்சிகர எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் பல வகைகளிலும் பாதிக்கிறது. முதலாவதாகப், பல எழுத்தாளர்களும் கலைஞர்களும் சிறுமுதலாளி வர்க்கப் பி ன்னணியையுடையவர்களாவர். அவர்கள் தமது சிந்தனையை மறுவார்ப்புச் செய்ய வேண்டியுள்ளது. ஒருவர் இடதுசாரி இயக்கத்திலோ மாக்ஸியக்கட்சி ஒன்றிலோ சேரும்போது இது தானாகவே ஏற்படப் போவதில்லை. இதற்கு வெகுசன அரசியல் வேலையிற் பரிச்சயமும் பயிற்சியும் தேவை.

இரண்டாவதாக, முதலாளியச் சமுதாயத்திற், குறிப்பாகப் புரட்சிகர வெகுஜனப் போராட்டம் இல்லாதபோது, ஆக்கங்களிற் பெருவாரியானவை முதலாளிய ஆதிக்கத்திலுள்ள ஊடகங்கள் மீதே தங்கியிருக்கின்றன. இலக்கியங்களதும் கலைகளதும் ஆதரவாளர்களும் அவற்றின் வெளிப்பாட்டுக்கான ஊடகங்களும் ஊக்குவிக்கும் விழுமியங்கள் முதலாளிய முனைப்புடையவை. இலக்கியத்திலும் கலையிலும் பாட்டாளிவர்க்க முனைப்பு என்பது வெறுமனே பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தை ஏற்பது மட்டுமல்ல, ஒருவர் தனது உலகநோக்கை மாற்றிக் கொள்வதுமாகும்.

- வளரும் -

# கோள்மூட்டியார் சொல்லாத கதை

கோள்மூட்டியாருக்குப் பழைய பொய்களைப் பேசுவதில் பிரியம் அதிகம். அதனால் அவருக்குச் சில விஷயங்கள் வசதியாக மறந்து போய் விடுகின்றன. அவர் மறக்க விரும்புகிற ஒரு கதை இதோ: 1990களின் நடுவில் கோ.மூ. தமிழகத்தில் அஞ்ஞாத வாசம் செய்த காலத்தில், பேராசிரியர் சிவசேகரத்தின் நேர்காணல் ''காலச்சுவடு'' சஞ்சிகையில் வந்தது. அதில் 'அலை' என்ற சஞ்சிகை பற்றிய சில குறிப்புகளும் வந்திருந்தன. வெகுண்டெழுந்த கோள்மூட்டியார் தனது காரசார மான எதிர் வினையில், வழமை போல, தனது பொய்களையும் கலந்து எழுதினார். அது அதே சஞ்சிகையின் பின்னைய இதழில் வெளியான வேளை, பேராசிரியர் சிவசேகரம் தமிழ் நாட்டில் தங்கிருந்தார். அவர் நாகர்கோவிலில் "காலச்சுவடு" ஆசிரியர் கண்ணனைச் சந்தித்த போது, கண்ணனிடம் கோள் மூட்டியார் விடுத்த ஒரு உருக்கமான வேண்டுகோளைக் கண்ணன் தன்னிடம் தெரிவித்ததாகப் பேராசிரியர் சிவசேகரம் அண்மையில் நம்மிடம் கூறினார். தான் ஒரு விடுதலைப்புலி ஆதரவாளர் என்ற விடயத்தைச் சிவசேகரம் தனது எதிர்வினையில் வெளிப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுமாறு நமது மாவீரர் கோள்மூட்டியார் கேட்டுக் கொண்ட தாகவும் அதற்குத் தான் என்ன அந்தளவுக்கு இழிவான ஆளா என்று கண்ணனிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார். தான் விடுதலைப்புலி ஆதரவாளர் என்ற உண்மை இந்தியாவில் தெரிந்தால் தனக்கு ஆபத்து என்று அஞ்சிய தொடை நடுங்கியான கோள் மூட்டியார் இப்போது வளவுக்குள் நின்று கொண்டு வெள்நோக்கிக் குரைக்கிறார். தனக்குப் பிடிக்காத எல்லோரையும் புலி எதிர்ப்பாளர்கள், தமிழ்த் துரோகிகள் என்று கதை பண்ணுகிற கோள்மூட்டியார் தன்னைப் போலவே மற்றவர்களும் தருணமறிந்து கழுத்தறுப்பவர்கள் என்றும் மிரட்டல்களுக்கு நடுங்கு கிறார்கள் என்றும் நினைக்கிறது நியாயந்தான். ஆனாலும், அவருடைய புலுடா இன்னும் பல காலத்துக்கு எடுபட மாட்டாது. இந்த கோள்மூட்டியார் யார் என்பதை அறியாதிருப்போர் இதற்கு முந்திய புதியபூமி இதழ்களைப் பார்க்கவும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 யூலை 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 70

## புதிய-ஜனநாயக கட்சியின் 26வது ஆண்டு நினைவு

**யூலை 3ம் திகதி புதிய-ஜனநாயக கட்சியின் 26வது வருட நினைவு நாளாகும். இலங்கையின் பேரினவாத யுத்தமும் அதற்கெதிரான தேசிய இன விடுதலைப் போராட்டமும் ஏகாதிபத்திய உலகமயமாதலும் இடம் பெற்று வந்த காலப்பகுதியாகிய கடந்த 26வருடங்களில் புதிய ஜனநாயக கட்சி தனது மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை நிலைப்பாட்டில் கடும் சவால்கள் மத்தியில் பயணித்து வந்துள்ளமையை இவ்வேளை நினைவு கூருகின்றது.**

# புது டில்லிக்கு காவடி எடுக்கும் இலங்கை அரசியல் தலைவர்கள்

முன்பு புதுடில்லிக்கு காவடி எடுத்து தரிசன யாத்திரையை ஒழுங்காகச் சென்று வந்தவர்கள் தமிழ்த் தலைவர்கள். அவர்களின் எதிர்பார்ப்புகள் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் போன பின்பு அந்த இடத்தை சிங்கள பேரினவாத கட்சிகளின் தலைவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.' கடந்த மூன்று வருடங்களில் ரணில் விக்கிரமசிங்கா முதல் மிலிந்த மொரகொட வரை அடிக்கடி புதுடில்லிக்கு சென்று தமது திட்டங்கள் செயற்பாடுகளைப் பணிவாக எடுத்துரைத்து வந்தனர்.

அதனைப் பார்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் நாம் என்ன குறைச்சலா எனக் கேட்டு அதே புதுடில்லிக்கு தத்தமது காவடிகளைத் தூக்கி யாத்திரை சென்றும் வந்தனர். அனுரா பண்டார நாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீரா போன்றோர் உள்ளடங்குவர்.

இப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ்ச தலைமையில் ஒரு குழு புதுடில்லிக்கு செல்லவுள்ளது. அதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கா செல்லவுள்ளார் என அறிய முடிகிறது. விரைவில் ஜனாதிபதியும் புதிய ஆட்சியின் தலைவர்களைச் சந்திக்க உள்ளார் என்றும் கூறப்படுகிறது..

இதுவரை புதுடில்லிக்கு காவடி தூக்கிச் செல்லாதவர்கள் ஜே.வி.பியினரும் ஹெல உறுமயக்காரர்களும்தான். அவர்கள் அங்கு செல்லாது விட்டாலும் இங்குள்ள இந்தியத் தூதரகத்திற்கு அடிக்கடி சென்று வருகின்றதைக் காணமுடிகிறது. அவர்களும் விரைவில் புதுடில்லிக்கு செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

புலிகள் மீதான எதிர்ப்புணர்வுடன் இருந்து வரும் இந்திய ஆளும் வர்க்க சக்திகளுடன் அதிலும் குறிப்பாக இன்றைய காங்கிரஸ் ஆட்சியுடன் ஐக்கியம் கொள்வதில் பேரினவாதக் கட்சிகள் ஆர்வம் காட்டுவதில் வியப்பேதும் இருக்க முடியாது. இவர்களுக்கு இலங்கையின் இறமை சுதந்திரம் தன்னாதிக்கம் இந்திய பிராந்திய மேலாதிக்கத்தால் விழுங்கப்படுவது பற்றி அணுவளவும் அக்கறை கிடையாது. ஆனால் புலிகளால் இறைமை பறிபோகப் போகிறது என்பதே இப் பேரினவாதிகளது ஆழ்ந்த கவலையாகும்.

அமெரிக்கா வரட்டும் அதற்கு பாத பூஜை செய்வோம். இந்தியா வரட்டும் அதற்கு செங்கம்பளம் விரிப்போம். யப்பான் – மேற்கு நாடுகள் வரட்டும் கடைகள் விரிக்க தாராளம் இடம் கொடுப்போம். ஆனால் இந்நாட்டின் தேசிய இனமான தமிழர்களுக்கு மட்டும் சிறிய அளவிலான உரிமைகள் எதுவும் எக்காலத்திலும் வழங்க மாட்டோம் என்பது தான் சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்கங்களின் அடிப்படை நிலைப் பாடாகும். இதனை உறுதி செய்யவே புதுடில்லிக்கு அதன் தலைவர்கள் பலவகைக் காவடி களுடன் சென்று தரிசித்து வருகிறார்கள்.

இத்தகைய காவடி தூக்கிச் செல்லும் யாத்திரை வரிசையில் தமிழர் கூட்டமைப்பினரும் இடம் பெற இருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. இதில் சம்மந்தன் ஐயா, பிரேமச் சந்திரன் 'தோழர்' ஆகியோர் மும்மரம் காட்டினாலும் நினைத்தபடி செல்ல முடியாமல் சங்கடப்படுவதாகவும் அறிய முடிகிறது.

# தேர்தலில் முதலீடு

முன்பெல்லாம் தேர்தல் எதுவாகினும் கூட்டங்கள் கருத்தரங்குகள் துண்டுப் பிரசுரங்கள் மூலமான கொள்கை விளக்கங்களும் வேட்பாளர் விபரங்களும் இருக்கும். ஆனால் இப்போது அப்படி எதுவும் நடப்பது மிகமிகக் குறைவு. இப்போது ஐந்து நட்சத்திர மூன்று நட்சத்திர ஹொட்டல்களில் தான் கூட்டம் என்று கூறிச் சிலருடன் விடயங்கள் நடாத்தப்படுகின்றன. பங்கு கொள்வோருக்கு தாராளமாக உண்ணவும் குடிக்கவும் கிடைக்கின்றன. அதே வேளை பத்திரிகைகளில் முன்பக்க விளம்பரங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் தினமும் இடம் பெறுகின்றன. அவற்றுக்கான ஒரு நாட்கட்டணமே இருபத்தையாயிரம், ஐம்பதாயிரம் ரூபாவாகும். ஒரு மாத விளம்பரச் செலவே பல லட்சங்களாகிவிடுகின்றன.

இவ்வாறு தேர்தல் பிரசாரச் செலவிடும் கட்சிகள் எனப்பட்டவையும் அதன் தலைவர்களும் பணத்தை தண்ணீர் போல் அள்ளி இறைப்பது எதற்காக என்று ஒரு முறை சிந்திப்பது நல்லதாகும். இவ்வாறு தேர்தலில் நிற்கும் தலைவர்கள் அதி உயர் வர்த்தகத்தில் வியாபாரத்தில் இருந்து வருவோர். அவர்களது இந்தப் பக்கம் மக்கள் எல்லோருக்கும் தெரியாது. ஆனால் அவர்களுக்குத் தெரியும் எதில் எப்படி முதலீடு செய்தால் பின்பு முதல் வட்டி எல்லாம் சேர்த்து வாரிக் கொள்ளலாம் என்ற விடயமாகும். எனவே ஒரு சில ஆசனங்களோ அன்றி ஒரு ஆசனத்திற்காவது முதலீடு செய்தால் அதைப் போல் பன்மடங் கைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக தேசியம், மக்கள், சேவை, தனிப்பலம், பேரினவாதம் என்றெல்லாம் விளம்பரம் செய்வார்கள். சமகால விளம்பரங்களையும் பிரச்சாரங்களையும் அவதானித்தல் உண்மை எதுவெனப் புலப்படும்.

பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் பிரதேச சபைகளில் பதவி பெறுவோரில் பெரும்பாலானவர்கள் அதிலும் ஆளும் தரப்பில் அமர்ந்து கொண்டால் பணத்தைப் பல வழிகளிலும் சேகரித்துக் கொள்வார்கள். அண்மையில் முன்னாள் யூ.என்.பி. அமைச்சர் ரவி கருணாநாயக்கா மீது ஒன்ரறைக் கோடி ரூபா ஊழல் விவகாரம் எனக் குற்றம் சாட்டி கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தற்செயலானதல்ல. இவ்வாறே முன்பு இன்றைய அரசின் அமைச்சர் மங்கள சமரவீர மீது கிறடிட் கார்ட ஊழல் சுமத்தப்பட்டது. இவை யாவும் பாராளுமன்ற அரசியலில் சர்வ சாதாரணமாகி விட்டது. இதனையே ஜனநாயகம் என்றும் கூறப்படுகிறது.

## மூடச் சடங்குகள்

11ம் பக்க தொடர்ச்சி

மக்கள் பண்பாட்டுக் குழுக்களும் சமூக மாற்றத்திற்காக செயல்களும் எனும் கட்டுரை, இ.தம்பையா (சட்டத்தரணி) அவர்களின் 'பெண்களின் விடுதலைக்கான மார்க்கம்' எனும் கட்டுரை செல்வி. கண்மணி கதிர்காமு அவர்களின் 'பெண்களும் உடல் உழைப்பும் ' எனும் ஆக்கம் மருத்துவர் ச.சுப்பிரமணியம் அவர்கள் தரும் மருத்துவ ஆக்கம் முதலியன மலருக்கு கனதியூட்டுகின்றன.

அன்றைய முதல் மாத நினைவு நிகழ்வும் நினைவு நூல் வெளியீட்டில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும் பழமைவாதச் சிந்தனைகளும் செயற்பாடுகளும், ஊறிப்போன வடபுலச் சூழலில் புதிய சிந்தனை பொறிகள் எழுவதற்கான தளத்தை அடையாளம் காட்டி நின்றன. இத்தகைய புதிய பண்பாட்டுக் கோலங்கள் எதிர் நீச்சல் மூலம் மேன்மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியதாகும்.

## பேச்சுவார்த்தை

1ம் பக்க தொடர்ச்சி

யாகும். இதுதான் ஜே.வி.பி.யின் இடதுசாரி தொழிலாளர் சார்பு வேடம். கெட்டிக்காரன் புளுகும் ஏமாற்றுக்காரனின் பொய்களும் அதிக நாட்கள் செல்லுபடியாவதில்லை என்பதை மக்கள் காணவே செய்வார்கள்.

அடுத்து நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தி நிற்கும் பிரதான பிரச்சினை தேசிய இனப் பிரச்சினையின் தீர்வின்மையும் அதன் காரணமான யுத்தமுமாகும். கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலான காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் கீழான யுத்த நிறுத்தமும் நடைமுறையில் இருந்து வருகின்றன. அன்று யூ.என்.பி. ஆட்சியால் செய்யப்பட்ட இவற்றை வெவ்வேறு நிலைகளில் எதிர்த்து வந்தவர்கள் தான் இன்று அரசாங்கமாகி நிற்கிறார்கள். இருப்பினும் பேச்சுவார்த்தை தொடரப்படும் என்பதை தேர்தல் வாக்குறுதியாக சந்திரிகா அம்மையார் வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டையும் மீறி புலிகளுடன் பேசுவதை முன்நிறுத்தி நோர்வேயின் அனுசரணைக்கு அழைப்பு விடுத்து அதற்கான நடவடிக்கையில் இறங்கியவர் ஜனாதிபதி சந்திரிகா ஆவார். ஆனால் பேச்சுவார்த்தைக்கான நம்பகச் சூழல் குறைந்து கொண்டு வந்துள்ளதையே கடந்த இரண்டரை மாதங்களில் அவதானிக்க முடிந் துள்ளது. அதனால் பேச்சுவார்த்தை விடயம் நேர்மையாக முன்வைக்கப் பட்டதா அல்லது கடந்த அரசாங்கம் போன்று காலத்தைக் கடத்திச் செல்லும் ஒன்றாக கையாளப்பட்டதா என்ற பலத்த சந்தேகம் வளர்ந் துள்ளது.

பேச்சுவார்த்தையைத் தொடங்குவதா அல்லது யுத்தம் ஒன்றிற்குச் செல்வதா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடமே உள்ளது. புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதிலும் அவர்கள் கோரி நிற்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப் பை வழங்குவதிலும் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங் களையும் அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்த முடியும். அதற்கான உறுதியும் துணிவும் இருந்தால் தெற்கின் பேரினவாத சக்திகளையும் ஜே.வி.பி.யினரையும் சமாளிக்க முடியும். ஆனால் அம்மையாரிடம் பேரினவாத நிலைப்பாடு இருக்கும் போது எந்தளவிற்கு சாதகமான சூழல் ஏற்பட முடியும் என்பதே பிரச்சினையாகும். இவ்விடயத்தில் ரணிலும் சந்திரிகாவும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகவே இருந்து வருகின்றனர் என்பது தமிழ் மக்கள் தரப்பில் புரிந்து கொள்ளப்படுவது அவசியம்.

பேச்சுவார்த்தையை முன்னெடுத்தால் ஏற்கனவே டோக்கியோவில் தீர்மானிக்கப்பட்ட நாற்பத்தையாயிரம் கோடி ரூபா கிடைக்கும் என்பதால் பேச்சுவார்த்தைக்குச் செல்வதை அரசாங்கம் ஒப்புக்கொண்டு நிற்கிறது. அதேவேளை புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்டுள்ள உட்பிளவும், அமெரிக்கா, இந்தியா புலிகள் மீதான தடையை அகற்றா மையும் போன்றவற்றைச் சாதகமாகக் கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடக்கி புலிகள் இயக்கத்தை தோற்கடித்து விடலாம் என்ற நட்பாசையும் அரசாங்கத்திடம் காணப்படுகின்றது.

எனவே பேச்சுவார்த்தைக்கான நகர்வுகளை முன்னெடுப்பதில் ஆர்வமின்மையும் அதேவேளை படைபலத்தைப் பெருக்க அமெரிக்க இந்திய உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வத்தை அரசாங்கம் கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது. அமெரிக்காவிடம் இருந்து பாரிய யுத்தக் கப்பல் பெற்றமையும் அதன் சர்வதேச யுத்தப் பயிற்சியில் இலங்கையையும் ஒரு நாடாகக் கலந்துகொள்ள இருப்பதும் அமெரிக்காவிடமிருந்து புலிகள் இயக்கத்திற்கு எச்சரிக்கை கலந்த ஆலோசனைகள் தெரிவிக்கப்படுவதையும் சாதாரண மானவைகளாகக் கொள்ளக் கூடியவைகள் அல்ல. அதேவேளை இந்தியாவுடன் ஏற்கனவே வரைபில் இருக்கும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை புதிய அரசாங்கத்தில் நிறைவு செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றை நோக்கும்போது மீண்டும் ஒரு யுத்தத்திற்குச் சென்று தங்களதும் புலிகள் இயக்கத்தினதும் பலம் பலவீனத்தைப் பரீட்சிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. முன்பு சமாதானத்திற்கான யுத்தத் தை கதிர்காமரின் ஆலோசனை யுடன் ரத்வத்தையின் வழிகாட்டலில் நடாத்தி தோல்வி கண்ட அனுபவத் தையும் பட்டறிவையும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் மறந்து செயற்படுவது புத்திசாலித்தன மாகாது. அத்தகைய ஒரு யுத்தத்திற் குப்பின் பேச்சுவார்த்தைக்குச் செல்வதில் பயன் ஏதும் இல்லை. பாரிய அழிவுகளுக்குப் பின் பேச்சு வார்த்தை நடாத்தி என்ன பயன்?

எனவே தப்புக் கணக்குகளைப் போட்டு மீண்டும் ஒரு யுத்தம் தொடங்கப்படுவதை ஜனாதிபதியும் அரசாங்கமும் கைவிட வேண்டும். அதேவேளை பேச்சுவார்த்தையை புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையுடன் துணிவாகவும் உறுதியாகவும் முன்னெடுக்க வேண்டும். அதன் மூலம் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான ஆலோசனைகளைப் பயன் தரும் வகையில் பரிசீலிக்கவும் முடிவுகளுக்கு வரவும் முடியும். அது மட்டுமன்றி ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணசபை இயங்காத சூழலில் அதற்கு பதிலீடான ஒரு இடைக்கால சபையை உருவாக்க வும் முடியும்.

எனவே பேச்சுவார்த்தையா? அல்லது யுத்தமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு முழுவதும் இப்பொழுது ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

## யாழ். பல்கலை...

1ம் பக்க தொடர்ச்சி

நாயாக அலைய வேண்டியிருந்தது. மனித நேயம் மிக்க பீடாதிபதிகள் பேராசிரியர்கள் முயன்ற போதும் அதிகாரத்திமிர் கொண்ட சிலரால் மாணவர்களது பரிதாப நிலை கவனிக்கப்படவே இல்லை.

இது தான் யாழ் பல்கலைக் கழகத்தின் நிலை. இதில் ஒட்டு மொத்தமாக பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது நாம் கணை தொடுக்கவில்லை. அங்கே ஆணவத் திமிரும் அதிகார துஷ்பிரயோகமும் கொண்டவர்களால் யாழ் பல்கலைக் கழகத்தின் மீது அதிருப்தியும் வெறுப்பும் ஏற்படுகிறது. அங்கே பதவிப் போட்டி அதில் கழுத்தறுப்புக்கள், பழிவாங்கல்கள், அதிகாரச் சண்டை நியமனங்களில் சாதிய மேட்டுக்கு மனப்பாங்கு காட்டுதல் என நீண்டு செல்லும் பல நாளாந்தச் சம்பவங்களை உள்ளிருந்தே கேட்க முடிகிறது.

எனவே யாழ் பல்கலைக்கழக ஊழியர் போராட்டம் அவர்களது நியாயங்களை வற்புறுத்தி நிற்கிறது. அதேவேளை ஏனையோரின் உள்ளார்ந்த உணர்வுகளையும் பிரதிபலிப்பதாகவே காணப்படுகிறது. பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த சகல பிரிவினரின் நலன்களையும் உரிமைகளையும் கருத்திற் கொண்டு நிர்வாக உயர் மட்டம் செயல்பட வேண்டும் என்பதே எமது வற்புறுத்தலாகும். அப்படியானால் மட்டுமே யாழ் பல்கலைக்கழகத்தினால் சமூகத்தின் வளர்ச்சிக்கு சாதகமான பயனுள்ள பங்களிப்புகளை வழங்க முடியும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.